77	கோவிந்தசாமி, திரு. சி. ..	திருப்பூர்.
78	கோவிந்தசாமி, திரு. வி. சி. ..	காவேரிப்பட்டினம்.
79	கோவிந்தராஜன், திரு. சி. ..	நெல்லிக்குப்பம்.
80	கோவிந்தன், திரு. வெ. ..	பேரணாம்பட்டு (செ.வ.).
	''ச''	
81	சண்முகம், திரு. சி. ..	ஆலந்தூர்.
82	சந்திரசேகர், திரு. வி. பி. ..	பொள்ளாச்சி.
83	சந்திரசேகரன், டாக்டர் க. ..	ஆலங்குடி.
84	சம்சுதீன் என்கிற கதிரவன், திரு.	கடையநல்லூர்.
85	சம்பத், திரு. ஏ. ஜி. ..	முகையூர்.
86	சற்குணம், திருமதி எஸ்.பி. ..	இராதாகிருஷ்ணன் நகர்.
87	சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன், டாக்டர் மு. ..	இளையான்குடி.
88	சாதிக்பாட்சா, திரு. எஸ்.ஜே.	உடுமலைப்பேட்டை.
89	சாந்தகுமாரி, டாக்டர் த. ..	தாராபுரம் (செ.வ.).
90	சாமிநாதன், திரு. ஆர்.	திருமங்கலம்.
91	சிங்காரம், திரு. ஆர். ..	பேராவூரணி.
92	சிவசுப்பிரமணியன், திரு. சா.	ஆண்டிமடம்.
93	சிவலிங்கம், திரு. எஸ். ஆர். ..	பனைமரத்துப்பட்டி.
94	சிவலோகம், திரு. எஸ். ..	புவனகிரி.
95	சின்னசாமி, திரு. கே. ..	சேந்தமங்கலம் (ஆ.வா.)

தொடர் எண்ணும், உறுப்பினர் களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
"ச"—தொடர்ச்சி.	
96 சின்னசாமி, திரு. ரா. ..	தர்மபுரி.
97 சின்னசாமி, திரு. வி. கே. ..	பவானிசாகர்.
98 சீரங்கன், திரு. எம். ..	மேட்டூர்.
99 சீனிவாசன், திரு. பெ. ..	சிவகாசி.
100 சுந்தர், திரு. கே. ..	உத்திரமேரூர்.
101 சுந்தரதாஸ், திரு. மா. ..	விளவன்கோடு.
102 சுந்தரம், திரு. க. ..	பொன்னேரி (செ.வ.).
103 சுந்தரம், திரு. கே. ஆர். ..	குடியாத்தம்.
104 சுந்தரம், திரு. ப. ..	திருப்பத்தூர்.
105 சுந்தரராஜ், டாக்டர் எஸ். ..	பரமக்குடி (செ.வ.).
106 சுப்பிரமணிய பிள்ளை, திரு. கே.	கன்னியாகுமரி.
107 சுப்பிரமணியம், திரு. தூ.க.	சத்தியமங்கலம்.
108 சுப்பிரமணியன், திரு. அ.லெ.	திருநெல்வேலி.
109 சுப்பிரமணியன், திரு. வே. நா.	பெருந்துறை.
110 சுப்பு, திரு. ஏ. ..	ராசிபுரம்.
111 சுப்புலட்சுமி செகதீசன், திருமதி	ஈரோடு.
112 சுப்பையா, திரு. வ. ..	திருமயம்.
113 செங்குட்டுவன், திரு. ஏ. ..	மயிலாடுதுறை.
114 செங்கை சிவம், திரு. ..	பெரம்பூர் (செ.வ.).
115 செங்கோட்டையன், திரு. கே. ஏ. ..	கோபிசெட்டிப்பாளையம்.
116 சேட்டு, திரு. எம். ..	செங்கம் (செ.வ.).
117 சொக்கர், திரு. ரா. ..	விருதுநகர்.
118 சௌந்திரபாண்டியன், திரு. ந.	சமயநல்லூர் (செ.வ.).
"ட"	
119 டேனியல்ராஜ், திரு. எஸ். ..	ஸ்ரீவைகுண்டம்.
"த"	
120 தங்கபாண்டியன், திரு. வே. ..	அருப்புக்கோட்டை.
121 தங்கம், திரு. அ. ..	ஸ்ரீவில்லிபுத்தூர்.
122 தங்கராஜன், திரு. எஸ். ஏ. ..	திண்டுக்கல்.
123 தங்கராஜு, திரு. ஏ. ..	காட்டுமன்னார்கோயில் (செ.வ.).
124 தங்கவேல், திரு. எம். ..	முசிறி.
125 தங்கவேல், திரு. என். ..	குன்னூர் (செ.வ.).
126 தங்கவேலு, திரு. ச. ..	சங்கரநாயனார்கோவில் (செ.வ.).

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
"த"—தொடர்ச்சி.	
127 தம்புசாமி, திரு. வி. ..	திருவாரூர் (செ.வ.).
128 தமிழ்மணி, திரு. வீ. ..	செங்கல்பட்டு.
129 தயாளன், திரு. ஏ. சி. ..	ஆரணி.
130 தனபாலன், திரு. கே.ஆர்.ஜி.	சேலம்-1.
131 தனராஜ், திரு. வி. ..	வந்தவாசி (செ.வ.)
132 திருநாவுக்கரசு, திரு. எஸ். ..	அறந்தாங்கி.
133 திருமூர்த்தி, டாக்டர் து. ..	திருப்போரூர் (செ.வ.).
134 திருவேங்கடம், திரு. பெ.சு. ..	கலசப்பாக்கம்.
135 துரை சந்திரசேகரன், திரு. ..	திருவையாறு.
136 துரைசாமி, திரு. பி. ..	நாமக்கல் (செ.வ.).
137 துரைபாண்டி, திரு. பெ. ..	மானாமதுரை (செ.வ.).
138 துரைமுருகன், திரு. ..	காட்பாடி.
139 துரை ராமசாமி, திரு. ..	வெள்ளக்கோயில்.
140 தென்னரசு, திரு. எஸ். எஸ்.	திருப்பத்தூர்.
141 தேவராஜ், திரு. வி. எம்.	வேலூர்.
"ந"	
142 நஞ்சப்பன், திரு. ந. ..	பெண்ணாகரம்.
143 நடராசன், திரு. ஆ. ..	பேரூர்.
144 நடராசன், திரு. பொ. ..	திருத்தணி.
145 நடேச உடையார், திரு. எகால் மு. ..	ரிஷிவந்தியம்.
146 நடேசன், திரு. ஆர். ..	திருவட்டாறு.
147 நந்தகோபால கிருட்டிணன், டாக்டர் கோ.	பண்ருட்டி.
148 நாராயணன், திரு. ராம. ..	காரைக்குடி.
149 நூர்முகமது, திரு. செ. ..	பத்மநாபபுரம்.
150 நேரு, திரு. கே. என். ..	லால்குடி.
"ப"	
151 பஞ்சாட்சரம், திரு. ஆர். ..	மேல்மலையனூர்.
152 பழனிச்சாமி, திரு. டி. கே. ..	திருவொற்றியூர்.
153 பழனிச்சாமி, திரு. ஜி. ..	திருத்துறைப்பூண்டி (செ.வ.).
154 பழனிசாமி, திரு. க. ..	எடப்பாடி.
155 பழனிவேல், திரு. என். ..	பழனி (செ.வ.).
156 பன்னீர்செல்வம், திரு. மா. ..	சீர்காழி (செ.வ.).
157 பாண்டியன், திரு. பி. எச். ..	சேரன்மாதேவி.
158 பாப்பா உமாநாத், திருமதி	திருவரம்பூர்.
159 பாப்பா சுந்தரம், திரு. அ. ..	குளித்தலை.
160 பால்ராஜ், திரு. எஸ். ..	மதுரை-மத்திய

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும், (1)	தொகுதியின் பெயர். (2)
ப—தொடர்ச்சி	
161 பாலசுப்பிரமணியன், திரு. அ. வே. ..	திருநாவலூர்.
162 பாலசுப்பிரமணியன், திரு. எஸ். ஆர். ..	பொங்கலூர்
163 பாலையா, திரு. ஆ. ..	கொளச்சல்.
164 பிச்சாண்டி, திரு. கே. ..	திருவண்ணாமலை
165 பிச்சைமுத்து, திரு. ரெ. ..	பெரம்பலூர் (செ.வ.)
166 பீட்டர் ஆல்போன்ஸ், திரு. சா.	தென்காசி.
167 புகழேந்தி, திரு. இ. ..	கடலூர்
168 பூவராகன், திரு. கோ. ..	விருத்தாசலம்
169 பெரியசாமி, திரு. என். ..	தூத்துக்குடி
170 பெரியசாமி, திரு. ஐ. ..	ஆத்தூர்
171 பெரியசாமி, திரு. வே. ..	அந்தியூர் (செ.வ.)
172 பெரியண்ணன், திரு. அ. ..	புதுக்கோட்டை
173 பெருமாள், திரு. செ. ..	ஏற்காடு (ஆ.வா.)
174 பொன்முடி, திரு. டி. ..	தண்டராம்பட்டு
175 பொன்முடி என்கிற தெய்வசிகாமணி, டாக்டர் க.	விழுப்புரம்
176 பொன். முத்துராமலிங்கம் திரு.	மதுரை (மேற்கு)
177 பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ்.	நிலக்கோட்டை (செ.வ.)
178 பொன்னுபிள்ளை, திரு. ஜி. ..	தேனி
"ம"	
179 மகேந்திரன், திரு. ஆர். ..	நாட்ராம்பள்ளி
180 மணி, ஆச்சியூர் திரு. எம். ..	நாங்குநேரி
181 மணி, திரு. கே. ஏ. ..	கபிலர்மலை
182 மணி, திரு. கோ. சி. ..	கும்பகோணம்
183 மணிமாறன், திரு. மா. ..	நன்னிலம் (செ.வ.)
184 மதிவாணன், திரு. இரா. ..	ராயபுரம்
185 மலர்மன்னன், திரு. அ. ..	திருச்சிராப்பள்ளி-1.
186 மனோகரன், திரு. நாஞ்சில் கி.	திருவல்லிக்கேணி.
187 மனோகரன், திரு. ப. ..	சிவகங்கை
188 மாசிலாமணி, டாக்டர் சி. ரா.	திண்டிவனம்
189 மாசிலாமணி, திரு. தி. ரா. ..	பூந்தமல்லி
190 மாதப்பன், திரு. கொ. ..	பாலக்கோடு
191 மாரப்பன், திரு. பி. ..	காங்கேயம்
192 மாரிமுத்து, திரு. அ. ..	வானூர் (செ.வ.)
193 முகமது சித்திக், திரு. எம். ..	பூம்புகார்
194 முத்துசாமி, திரு. ப. ..	வேடசந்தூர்
195 முத்தையன், திரு. எம். ..	சங்கராபுரம்
196 முத்தையா, திரு. எம். ..	ஓட்டப்பிடாரம் (செ.வ).

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
ம—தொடர்ச்சி	
197 முருகேசன், திரு. பொ.	காஞ்சீபுரம்
198 முல்லைவேந்தன், திரு. வ.	மொரப்பூர்
199 முனிரத்தினம், திரு. ஆ. மு.	சோளிங்கர்
200 முனிரத்தினம், திரு. எஸ். ஆர்.	திருவள்ளூர்
201 மூக்கன், திரு. ஆர்.	உப்பிலியாபுரம் (ஆ.வா.)
202 மூக்கையா, திரு. எல்.	பெரியகுளம்
203 மோகன், திரு. இரா.	சிங்காநல்லூர்
204 மோசஸ், திரு. எம்.	நாகர்கோவில்
" ய "	
205 யசோதா செல்லப்பா, திருமதி	வலங்கைமான் (செ.வ.)
" ர "	
206 ரமணி, திரு. கே.	கோவை (கிழக்கு).
207 ரமணி நல்லதம்பி, திருமதி	ராதாபுரம்
208 ரவி அருணன், திரு.	அம்பாசமுத்திரம்
209 ராமச்சந்திர ரெட்டி, திரு. ந.	ஓசூர்
210 ராமச்சந்திரன், திரு. கே.	மன்னார்குடி
211 ராமச்சந்திரன், திரு. சி.	திருப்பரங்குன்றம்
212 ராமசாமி, திரு. மொஞ்சனூர் ப.	அரவக்குறிச்சி.
213 ராமசுப்பு, திரு. எஸ். எஸ்.	ஆலங்குளம்
214 ராஜு, திரு. எச். எம்.	உதகமண்டலம்
215 ராஜேந்திரன் திரு., எம். எஸ். கே.	இராமநாதபுரம்.
" ல "	
216 லட்சுமி, திருமதி பி.	வால்பாறை (செ.வ.)
" வ "	
217 வரதராசன், திரு. ஆர்.	சங்கரி (செ.வ.)
218 வரதராசன், திரு. உ. ரா.	வில்லிவாக்கம்
219 வல்லரசு, திரு. பி. என்.	உசிலம்பட்டி
220 விஜயராகவன், திரு. பொன்.	கிள்ளியூர்
221 விஜயேந்திரையா, திரு. டி. சி.	தளி
222 வீராசாமி, திரு. ஆற்காடு நா.	புரசைவாக்கம்
223 வீரையன், திரு. கோ.	நாகப்பட்டினம்
224 வெங்கடாசலம், திரு. பெ.	வீரபாண்டி
225 வெங்கடேஸ்வர தீட்சிதர், திரு. ஒய்.	ஸ்ரீரங்கம்
226 வெள்ளிங்கிரி, திரு. யூ. கே.	தொண்டாமுத்தூர்
227 வேணு, திரு. கி.	கும்மிடிப்பூண்டி
228 வைத்தியலிங்கம், திரு. மீ. அ.	தாம்பரம்

வரிசை எண்ணும், உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
" ஸ "	
229 ஸ்டாலின், திரு. மு. க. ..	ஆயிரம் விளக்கு
" ஜ "	
230 ஜெயலலிதா, செல்வி ஜெ.	போடிநாயக்கனூர்
" ஹ "	
231 ஹமீது இப்ராகிம், திரு. அ. மு.	கடலாடி
" ஸ்ரீ "	
232 ஸ்ரீதர், திரு. ஆர். எஸ். ..	சைதாப்பேட்டை
233 ஆஸ்கார் சி. நிக்லி, திரு. ..	நியமன உறுப்பினர்.

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்.

திரு. கு. அழகிரிசாமி,
தலைமை வழக்கறிஞர்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1989 பிப்ரவரி 14, செவ்வாய்க்கிழமை.

மாசி 3, விபவ—திருவள்ளுவர் ஆண்டு 2020.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடி மகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து"

தாம் கூறுகின்ற சொல்லை வெல்வதற்கு வேறொரு சொல் இல்லையென்பதை உறுதி செய்துகொண்டு அச்சொல்லைச் சொல்லுக.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(1) தகவல் கோரல்.

(அ) அமைச்சர்கள் மாறுவேடத்தில் சென்று குறைகளைக் கண்டறிதல்.

*திரு. என். கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு ஒரு பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன். மாண்புமிகு முதல்வர் கலைஞர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன், இந்த அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கிற மாண்புமிகு அமைச்சர்கள் குறிப்பாக, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், சென்னை நகர எம்.எல்.ஏக்களைக் கூப்பிட்டு உங்களுக்கு இருக்கிற குறைகள் என்னவென்று அவராகவே எங்களை அழைத்து, எங்கள் குறைகளைக் கேட்டு அந்தத் தீர்ப்பதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். "கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்" என்ற நிலைமை இல்லாமல், கேட்காமலேயே எங்களுக்கு இந்த நன்மையைச் செய்த அமைச்சர்களுக்கும், அமைச்சரவைக்கும் எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்

களும் திடீரென்று பரிசோதனைகளுக்குச் சென்று பல்வேறு விஷயங்களைக் கண்டுபிடித்துத் தக்க நடவடிக்கைகளை எடுத்து இருக்கின்றார்கள். இவர்கள் சுய உருவிலேயே செல்வதால் அதிகாரிகள் எச்சரிக்கையாகி அங்கேயுள்ள குறைகளை முன்னாலேயே தீர்த்து விடுகிறார்கள். எனவே இவர்கள் மாறுவேடத்திலே சென்று குறைகளைக் கண்டுபிடிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

* **திரு. சா. பீட்டர் அல்போன்ஸ்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாறுவேடத்திலே செல்வதைப் பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. பெண் வேடம் போடாமல் இருக்க வேண்டுமென்று மட்டும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

* **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு பெண் என்றால் அவ்வளவு வெறுப்பு எதற்காக? (சிரிப்பு).

2. உரிமைப் பிரச்சினை.

மின்துறை அமைச்சர் மீது.

மின்கட்டணப் பாக்கியைச் செலுத்த சலுகை வழங்குதல் பற்றிய கொள்கை அறிவிப்பை அவைக்கு வெளியே தெரிவித்தது குறித்து.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஓர் உரிமை மீறல் பற்றிய பிரச்சினையை உங்களிடத்திலே கொடுத்து இருந்தேன். அந்தப் பிரச்சினை என்னவாயிற்று என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என்னவென்று சுருக்கமாக உரைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையிலே இருக்கிற உறுப்பினர்கள் ஆறாம் தேதியன்று பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டு, உங்களுடைய விளக்கப்படி எட்டாம் தேதி பேரவைத் தலைவர் தேர்தல் நடைபெற்றதற்குப் பின்னால் 11 ஆம் தேதி ஆளுநர் அவர்களுடைய உரையோடு இந்தச் சட்டமன்றத் தொடர் துவங்கியதாகப் பொருள் ஆகிறது. சட்டமன்றத் தொடர் துவங்கியதற்குப் பின்னால் எந்தக் கொள்கை விளக்கப் பிரகடனமும்

களும் திடீரென்று பரிசோதனைகளுக்குச் சென்று பல்வேறு விஷயங்களைக் கண்டுபிடித்துத் தக்க நடவடிக்கைகளை எடுத்து இருக்கின்றார்கள். இவர்கள் சுய உருவிலேயே செல்வதால் அதிகாரிகள் எச்சரிக்கையாகி அங்கேயுள்ள குறைகளை முன்னாலேயே தீர்த்து விடுகிறார்கள். எனவே இவர்கள் மாறுவேடத்திலே சென்று குறைகளைக் கண்டுபிடிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

* **திரு. சா. பீட்டர் அல்போன்ஸ்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாறுவேடத்திலே செல்வதைப் பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. பெண் வேடம் போடாமல் இருக்க வேண்டுமென்று மட்டும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

* **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு பெண் என்றால் அவ்வளவு வெறுப்பு எதற்காக? (சிரிப்பு).

2. உரிமைப் பிரச்சினை.

மின்துறை அமைச்சர் மீது.

மின்கட்டணப் பாக்கியைச் செலுத்த சலுகை வழங்குதல் பற்றிய கொள்கை அறிவிப்பை அவைக்கு வெளியே தெரிவித்தது குறித்து.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஓர் உரிமை மீறல் பற்றிய பிரச்சினையை உங்களிடத்திலே கொடுத்து இருந்தேன். அந்தப் பிரச்சினை என்னவாயிற்று என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என்னவென்று சுருக்கமாக உரைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையிலே இருக்கிற உறுப்பினர்கள் ஆறாம் தேதியன்று பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டு, உங்களுடைய விளக்கப்படி எட்டாம் தேதி பேரவைத் தலைவர் தேர்தல் நடைபெற்றதற்குப் பின்னால் 11 ஆம் தேதி ஆளுநர் அவர்களுடைய உரையோடு இந்தச் சட்டமன்றத் தொடர் துவங்கியதாகப் பொருள் ஆகிறது. சட்டமன்றத் தொடர் துவங்கியதற்குப் பின்னால் எந்தக் கொள்கை விளக்கப் பிரகடனமும்

அவைக்கு வெளியே செய்யப்படக் கூடாது என்பது நாம் காப்பாற்றி வந்திருக்கிற மரபு. அந்த மரபினை மீறி மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அபராதமில்லாமல் மின்சாரக் கட்டணத்தின் பாக்கியைச் செலுத்த சலுகை வழங்கி அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இந்த அறிவிப்பு நிச்சயமாக இந்த அவையினுடைய, அவை உறுப்பினர்களுடைய உரிமையைப் பறிப்பதாகவும், நம்முடைய நிலையைக் குறைப்பதாகவும் இருப்பதாக நான் கருதுகிறேன். அதுமட்டுமல்ல, இந்தச் சலுகையைப் பற்றி ஆளுங்கட்சியினுடைய தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள், விவசாயிகள் மின்வாரியத்திற்குத் தாமதமாகக் கட்டிய தொகைக்கு விதிக்கப்பட்டிருக்கும் வட்டி அறவே ரத்து செய்யப்படும் என்று கூறியதோடு அல்லாமல் விவசாயிகளுடைய பிரதிநிதிகள் இந்தக் கோரிக்கையை பழைய ஆட்சியில் பலமுறை வைத்தும், இப்போது கவர்னரிடம் 3 முறை நேரில் சொல்லியும் 7 முறை தமிழ்நாட்டிற்கு வந்து சென்ற பிரதமரை 5 முறை சந்தித்துச் சொல்லியும் கவனிக்கவில்லை, இப்படி விவசாயிகளை அலைக்கழித்து, இப்போது தேர்தலுக்காக தனது அறிக்கையில் இதைச் சேர்த்திருப்பது ஏமாற்று வேலை என்பதை விவசாயிகள் உணருவார்கள் என்று நம்புகிறோம் என்று குறிப்பிடப்பட்டது. ஆக இப்படிக் கூறுவதன் மூலம் அது ஒரு கொள்கை விளக்கப் பிரகடனம் என்று சொல்லப்படலாம். இது போன்ற அறிவிப்புகள் சபை நடந்து கொண்டிருக்கும்போது சபைக்கு வெளியே செய்யப்படுவது சபை உரிமையை மீறிய செயலாகும். எனவே சபை உரிமையை மீறிய குற்றத்திற்காகச் சம்பந்தப்பட்ட அமைச்சர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குறித்து மாண்புமிகு அமைச்சரிடமிருந்து விளக்கம் பெற்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தச் சலுகைகள் பலதரப்பட்ட விவசாயிகளிடமிருந்து வந்த முறையீடுகளின் பேரில் அரசு வழங்கியது என்றும், தமக்கு இந்தப் பேரவையைப் புறக்கணிக்க வேண்டும் என்றோ அல்லது அதன் கண்ணியத்தைக் குறைக்க வேண்டுமென்றோ எள்ளளவும் நோக்கமில்லை என்றும் கூறியிருக்கிறார்.

I have no doubt that when the House is in session and if an important announcement is made outside, no question of breach of privilege is involved. It was a practice being followed in the House of Commons and also in other State Legislatures which has taken form

of a tradition that the Ministers consider it good etiquette to make important announcements in the House when it is in session before doing so elsewhere.

இந்த மரபை அமைச்சர்கள் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது எழுப்பப்பட்டுள்ள பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, உரிமை மீறல் பிரச்சினை ஏதுமில்லை என்று கூறி, நிறைவு செய்கிறேன்.

1. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) முதலமைச்சர் டெல்லியில் பிரதமரைச் சந்தித்துப் பேசியது குறித்த விவரங்கள்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று, இந்த நாட்டின் பிரதமரைச் சந்தித்து, மாநிலத்தின் நிலை பற்றிப் பேசியதோடு, உணவு தானிய ஒதுக்கீடு, நிதியுதவி ஆகியவற்றைக் கேட்டு வந்ததாகவும், மேலும் பல்வேறு திட்டங்கள் குறித்து மத்திய அரசிடம் வலியுறுத்தி வந்ததாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. எனவே அதுபற்றிய முழு விவரத்தை இந்த அவையின் கவனத்திற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையின் மூலமாகச் சமர்ப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியிலேயே அது குறித்து நிருபர்கள் கூட்டத்தில் விளக்கியிருக்கிறேன். அறிக்கையாகத் தரத் தேவையில்லை என்று கருதுகிறேன். கவர்னர் உரைக்குப் பதிலளிக்கிற நேரத்தில் அது பற்றிக் குறிப்பிடுகிறேன்.

(இ) ஏற்கெனவே தீர்ப்பளிக்கப்பெற்ற பிரச்சினை குறித்து

திரு. சா பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நேற்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீது ஓர் உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தேன். தாங்கள் அது குறித்துத் தீர்ப்புத் தந்தீர்கள். ஆனால், இன்று பத்திரிகைகளில் பார்க்கிறபோது உரிமைப் பிரச்சினை எழுப்பியவரும் அது என்ன பிரச்சினை என்று சொல்லவில்லை, அப்போது தீர்ப்புத் தந்த மாண்புமிகு சபாநாயகரும் அது என்ன பிரச்சினை என்று

of a tradition that the Ministers consider it good etiquette to make important announcements in the House when it is in session before doing so elsewhere.

இந்த மரபை அமைச்சர்கள் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது எழுப்பப்பட்டுள்ள பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, உரிமை மீறல் பிரச்சினை ஏதுமில்லை என்று கூறி, நிறைவு செய்கிறேன்.

1. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) முதலமைச்சர் டெல்லியில் பிரதமரைச் சந்தித்துப் பேசியது குறித்த விவரங்கள்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று, இந்த நாட்டின் பிரதமரைச் சந்தித்து, மாநிலத்தின் நிலை பற்றிப் பேசியதோடு, உணவு தானிய ஒதுக்கீடு, நிதியுதவி ஆகியவற்றைக் கேட்டு வந்ததாகவும், மேலும் பல்வேறு திட்டங்கள் குறித்து மத்திய அரசிடம் வலியுறுத்தி வந்ததாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. எனவே அதுபற்றிய முழு விவரத்தை இந்த அவையின் கவனத்திற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையின் மூலமாகச் சமர்ப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியிலேயே அது குறித்து நிருபர்கள் கூட்டத்தில் விளக்கியிருக்கிறேன். அறிக்கையாகத் தரத் தேவையில்லை என்று கருதுகிறேன். கவர்னர் உரைக்குப் பதிலளிக்கிற நேரத்தில் அது பற்றிக் குறிப்பிடுகிறேன்.

(இ) ஏற்கெனவே தீர்ப்பளிக்கப்பெற்ற பிரச்சினை குறித்து

திரு. சா பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நேற்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீது ஓர் உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தேன். தாங்கள் அது குறித்துத் தீர்ப்புத் தந்தீர்கள். ஆனால், இன்று பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள் உரிமைப் பிரச்சினை எழுப்பியவரும் அது என்ன பிரச்சினை என்று சொல்லவில்லை, அப்போது தீர்ப்புத் தந்த மாண்புமிகு சபாநாயகரும் அது என்ன பிரச்சினை என்று

[பேரவைத் தலைவர்] [1989 பிப்ரவரி 14

of a tradition that the Ministers consider it good etiquette to make important announcements in the House when it is in session before doing so elsewhere.

இந்த மரபை அமைச்சர்கள் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது எழுப்பப்பட்டுள்ள பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, உரிமை மீறல் பிரச்சினை ஏதுமில்லை என்று கூறி, நிறைவு செய்கிறேன்.

1. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) முதலமைச்சர் டெல்லியில் பிரதமரைச் சந்தித்துப் பேசியது குறித்த விவரங்கள்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று, இந்த நாட்டின் பிரதமரைச் சந்தித்து, மாநிலத்தின் நிலை பற்றிப் பேசியதோடு, உணவு தானிய ஒதுக்கீடு, நிதியுதவி ஆகியவற்றைக் கேட்டு வந்ததாகவும், மேலும் பல்வேறு திட்டங்கள் குறித்து மத்திய அரசிடம் வலியுறுத்தி வந்ததாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. எனவே அதுபற்றிய முழு விவரத்தை இந்த அவையின் கவனத்திற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையின் மூலமாகச் சமர்ப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியிலேயே அது குறித்து நிருபர்கள் கூட்டத்தில் விளக்கியிருக்கிறேன். அறிக்கையாகத் தரத் தேவையில்லை என்று கருதுகிறேன். கவர்னர் உரைக்குப் பதிலளிக்கிற நேரத்தில் அது பற்றிக் குறிப்பிடுகிறேன்.

(இ) ஏற்கெனவே தீர்ப்பளிக்கப்பெற்ற பிரச்சினை குறித்து

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நேற்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீது ஓர் உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தேன். தாங்கள் அது குறித்துத் தீர்ப்புத் தந்தீர்கள். ஆனால், இன்று பத்திரிகைகளில் பார்க்கிறபோது உரிமைப் பிரச்சினை எழுப்பியவரும் அது என்ன பிரச்சினை என்று சொல்லவில்லை, அப்போது தீர்ப்புத் தந்த மாண்புமிகு சபாநாயகரும் அது என்ன பிரச்சினை என்று

சொல்லவில்லை" என்று எழுதியிருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பை நான் இப்போது கேள்விகேட்டுப் பேச விரும்பவில்லை ஆனால் அது என்ன பிரச்சினை என்று சொல்லுவதற்கு என்னை அனுமதிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது நேற்றே முடிந்துபோன பிரச்சினை. அருள்கூர்ந்து என் அறைக்கு வந்து என்னைச் சந்தித்து கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுகிறேன்.

(ஆ) முதலமைச்சர் டெல்லியில் பிரதமரைச் சந்தித்துப்பேசியது குறித்த விவரங்கள்—தொடர்ச்சி.

* **திரு. கோ. பூவராகன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரையன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே ஆளுநர் உரையின்மீது பதிலளிக்கிற நேரத்திலே அதற்கெல்லாம் பதில் கூறுவதாகச் சொன்னார்கள். முதல்வர் அவர்கள் இந்த மன்றம் தொடங்கிய பிறகு முதன்முறையாக டெல்லிக்குச் சென்று பாரதப் பிரதமர், குடியரசுத் தலைவர், துணைத் தலைவர், மாண்புமிகு அமைச்சர்கள் ஆகியவர்களை எல்லாம் பார்த்து நம்முடைய தமிழ்நாட்டிற்கு வேண்டிய வளர்ச்சித் திட்டங்கள் பற்றியும், நெய்வேலி நிறுவனத்திடமிருந்து பங்கு அல்லது 'ராயல்டி' பெறுதல், இன்னும் இது போன்று உணவுப் பங்கீட்டில் அதிக ஒதுக்கீடு, மற்றும் இலங்கைப் பிரச்சினை போன்ற பல்வேறு பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அங்கே பத்திரிகை நிருபர்களிடத்தில் சொன்னதைத்தான் நாம் பார்க்க முடிந்தது. இருந்தாலும், இந்தப் புதிய ஆட்சி ஏற்பட்ட பிறகு, முதல்வரவர்கள் இதுவரையில் இல்லாத முன்னுதாரணமாக, முன்மாதிரியாக, இந்த அமைச்சரவை நடைபெற வேண்டுமென்று பல முயற்சிகளை எடுத்து வருகிறார்கள் அதைப் போல, இந்த மன்றம் நடக்கிற காலத்திலே, முதல்வரவர்கள் ஒரு முன்மாதிரியாக தனியாகத் தெளிவான ஓர் அறிக்கையை எல்லோரும் அறிந்துகொள்ளும் அளவுக்கு இந்த மன்றத்திலே வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

— (முற்பகல் 9-10)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவரவர்களே, நான் தொடக்கத்திலேயே, பதில் அளிக்கும் நேரத்திலே விவரங்கள் சொல்வதாகச் சொன்னேன். ஏனென்றால் அதிக

விவரங்கள் இல்லாத காரணத்தால்தான் அப்படிச் சொன்னேன். நம்முடைய கோரிக்கைகளை பிரதமர் அவர்களிடத்திலும், மற்றும் மத்திய அமைச்சர்களிடத்திலும் வைத்துள்ளேன். நாங்கள் நம்முடைய தமிழ்நாட்டுக்கு என்று கோருகின்ற திட்டங்கள், பல ஆண்டுகளாகக் கோருகின்ற திட்டங்கள் பற்றிய விளக்கக் குறிப்புகள் பிரதமர் அவர்களிடத்திலும், மற்றுமுள்ள அமைச்சர்களிடத்திலும் தரப்பட்டுள்ளன. அவைகளைக் கவனித்து ஆவன செய்வதாக அவர்கள் கூறியிருக்கிறார்கள். எனவே எவ்வளவு பெரிய அறிக்கை வைத்தாலும், அதனுடைய சுருக்கம் இதுதான்.

திரு. கோ. பூவராகன் : தலைவரவர்களே, நம்முடைய முதல்வரவர்கள் பத்திரிகையாளர்களுக்கெல்லாம் சொல்லும்போது, எவ்வாறு பேச்சு வார்த்தை இருந்தது என்று கேட்டபோது, சுமுகமாகவும், நம்பிக்கை ஊட்டுவதாகவும், எதிர்பார்ப்புகளுக்கு மேலே நன்றாக உள்ளது என்றும் சொன்னார்கள். நம்பிக்கை வைத்து, பல விஷயங்களிலே தமிழ்நாடு எதிர்பார்த்து, எதிர்பார்த்து, ஏமாந்த நிலை உண்டு. குறிப்பாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். நம்முடைய சென்னை நகரில் குடிநீர்ப் பிரச்சினைக்கு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தெளிவாக விளக்குவதற்காக மீண்டும் அதை எழுப்பக்கூடாது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

***திரு. பெ. சு. திருவேங்கடம்** : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் இந்தத் தீர்மானத்தின் மீது நான் தொடர்ந்து என்னுடைய கருத்துக்களைத் கூற விரும்புகிறேன். உள்ளாட்சி மன்றங்களுக்கு மேலும் அதிகாரம் வழங்கியதற்கும், அதனுடைய பதவிக் காலத்தை 3 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாக உயர்த்தியதற்கும் நான் இந்த அரசுக்கு, உங்கள் மூலமாக நன்றி தெரிவிக்கவும், அதனை வரவேற்கவும் கடமைப்பட்டிருக்கிறேன். சென்ற காலங்களிலே உள்ளாட்சி மன்றங்கள் எப்படிச் செயல்படுத்தப்பட்டன என்பதை உங்கள் மூலமாக இந்த மன்றத்திற்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். 1977-ல் ஊராட்சி ஒன்றியங்கள் கலைக்கப்பட்டன.

1989 பிப்ரவரி 14] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

1979-ல் ஊராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டன. பிறகு தேர்தல்கள் இல்லாமல், தனி அதிகாரிகளின்கீழ் அவை இருந்து வந்தன. சென்ற ஆட்சியின்போது, உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் அந்தத் தேர்தலைக் கொண்டு வருவேன் என்று கொண்டு வந்தார்கள். ஆனால் பேரறிஞர் அண்ணா ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, 3 ஆண்டுக் காலம் என்று இருந்ததை 5 ஆண்டுக் காலம் என்று உயர்த்தினார்கள். அதையும் மறந்து, 4 ஆண்டுக் காலம் என்று சட்டம் கொண்டு வந்தார்கள். பிறகு அதை 3 ஆண்டுகளாக மாற்றினார்கள்.

நேற்றுகூட அதுபற்றி இந்த அவையிலே விவாதிக்கப்பட்டது. பெருந்தலைவர்கள் என்று சொன்னால், அது பெருந்தலைவர் காமராஜ் அவர்களை இழிவுபடுத்துவதாக அமைந்துவிடுமே என்று விவாதிக்கப்பட்டது. நான் அப்படி நினைக்கவில்லை. காரணம் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் இந்திய அளவிலே, உலக அளவிலே பெருந்தலைவராக இருக்கிறார்கள். நாம் அதை மதிக்கிறோம். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான், ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கெல்லாம் தலைவராக இருக்கிறவர்கள் பெருந்தலைவர் என்கின்ற பட்டமே கொடுக்கப்பட்டது. ஆனாலும் அதையும் மாற்றினார்கள். அதை மட்டும் மாற்றவில்லை. உடனே ஊராட்சி ஒன்றியத்தினுடைய துணைப் பெருந் தலைவர் தேர்தலை ஊராட்சி ஒன்றியத் தலைவரைக் கொண்டு நடத்தப்பட வேண்டுமென்று சொல்லி, சில ஒன்றியங்களிலே பெருந்தலைவர் தலைமையில் அந்தத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. பெருந்தலைவர் அந்தத் தேர்தலுக்கு தலைமை வகிக்கக்கூடாது என்று ஆணை பிறப்பித்து, டி.டி.ஓ. தலைமை வகிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. பிறகு ஒன்றியக் குழுவினுடைய உறுப்பினர்கள் நியமனத்தை மாவட்ட ஆட்சித் தலைவரைக் கொண்டு நியமித்தார்கள். அதுவும் துணைப் பெருந் தலைவர் தேர்தலுக்கு முன்னதாக நியமிக்கப்பட வேண்டுமென்று ஆணை பிறப்பித்தார்கள். கிராமங்களிலே ஒரு பழமொழி சொல்லுவார்கள். "குரங்கு கையிலே பூமாலை" என்று. அதைப்போல ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் சென்ற காலங்களிலே நடத்தப்பட்டன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இன்றைய தினம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்களும் உள்ளாட்சித்துறை அமைச்சரவர்களும் பெருந்தலைவர்களை எல்லாம் அழைத்துப் பேசி, அந்த ஒன்றியங்கள் எப்படித் தமிழ் நாட்டினுடைய கிராம வளர்ச்சியிலே பங்கு

பெற வேண்டுமென்று விவாதித்து இருக்கிறார்கள். அது நல்ல முறையிலே எதிர்காலத்திலே செயல்பட வேண்டும் என்று நானும் இந்த நேரத்திலே இந்த அரசுக்கு உங்கள் மூலமாக சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதுபோன்று கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் விரைவாக நடத்தப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை நான் வர வேற்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 1976 ஆம் ஆண்டு, எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் இருந்த ஆட்சி கலைக்கப்பட்டதற்குப் பிறகு, பெரும்பாலான கூட்டுறவு ஸ்தாபனங்கள், ஜனநாயகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுறவு ஸ்தாபன அமைப்புகள் கலைக்கப்பட்டன. பிறகு தனி அதிகாரி கள் போடப்பட்டு அவர்கள் இன்று வரையிலே இருக்கிறார்கள். பிறகு ஒரு காலகட்டத்திலே 1976-லே கூட, அப்போது இருந்த அவசர கால நிலையின்போதுகூட, கிராமத்திலே இருந்த விவசாயச் சங்கங்கள் எல்லாம் அவைகளுடைய தலைவர்களுடைய தலைமை யிலே பணியாற்றி வந்தன. திடீரென்று ஒரு நாள், சென்ற அரசின்போது அந்தக் கிராமச் சங்கங்களை எல்லாம் கலைத்தார் கள். சரி, கலைத்த பிறகு என்ன செய்தார்கள் என்றால், ஒரு முன் உதாரணம், கூட்டுறவுச் சங்க அமைப்புகள் கலைக்கப்பட்டபோது கூட்டுறவுத்துறையிலே இருந்த அதிகாரிகளைத்தான், அந்தந்த அமைப்பினுடைய தரத்திற்கு ஏற்றவாறு தனி அதிகாரிகள் என்று போட்டிருக்கிறார்கள். உடனே அவர்கள் என்ன செய்தார்கள் என்றால் இந்த தனி அதிகாரிகளுக்குத் தனியாக ஒரு Interview நடத்தினார்களோ, நடத்தவில்லையோ எனக்குத் தெரியாது. படித்துவிட்டு வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கு நாங்கள் வேலை கொடுக்கிறோம் என்று சொல்லி அதிலே நியமித்தார்கள்.**

அந்தச் சங்கங்களுடைய செயலாளர்களாகப் பணியாற்று கின்றவர்கள் ஏற்கெனவே அதிகமானவர்கள். இவர்களுக்குள்ளாக நடைபெறுகின்ற போட்டியிலேதான் இன்றைய தினம் கிராமங் களிலே, நம்முடைய மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள்கூட சொன்னார்கள். ரேஷன் கடைகளில், அந்த உணவு விநியோகிக் கின்ற அந்த கடைகளில் எல்லாம் கிராமத்தில் உள்ள மக்கள் என்னென்ன அல்லல்கள் படுகின்றனர் என்பதை நாம் கண் கூடாகப் பார்த்திருக்கிறோம். இப்படிப்பட்ட ஒரு நிலை சென்ற ஆண்டு, சென்ற ஆட்சியிலே எடுக்கப்பட்டது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

* **திரு. எஸ். திருநாவுக்கரசு** : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, சென்ற ஆட்சியில் இடமாற்றங்கள், பதவி உயர்வுகள் தரப்பட்டவற்றில், முறைகேடுகளோ, தவறுகளோ நடந்திருக்கின்றன என்று அவர்கள் வேண்டுமானால், சுட்டிக்காட்டலாமே தவிர, அவற்றுக்கெல்லாம் பணம் வாங்கப்பட்டிருக்கிறது. லஞ்சம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதுபோல வார்த்தைகளைப் பயன்படுத்துவதை நீங்கள் அவைக் குறிப்பிலே அனுமதிப்பீர்களேயானால் இப்போதும் அதுபோல் இட மாற்றங்கள், பதவி உயர்வுகள் என்று வருகின்றபோது அதை நாங்கள் திருப்பிச் சொன்னால் அதையும் நீங்கள் அனுமதிக்க வேண்டியிருக்கும் என்பதைத் தங்கள் மூலமாக எடுத்துச்சொல்லி அவற்றை நீக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் நடந்தவற்றைத்தான் இங்கே இந்த அரசுக்கு நினைவுபடுத்தினேனே தவிர நடக்காத ஒன்றை நான் இட்டுக் கட்டவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது, குற்றச்சாட்டுகள் கூறும்போது ஏதாவது ஆதாரங்கள் இருந்தால் உடனடியாக அந்த ஆதாரங்களை வைத்துப் பேசுவது முறை. அது இல்லாமல், ஏதோ பொத்தாம் போக்கில் பணம் வாங்கப்பட்டிருக்கிறது என்பது போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்துவது நல்லது அல்ல. அது ஆளுங்கட்சிக்கும் சரி எதிர்க்கட்சிக்கும் சரி, எனவே ஆதாரங்கள் இல்லாமல் பேசக் கூடாது என்பதைத் தாங்களே இந்த அவையிலே பதவியேற்ற நேரத்திலே குறிப்பிட்டிருக்கின்றீர்கள். எனவே அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சொற்றொடர்களை மாத்திரம் நீக்குவது நல்லது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கங்களை ஏற்று அந்தச் சொற்றொடர்கள் மட்டும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த நியமனங்கள் செய்யப்பட்ட பிறகு, அந்தத்துறை வேறு ஒரு அமைச்சருக்கு மாற்றப்படுகிறது. மாற்றப்பட்டதற்கு

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பிறகு, வேலையை ஏற்கெனவே இருந்த அமைச்சர் அவர்களுடைய காலத்திலே பெற்றவர்கள், பெரும்பாலானவர்கள் உடனடியாக நீக்கப்பட்டார்கள். அந்த வேலையைப் பெற்றவர்கள், பிறகு நீக்கப்பட்டபோது எவ்வளவு அல்லல் பட்டார்கள் என்பதை என்னைப் போன்றவர்கள் அறிவோம். அப்படிப்பட்ட சீர்கேடுகள் நடைபெற்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்காலத்திலே விரைவாகத் தேர்தல் நடத்தி அந்தச் சீர்கேடுகளைக் களையவேண்டும். களைய முயற்சிக்கின்ற இந்த அரசுக்கு நாங்கள் உறுதுணையாக இருக்க விரும்புகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-20)

அடுத்து, சத்துணவுத் திட்டத்திலே பணியாற்றுகின்றவர்களை நிரந்தரமாக்குகின்ற கொள்கை அறிவிப்பினை இந்த அரசு ஆளுநர் உரையிலே அறிவித்திருப்பதை நான் வரவேற்கின்றேன். அதே நேரத்தில் இதுகுறித்து ஒன்றை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டுள்ளேன். சத்துணவுத் திட்டத்திலே பணியாற்றுகின்றவர்களை நிரந்தரம் ஆக்குகின்ற நிலையில் அவர்கள் மன நிறைவு அடைகின்ற அதே நேரத்தில் அவர்கள் ஏதாவது அரசியல் கட்சியை விரும்புகின்றவர்களாக இருக்கலாம். ஏற்கெனவே இருந்த அரசு பற்றி எல்லோருக்கும் தெரியும். பலர் சத்துணவு அமைப்பாளர்களாகப் பணியாற்றுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் சிலர் இன்றைக்கு ஒரு கட்சியின் சார்பில் பரவலாக ஒன்றியங்களிலே நிர்வாகிகளாக இருக்கிறார்கள் காரணம் தேர்தல் நடைபெற்றபோது அவர்கள் ஊராட்சி மன்றத் தேர்தலிலே போட்டியிட்டார்கள். தேர்தலுக்குப் பிறகு அவர்களில் நிறையப் பேர் உறுப்பினர்களாக வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை எல்லாம் அரசு நிரந்தரமாக்கினால் சத்துணவு அளிப்பதைப் பொறுத்தவரையில் ஒரு கட்சியின் சார்பில் அளிப்பது போன்ற ஒரு மாயை பொதுமக்கள் மத்தியிலே ஏற்பட்டு விடும். எதிர்காலத்திலே அப்படிப்பட்ட ஒரு நிலை இதனால் ஏற்பட்டுவிடும். ஆகவே அவர்களை எல்லாம் நிரந்தரமாக்கும்போது அரசு இதை எல்லாம் கவனத்திலே கொண்டு இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்திலே இந்த ஆண்டு பரவலாக மழை இல்லை. வறட்சி நம்மை மிரட்டிக்கொண்டிருக்கிறது. இப்பொழுதே பல்வேறு இடங்களில் குடிதண்ணீர் பிரச்சினை ஆரம்பமாகி விட்டது.

விவசாயிகளான எங்களுக்கு பல்வேறு இடங்களில் மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் நம்முடைய அரசு எதிர்காலத்திலே தமிழகத்திலுள்ள விவசாயிகளின் நலனுக்காக நல்ல நிவாரணத்தை ஏற்படுத்த வேண்டும்.

இந்த நேரத்தில் மாண்புமிகு தலைவர் அவர்கள் மூலமாக ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரசு நிர்வாக இயந்திரங்கள் எப்படிக் கெட்டிருக்கின்றன என்பதை இங்கே உதாரணத்துடன் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய கிராமமான பெரியகளப்பாடியிலே ஏரிக்கால்வாயினை நவீனப்படுத்தல் என்கிற பெயரால் 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் பொதுப்பணித் துறையினால் செயல்படுத்தப்பட்டது, திட்டம் முடிவுற்ற நிலையில், சம்பா பருவத்தின்போது தண்ணீர் தேவைபடுகிற நேரத்தில் ஏரியிலே தண்ணீர் இல்லை. அந்த நேரத்தில், சம்பா பருவத்தின்போது, சிறிய அளவில்தான் மழையும் பெய்தது. ஆக, அந்தக் கால்வாய் விவசாயிகளின் நிலத்திற்கு, பாசனத்திற்கு பயன்படுத்தப்படவில்லை. திட்டம் முடிவுற்ற நிலையில், செயல்படுத்த ஆரம்பிக்கும் நேரத்தில் ஏரியைத் திறந்தால் எந்தக் கால்வாயிலும் தண்ணீர் வரவில்லை. இப்படிப்பட்ட நிலையில் மோசமான முறையில் தமிழ்நாடு பூராவும் பரவலாகப் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் என் பகுதிக்கு வந்தால் அவரை அழைத்து இந்தக் கால்வாயை நான் காண்பிக்க முடியும்.

அடுத்து, அநேக பாடசாலைகளைப் பொறுத்தவரையில் சரிவரக் கட்டடங்கள் இல்லை. பாடசாலைகளில் போதிய ஆசிரியர்கள் இல்லை. இது குறித்து நான் ஒன்றை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எங்கள் பகுதியில் மல்லவாடியில் ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. அங்கே 125 மாணவர்களுக்கு ஒரே ஒரு ஆசிரியர்தான் என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட நிலையில் சென்ற காலங்களிலே அரசு நிர்வாக இயந்திரங்கள் கெட்டுப் போயிருக்கின்றன என்பதை எல்லோரும் நன்கு அறிவார்கள். எதிர் காலத்திலே இவைகளை எல்லாம் அரசு செயல்படுத்த வேண்டும். தமிழக மக்கள் இந்த அரசிடம் வைத்திருக்கிற நம்பிக்கையைக் காப்பாற்றுகின்ற வகையில் அரசு இவற்றை எல்லாம் செயல்படுத்தும் என்கிற நம்பிக்கையைத் தெரிவித்து, செயல்படுத்த வேண்டுமென்று கேட்டு வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி வணக்கம்.

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மரியாதைக்கும் மதிப்புக்கும் உரிய முதல்வர் அவர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையில் வளர்ச்சித் திட்டங்கள் பல கொள்கை விளக்கங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. சம நிலையில் நின்று, சமூக நல அடிப்படையில் புதிய அரசு எல்லாத் தரப்பு மக்களுக்கும், எல்லாப் பகுதி மக்களுக்கும், உரிய மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தும் முகத்தான் அறிவிப்புச் செய்திருப்பது என் மனதுக்கு மகழ்ச்சியையும், சந்தோசத்தையும் தருவதால் நான் இதனை வரவேற்கின்றேன். குறிப்பாக ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் சார்பாக நான் முழுமனதுடன் வரவேற்றுப் பாராட்டுகிறேன். இன்றைக்கு நான் நாட்டின் பொது மக்கள் நல பிரச்சினைகள் குறித்தும், என்னுடைய தொகுதியின் சில பொதுப் பிரச்சினைகள் குறித்தும் ஒரு சில வார்த்தைகளை இந்தப் பேரவையினுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

சத்துணவுத் திட்டம். அதிலே இருக்கின்ற பல குறைகளை அரசு நன்றாக ஆராய்ந்து அந்தச் சத்துணவுத் திட்டத்தைச் சிறந்த ஒரு சத்துணவுத் திட்டமாக அமைத்துத் தர வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். காமராஜருடைய ஆட்சிக் காலத்திலே அந்தச் சத்துணவுத் திட்டம் கொண்டு வரப்பட்டது. அந்தச் சத்துணவுத் திட்டத்திற்கு 'கேர்' என்ற நிறுவனம் அதிக நிதியுதவிகளை அளித்து, அந்த நிதியுதவியின் வாயிலாக அந்தச் சத்துணவுத் திட்டம் காமராஜருடைய ஆட்சிக் காலத்திலே நிறைவேற்றப்பட்டு, ஓரளவு ஊழல் இல்லாத மதிய உணவுத் திட்டமாகப் பள்ளிகளில் இயங்கி வந்த திட்டம். அப்பொழுது அந்த மதிய உணவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் அப்பள்ளியிலே இருக்கின்ற தலைமையாசிரியருடைய பொறுப்பிலேயே செயல்படுத்தப்பட்டது. மீண்டும் தமிழகத்திலே ஒவ்வொரு பள்ளியிலும் நடக்கின்ற சத்துணவுத் திட்டங்களையாவது அப்பள்ளிகளிலே இருக்கின்ற தலைமையாசிரியர்களுடைய மேற்பார்வையிலே செயல்படுத்த வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

1989 பிப்ரவரி 14] [திரு. எம். முகமது சித்திக்]

அதுமட்டுமல்லாமல், விவசாயிகளுடைய பிரச்சினைகளாகப் பல பிரச்சினைகள் என்னுடைய தொகுதியில் இருந்து வருகின்றன பல இன்னல்களுக்கு அப்பால் அவர்கள் விளைவிக்கின்ற பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை. அவர்கள் விளைவிக்கின்ற பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும். நெல், கரும்பு போன்றவைகளுக்கு அரசு நல்லதொரு விலையைக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகின்றேன். தற்போது, குவிண்டாலுக்கு 35 ரூபாயாகக் கொடுப்பதையாவது, அதாவது அந்த மானியத் தொகையையாவது ஐம்பது ரூபாயாக கொடுக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

எனது மாவட்டமான கீழ்த் தஞ்சை மாவட்டத்தை—முன்னாள் முதல்வரவர்கள், பல தலைவர்களுடைய பெயர்களை மாவட்டங்களுடைய பெயர்களாக ஆக்கினார்கள்—அந்த வகையில் கீழ்த் தஞ்சை மாவட்டத்தை, மறைந்த கண்ணியத்திற்குரிய தேசியத் தலைவர் காயிதே மில்லத் அவர்களுடைய மாவட்டம் என அறிவிக்கப்படும் என்று அறிவித்தும் அந்த மாவட்டத்தை அவர்கள் காலத்திலே காயிதே மில்லத்தினுடைய பெயரால் அறிவிக்கவில்லை. நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் அந்த கீழ்த் தஞ்சை மாவட்டத்தை மறைந்த தேசீயத் தலைவர் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் மாவட்டம் என அறிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மாநகராட்சித் தேர்தல் ஏப்ரல் மூன்றாவது வாரத்திலே நடைபெற வேண்டுமென்று அரசு அறிவித்திருக்கின்றது. ஏப்ரல் மூன்றாவது வாரம் முஸ்லீம்கள் நோன்பு நோற்கின்ற காலமாக இருப்பதால் அந்தத் தேர்தலை ஒரு மாதம் தள்ளி வைக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளுகின்றேன்.

விவசாயிகளுடைய அல்லல்களை நீக்குவதற்கு, காவிரி நதி நீர்ப் பங்கீட்டினை அரசு உடனடியாகத் தீர்த்து, அந்த நதி நீர் மூலமாக விவசாயிகளுக்குத் தண்ணீர் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

எனது தொகுதி காவிரியினுடைய கடைமடைப் பகுதியாக இருப்பதால் அங்கேயிருக்கின்ற பாசன வடிகால் வாய்க்கால்களும், கால்வாய்களும் மிகவும் சீரழிந்த நிலையிலே இருக்கின்றன. அங்கேயிருக்கின்ற பாசன வடிகால் கால்வாய்கள், அங்கே பல காடுகளும், புதர்களும் நிரம்பி, வருகின்ற தண்ணீர்கூட நிலங்

களுக்குப் பாய முடியாத சூழ்நிலையில் இருக்கின்றன. பாசனக் கால்வாய்களைச் சீரமைப்பதற்கு அரசு நல்ல திட்டத்தினை உருவாக்கி சீரமைப்பு ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தற்போது ஆற்றிலே தண்ணீர் வராத காரணத்தால் மின்சாரத்தையும், டீசல் என்ஜின்களையும் கொண்டு அங்கே விவசாயிகள் தற்பொழுது சாகுபடி செய்து வருகிறார்கள். விவசாயிகளுக்குத் தங்கு தடையின்றி தொடர்ந்து மின்சாரம் கிடைப்பதற்கும், விவசாயிகள் டீசலில் சாகுபடி செய்தால் அந்த டீசல் கிராமங்களில் விவசாயிகளுக்குச் சலுகையான விலையில் கிடைப்பதற்கும் அரசு ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

அந்த ஆயிலை வாங்குவதற்கு நகர்ப் புறங்களுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை விவசாயிகளுக்கு உள்ளது. கிராமங்களிலே கூட்டுறவு அங்காடிகள் மூலமாகவோ அல்லது அங்கேயிருக்கின்ற ' அமுதம் ' அங்காடி மூலமாகவோ கிராமங்களுக்குத் தேவையான விவசாயிகளின் ஆயில் என்ஜின்களுக்குத் தேவையான டீசலை வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

மருத்துவ வசதி என்பது எனது தொகுதியில் மிகக் குறைந்த அளவில் இருக்கின்றது. எனது தொகுதியில் மருத்துவ வசதியில் அவசரக் கால சிகிச்சை என்பதற்கு எந்த வசதியும் இல்லாதது ஒரு நீண்ட நாள் குறையாக இருக்கிறது. சுமார் 40, 50 கிலோ மீட்டர் சென்றால்தான் ஒரு உயிரைக் காப்பாற்ற செய்யக்கூடிய சூழ்நிலை எனது தொகுதியில் இருக்கின்றது. ஆகவே எனது தொகுதியில் உள்ள அரசு மருத்துவமனையை எல்லா நவீன வசதிகளுடன் கூடியதாக அமைத்துத் தர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-30)

பூம்புகார் தொகுதி தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கிறது. எந்த ஒரு பெரிய தொழிலும் பூம்புகார் தொகுதியில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பூம்புகாரில் மீன்பிடித் துறைமுகம் ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல்

அந்தப் பகுதியிலே நல்லபல தொழில் வளங்களை ஏற்படுத்த புதிய திட்டங்களை அரசு உருவாக்க ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் சாலைகள் எல்லாம் மேடு பள்ளமாகக் காட்சியளிக்கின்றன. நீண்டகாலமாக அந்தச் சாலைகள் செப்பனிடப்படவில்லை. தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக அங்கே சாலைகள் சில போடப்பட்டன. ஆனால் அந்தத் திட்டம் அங்கே சரியாக நடக்கவில்லை. அங்கே இருக்கிற தலைவர்கள் தங்களைத் தன்னிறைவு செய்து கொண்டார்களே தவிர மற்ற திட்டங்கள் சரியாக நடைபெறவில்லை. ஆகவே, அந்தச் சாலைகளைச் சீரமைத்து, நல்ல சாலைகளாக அமைத்து, புதிய பேருந்து வழித் தடங்களை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சாராயக் கடைகளைத் திறப்பதில்லை என்று இந்த அரசு முடிவு செய்திருப்பதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அருள்கூர்ந்து, கன்னிப் பேச்சில் குறுக்கிட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

4. ஒழுங்குப் பிரச்சினை

பேரவை மாடத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அமர்ந்திருப்பது குறித்து.

* **திரு. பி. வி. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறுக்கிட விரும்பவில்லை. ஒரு ஒழுங்குப் பிரச்சினையை மட்டும் எழுப்ப விரும்புகிறேன். இந்த மாமன்றத்திலே நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் வந்து அமர்ந்திருக்கிறார். சட்டமன்ற உறுப்பினர்கள் அமரக்கூடிய அந்த இடத்தில் வந்து மற்றவர் அமருவது கிடையாது. தற்போது அமர்ந்திருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர் எந்த விதிமுறையின் கீழ் இங்கே அமர்ந்திருக்கிறார் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் ஒரு இதழின் பிரதிநிதியாக வந்து அமர்ந்திருக்கிறாரே தவிர இந்தச் சட்டமன்ற நடவடிக்கைகளில் பங்கு கொள்வதற்காக வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

திரு. எம். முகமது சித்திக் : அடுத்து, ரேஷன் கடைகளிலே வாரத்தில் ஒரு நாள் மட்டும் அரிசி கொடுக்கிறார்கள் ; மற்ற நாட்களில் கொடுப்பதில்லை. கேட்டால் வாரத்திற்கு ஒருநாள் தான் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். ஏழை எளிய மக்கள், அவர்கள் கையில் பணம் இருக்கும்போதுதான் ரேஷன் கடைக்குப் போகிறார்கள். அப்படிச் செல்லும்போது அங்கே அரிசி வாங்க முடியாத நிலைமை ஏற்படுகிறது. ஆகையால் இந்த நடைமுறையை மாற்றி, விடுமுறை நாட்களைத் தவிர மற்ற வார நாட்களில் ரேஷன் கடைகளில் அரிசி கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்லாமல், ஒரு ரேஷன் கடையில் எத்தனை மூட்டை அரிசி இருப்பு இருக்கிறது, ஒரு நாளில் எத்தனை மூட்டை விற்பனை ஆனது, எவ்வளவு பாக்கி இருக்கிறது என்கின்ற விவரங்களை போர்டில் எழுதி வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஒவ்வொரு ரேஷன் கடையிலும் 'ஸ்டாக் போர்டு' வைத்து, அந்த போர்டிலே இப்படிப் பட்ட விவரங்களை எழுதி வைக்க ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும் என்ற யோசனையைத் தெரிவித்து, இந்த ஆளுநர் உரைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

* மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனைப்படி மார்ச் 1-ந்தேதி முதல் எல்லா ரேஷன் கடைகளிலும் 'ஸ்டாக் போர்டு' வைக்கப்பட்டு, கையிருப்பு விவரங்களை எழுதி வைக்க வேண்டுமென்று அரசாங்கம் ஏற்கனவே உத்தரவு பிறப்பித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. துரை ராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் பேசுகின்ற வாய்ப்பு கிடைத்ததற்காகத் தங்களுக்கும், வெள்ளக்கோயில் தொகுதி மக்களுக்கும் முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவின் சரித்திரத்திலும், குறிப்பாகத் தமிழ்நாட்டுச் சரித்திரத்திலும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய பத்து ஆண்டுக் கால நல்லாட்சியைத் தமிழ்நாட்டிற்குத்

1989 பிப்ரவரி 14] [திரு. பி. துரை ராமசாமி]

தந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் தாய் உள்ளத்தையும் திறமையையும் நேர்மையையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உலகம் போற்றும் சத்துணவுத் திட்டத்தை அறிமுகம் செய்து, எண்ணற்ற ஏழைக் குழந்தைகளுக்கு நல்வாழ்வு அளித்ததையும், இலவசக் கல்வித் திட்டம், காலணித் திட்டம், சீருடைத் திட்டம் போன்ற பல்வேறு நல்ல திட்டங்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் கிராமப்புற மக்களுக்கு நல்வாழ்வு கிடைத்திட குடிநீர் வழங்கல், பாதை வசதிகள் செய்தல், பாலங்கள் அமைத்தல், கல்விக் கூடங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

திரு. பெ. சீனிவாசன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர்கள், அவர்கள் எழுதிப் படிப்பது சரியல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. துரை ராமசாமி : தலைவரவர்களே, நான் எழுதிப் படிக்கவில்லை ; குறிப்பை வைத்துக்கொண்டு பேசுகிறேன்.

கல்விக்கூடங்களை ஏற்படுத்தி, பாதை வசதிகளைப் பொறுத்தவரையில் பட்டிதொட்டிகளில் எல்லாம் உள்ள சாலைகளைத் தார்ச் சாலைகளாக மாற்றி கிராமப்புற முன்னேற்றத்திற்கு நல்ல திட்டங்களை வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

விவசாயப் பெருங்குடி மக்களுக்கு 350 கோடிக்கும் அதிகமாகக் கடன் நிவாரணம் கொடுத்து, மின்சாரத்திற்குக் கட்டணத்தைக் குறைத்து, ஏழை விவசாயிகளுக்கு நல்ல பயனை அளிக்கிற வகையில் அணைத் திட்டங்களை ஏற்படுத்தி, வாய்க்கால் விஸ்தரிப்புகளை எல்லாம் கொடுத்து விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, அவர்கள் நல்வாழ்வினைக் கொடுத்திருக்கிறார்கள்.

அதேபோன்று, நெசவாளர்கள் உற்பத்தி செய்கின்ற துணிகளுக்கெல்லாம் ரிபேட் கொடுத்து, அந்தத் துணிகள் விற்காமல் தேங்கிக் கிடக்கிற நேரத்தில் அவற்றை அரசே வாங்கி ஏழை விவசாயக் கூலிகளுக்கு சேலை வேட்டிகளாகக் கொடுக்கிற

[திரு. பி. துரை ராமசாமி] [1989 பிப்ரவரி 14

திட்டங்களை எல்லாம் கொண்டு வந்து ஏழை விவசாயக் கூலிகளுக்கும், நெசவாளர்களுக்கும் பல நன்மைகளைச் செய்திருக்கிறார்கள்.

தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் புகளூர் காகித ஆலை, கூட்டுறவு நூற்பாலை போன்ற பல்வேறு நல்ல ஆலைகளைத் திறந்ததோடு ஆயிரக்கணக்கான சிறு தொழில்கள் உருவாவதற்கும் உறுதுணையாக அவர்கள் இருந்திருக்கிறார்கள்.

ஆதி திராவிட மக்களின் மீது அளவிலா அன்பு வைத்து அவர்களுக்கான நல்வாழ்வுத் திட்டங்களைக் கொண்டு வந்ததோடு அவர்களுக்கு நல்ல தோழனாகவும், காவலனாகவும் இருந்து செயல்பட்டிருக்கிறார்கள்.

இந்தி மொழி ஊடுருவுகிற நேரத்தில் எல்லாம் உன்னிப்பாக இருந்து ஊடுருவல் இல்லாமல் தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

மத்திய அரசு தமிழகத்திற்கு அரிசி கொடுப்பதைக் குறைத்தவுடன் அன்றைய முதலமைச்சராக இருந்த புரட்சித் தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள், தானே உண்ணாவிரதம் இருந்து நமது உரிமைக்குக் குரல் கொடுத்து அரிசியைப் பெற்றுக் கொடுத்திருக்கிறார்கள்.

இலங்கையில் படுகொலை நடப்பதைத் தடுக்கவும், அங்கு தமிழ் மொழி ஆட்சிமொழியாக வருவதற்கும் தமிழன் ஆட்சிப் பீடத்தில் அமர்வதற்கும் ராஜதந்திரத்தோடு செயல்பட்டு மத்திய அரசோடு உறவுக்குக் கை கொடுத்து இன்று உலகமெல்லாம் போற்றுகிற இலங்கை ஒப்பந்தத்தை உருவாக்கி இருக்கிறார்கள்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ராஜதந்திரத்தையும், நல்ல எண்ணத்தையும், நிர்வாகத் திறமையையும் பாராட்டி மைய அரசு இன்று பாரத ரத்னா பட்டத்தை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறது. பாரத ரத்னா பட்டத்தை அவர்கள் பெற்றதன் மூலம் தமிழகத்திற்குத் தனிச் சிறப்பு ஏற்பட்டிருக்கிறது என்று நான் குறிப்பிடக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

"மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்" என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். அண்ணாவின் கருத்துக்கு இணங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், புரட்சித் தலைவர்

1989 பிப்ரவரி 14] [திரு. பி. துரை ராமசாமி]

எம்.ஜி.ஆர். அவர்களுடைய திருவுருவப்படத்தை இந்த மாமன்றத்தில் திறப்பதற்கும், செங்கற்பட்டு மாவட்டத்திற்கு அவர்களுடைய பெயரைச் சூட்டுவதற்கும் உரிய நல்ல அறிவிப்பை இப்போதே கொடுப்பார்கள் என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்.

அடுத்து தமிழக மக்கள், எதிர்க்கட்சியினர், பத்திரிகையாளர்கள் எல்லாம் எதிர்பார்க்கிற அளவுக்கு ஆளுநர் உரையிலே எந்த விதமான நல்ல திட்டங்களும் இன்று அறிவிக்கப்படவில்லை.

உள்ளாட்சி மன்றங்களுக்கான பதவிக் காலத்தை மேலும் இரண்டாண்டுகள் நீட்டித்திருக்கிறார்கள். தலைவர்களுக்கும், உறுப்பினர்களுக்குமான பதவிக் காலத்தை அவ்வாறு நீட்டித்திருக்கிறார்கள். அவர்களுடைய பதவிக் காலத்தை நீட்டிப்பதால் எந்தப் பயனும் ஏற்பட்டுவிடாது. ஊராட்சி ஒன்றியங்களுக்குப் போதிய நிதியாதாரங்களைக் கொடுப்பதைப் பற்றி எந்தவிதமான அறிவிப்புமே ஆளுநர் உரையில் இல்லாமல் இருக்கிறது. 1969 ஆம் ஆண்டுக்கு முன்பு ஊராட்சி மன்றங்களுக்கு இருந்த அத்துணை அதிகாரங்களையும் கொடுக்க இந்த அரசு முன்வருமா என்று நான் இந்த நேரத்தில் விளக்கம் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறப்பாக நடைபெறும் கிராம நிர்வாக முறையில் குறை கண்டுபிடித்து மாற்றியமைப்பதன்மூலம் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதோடு அவர்களுடைய கட்டுப்பாட்டிற்குள் அதனைக் கொண்டு வருகிற ஒரு நிலைதான் ஏற்படும் என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தை அரசே கவனமாக நிறைவேற்றுவதைவிட்டு, உள்ளாட்சி மன்றங்களிடம் அதை ஒப்படைத்துவிடுவது படிப்படியாகக் கைவிடுகிற எண்ணத்தைத் தான் எடுத்துக்காட்டுகிறது.

சட்டமன்ற மேலவையை மறுபடியும் கொண்டுவரவேண்டுமென்று முடிவெடுத்துள்ளார்கள். அப்படிக் கொண்டுவந்தால் ஆளுநர் உரையில் உள்ளபடி நல்ல அறிவாளிகளும், கட்சிக்கு அப்பாற்பட்டவர்களும் அதிலே உறுப்பினர்களாக வருகிற வாய்ப்பினை இந்த அரசு ஏற்படுத்திக் கொடுக்குமா அல்லது

கட்சியில் உள்ளவர்களுக்கு பதவி கொடுப்பதற்காகவே அதைப் பயன்படுத்துவார்களா என்பதைத் தெளிவுபடுத்தவேண்டுமென்று பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-40)

ஆளுநர் உரையில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் கைத்தறி நெசவாளிகளுக்கும், மற்றவர்களுக்கும் எந்தவிதமான நலத்திட்டத்தையும் அறிவிக்காதது மிகவும் வருந்தத் தக்கது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கதர் மையங்களில் நூற்பு வேலை செய்கிற லட்சோப லட்சம் பெண்களுக்கு, அவர்களுடைய வேலையை நிரந்தரம் செய்து கொடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கதர் வாரியத்தில் நூற்பதற்குப் பஞ்சு இல்லாமலும் நெய்வதற்கு நூல் இல்லாமலும் இருக்கிற சூழ்நிலை உருவாகி இருக்கிறது. குறிப்பாக பாலியஸ்டர் துணிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ஆகையினால் சாதாரண கதர்த் துணி நெய்கிற நெசவாளிகளுக்கு நூல் கிடைக்காமல் வேலை வாய்ப்பை இழந்திருக்கிற நிலைமை உருவாகியிருக்கிறது. அவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கைத்தறித் துணிகளுக்கு ரிபேட்டைத் தொடர்ந்து கொடுக்க வேண்டும் என்றும், தேங்கிக் கிடக்கிற துணிகளை விற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அல்லது அரசே அதை வாங்கிக்கொண்டு, நெசவாளிகளுக்கு நல்வாழ்வைக் கொடுக்க வேண்டும் என்றும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆதி திராவிட மக்களுக்கு இதுவரையில் பட்டா கொடுப்பதில் மிகவும் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. நிறைய இடங்களிலே உயர்நீதி மன்றங்களிலும் மற்ற நீதி மன்றங்களிலும் தடை உத்தரவு பெற்றுள்ளார்கள். அந்தத் தடை உத்தரவுகளை விலக்குவதற்கு அரசு வழக்கறிஞர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்வதில்லை. ஆகையினால் உடனே இதில் அரசு வழக்கறிஞர்கள் ஈடுபட்டு நடவடிக்கை எடுத்து, அந்தத் தடைகளை நீக்கி ஆதி திராவிட மக்களுக்குப் பட்டா கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1989 பிப்ரவரி 14] [திரு. பி. துரை ராமசாமி]

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் 35 ஆயிரம் ஏக்கருக்குப் புதியதாக, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அரசு விஸ்தரிப்பு கொடுத்து, அவ்வகையில் அதில் வாய்க்கால்கள் வெட்டி, உப வாய்க்கால்கள் எல்லாம் வெட்டப்பட்டுள்ளது. ஆனால், இதுவரையில் அதில் தண்ணீர் விடப்படவில்லை. இப்போது பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் மூன்று முறை இருப்பதை, நான்கு முறையாக மாற்றினால்தான் தண்ணீர் விட முடியும் என்று அரசு அதிகாரிகள் கூறுகிறார்கள். ஆகவே அவ்வாறு மூன்று முறையாக இருப்பதை, 4 முறையாக மாற்றி, அந்த 35 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு உடனடியாகத் தண்ணீர் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல ஆண்டுகளுக்கு முன்பு விவசாயப் பம்பு செட்டுக்கு, மின் கட்டணம் கட்டாத விவசாயிகளுக்கு வட்டியும், அபராத வட்டியும் போட்டு வசூல் பண்ணுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்தக் கெடுபிடி வசூலை நிறுத்தி, அந்த வட்டியையும், அபராத வட்டியையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியில் அமராவதி ஆற்றிலும், நல்லதங்காள் ஓடையிலும், ஷண்முகா சிற்றாற்றிலும் அணை கட்டுகிற பணி நிலுவையில் உள்ளது. அவைகளில் அணையைக் கட்டுவதற்குத் தக்க நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன், வணக்கம்.

* **திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமன்றத்தில் கன்னி உரையாற்று கிற வாய்ப்புத் தந்த உங்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த மாமன்றத்தில் அமர்ந்து இங்கே நடக்கிற உயிரோட்டமான விவாதத்தில் பங்கு கொண்டு, தமிழக மக்களுக்குச் சேவை செய்கிற வாய்ப்புக் கொடுத்த இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கும், அதன் இனிய தலைவர் எங்கள் அன்புப் பிரதமர் ராஜிவ் காந்தி அவர்களுக்கும், எங்கள் அன்புத் தலைவர் மூப்பனார் அவர்களுக்கும், தென்காசித் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றி சொல்லி, என்து உரையை நான் ஆரம் பிக்கிறேன்.

[திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்] [1989 பிப்ரவரி 14

புதிய சபாநாயகர் தேர்ந்தெடுக்கப்பட்டதும், புதிய சபா நாயகரை வாழ்த்துகிற வாய்ப்பை சட்டமன்றத்திலே ஒரு நிகழ்ச்சியாக வைத்து, அதற்காக ஒரு நாளை ஒதுக்கி, புதிய சபாநாயகரையும் மற்றும் துணைச் சபாநாயகரையும் வாழ்த்திய தோடு மட்டும் அல்லாமல், அவர்களுடைய உரிமைகளையும், கடமைகளையும் சுட்டிக் காட்டிப் பேசுவதற்கு ஒரு வாய்ப்புக் கொடுத்திருந்தார்கள். ஆனால், புதிய அமைச்சரவையை வாழ்த்துகிற வாய்ப்புக்கு, அதை ஒரு நிகழ்ச்சியாக விழாவாகத் தந்து அவர்களை வாழ்த்துகிற வாய்ப்பையும் தந்திருப்பார்கள் என்று சொன்னால், அது மிகவும் நன்றாக இருந்திருக்கும். ஆனால் தரவில்லை. அதனால் ஆளுநர் விவாதத்திலே அதற்கு ஒரு சந்தர்ப்பமாக நான் எடுத்துக்கொள்ள விரும்புகிறேன். பொது வாழ்விலே பொன் விழா கண்டு, தமிழக அரசியலிலே களம் பல கண்டு, தாயாக இருந்த கலைஞர் அவர்கள் இன்று கனி யாகப் பழுத்து தமிழகத்தின் முதல்வராகப் பணியேற்றிருக்கி றார்கள். அவர்களுடைய நீண்ட நாளைய அரசியல் பயணத்தில் துணை நின்ற பேராசிரியர் மற்றும் அமைச்சர்கள் அத்தனை பேரையும் நான் மனமார வாழ்த்துகிறேன். கலைஞர் முதல்வ ராகப் பணியேற்றதும், 'கலைஞர் ஆட்சி கோட்டையில், ஏழைகள் நெஞ்சம் மகிழ்ச்சியில்' என்று கலைஞரின் வண்ணப்படத்தை மிகப் பெரியதாக அச்சிட்டு, சென்னை மாநகரமெங்கும் ஒரு பெரிய போஸ்டர் அடித்து ஒட்டியிருந்தார்கள். ஏழைகள் மகிழும்போது நாங்கள் மட்டும் மகிழாமல் இருக்க முடியாது, மகிழ்ந்தோம். புதிய அரசின் கொள்கை மற்றும் திட்ட விளக்க மாக ஆளுநர் உரையில் ஏழைகளுக்கு நிறைய கிடைக்கும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண நினைக்கும் இந்த அரசின் ஆளுநர் உரையில் ஏழைகள் வயிற்றுக்கும், ஏழைகளின் அன்றாட வாழ்க்கைக்கும், ஏழை களின் தினசரித் தேவைக்கும் சம்பந்தப்பட்ட விஷயங்கள் இல்லை. அது ஒரு சாதனை விளக்கமாக, திட்டங்களின் திரட் டாக இல்லாமல், மாறாக எனது அருமை திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது—முரசொலி பத்திரிகையின் தலையங்கம் போலத்தான் ஆளுநர் உரை இருந்தது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது வெறும் அரசியல் விமர்சனமாக இருந்தது.

Governor's Address is full of political issues only.

மாநில சுயாட்சி, இந்தித் திணிப்பு, மேலவை அமைப்பு, மத்திய

மாநில உறவுகள், மாநில மத்திய நிதிப் பங்கீடு, ஊராட்சிகள், நகராட்சிகளின் பதவிக் காலத்தை நீட்டித்தல், மாநகராட்சிகளுக்குத் தேர்தல் நடத்துவது, கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்துவது, கிராம நிர்வாகத்தை மாற்றுதல், மத்திய அரசின் முதலீட்டைக் கூட்ட வேண்டுமென்ற கோரிக்கை, 40 ஆண்டு காலமாக மாநிலங்களின் நிதியாதாரங்களைச் சுரண்டும் மத்திய அரசு என்று இந்தப் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது.

தமிழகத்தின் தலைவாயிலில் பூதமாக உருவாகி நிற்கும் வறட்சியைப் போக்க அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை, இந்த அரசு பதவியேற்றவுடன் பொதுச் சந்தையில் இரண்டு மடங்காக ஏறி இருக்கும் அரிசி விலையேற்றம், ஒரு குடம் குடிதண்ணீருக்காக இரவு முழுவதும் குடும்பத்துடன் நடக்கவேண்டிய தமிழகத்தில் வாழ்கிற 35 விழுக்காடு கிராமங்களைச் சார்ந்த மக்கள்

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, அவையிலே ஒரு தவறான தகவலைக் கொடுத்தால் அதைப் பயன்படுத்திக்கொண்டு வியாபாரிகள் உள்ளபடியே அரிசியின் விலையை இரண்டு மடங்காக உயர்த்திவிடுவார்கள். எனவே, பொது மக்களின் நன்மையைக் கருதி ஒரு விளக்கத்தைத் தர வேண்டியவனாக இருக்கிறேன். ஏழைகள் மகிழத்தக்க வகையில் இந்த அரசு பதவியேற்றவுடன், தமிழகத்தின் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பத்திரிகையாளர்களைச் சந்தித்த முதல் கூட்டத்திலேயே அறிவித்தது மத்திய அரசாங்கம் அரிசி விலையை உயர்த்தியிருப்பதை இந்த மாநில அரசாங்கம் உயர்த்தாது என்பதுதான். இரண்டாவது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல ஒருசில வியாபாரிகள் திருநெல்வேலி மாவட்டத்திலும், திருச்சி மாவட்டத்திலும் ஒரு கிலோ அரிசிக்குப் பொதுச் சந்தையில் 50 காசுகள், 70 காசுகள் என்று உயர்த்தினார்கள். உடனடியாக உணவுத் துறையின் சி.ஐ.டி. பிரிவில் இருக்கக்கூடிய அதிகாரிகள் எச்சரிக்கையாக நடவடிக்கையெடுத்து, வியாபாரிகளைச் சந்தித்து, விவரங்களைச் சேகரித்த போது பழைய விலைக்கே விற்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். விலை ஏறாமல் இருக்க இந்த அரசாங்கம் எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: தலைவர் அவர்களே, நடவடிக்கையெடுத்த உணவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அடிப்படை நிர்வாகத்தை ஆட்டி வைக்கும் ஊழல். போக்குவரத்து வசதிகளே இன்னும் எட்டிப்பார்க்காத கிராமங்கள், படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கும் 17 லட்சம் இளைஞர்கள், இளம் பெண்கள், மின் விளக்குகள் இன்னும் எட்டிப்பார்க்காத அரிசனக் குடியிருப்புகள், மருந்துகள் இல்லாத மருத்துவமனைகள், அடுத்த நேர உணவையே வாழ்வில் பிரச்சினையாகக் கொண்டிருக்கிற நெசவுக்கு நூல் கிடைக்காது இருக்கும் கைத்தறி நெசவாளர்கள், 'காணி விளைந்தென்ன மச்சான் இங்கே கையும் காலும் தானே மிச்சம்' என்று பாடி, கடன் சுமையின் பளுவால் குறுக்கு நொடியும் நிலையில் வாழும் தமிழக விவசாயிகள், இவைகளுக்கெல்லாம் ஆளுநர் உரையில் என்ன இருக்கிறது என்று எங்களுக்குத் தெரியவில்லை. மாநில சுயாட்சியைப் பற்றி மணிக்கணக்காகப் பேசுவதால் இவர்களுக்கு என்ன கிடைக்கப் போகிறது என்று எங்களுக்கு விளங்கவில்லை. ஒருவேளை ஏழைத்தமிழர்கள் தங்களது அடிப்படைத் தேவைகளை மறக்க வேண்டும் என்பதற்காகத்தான் நீங்கள் மாநில சுயாட்சி, இந்தித் திணிப்பு என்று எல்லாம் சொல்கிறீர்களோ என்று கூட நாங்கள் ஐயுறுகிறோம். பாலுக்காகப் பசியால் வாடும் குழந்தையின் வாயை அடைப்பதற்காக, கொடுமைக்கார சிற்றன்னை பூச்சாண்டி வருவதாகச் சொல்லி குழந்தையின் வாயை அடைப்பதைப் போல அடிப்படைத் தேவைகளுக்காக அழப்போகும் தமிழர்களின் வாயை அடைப்பதற்காக மாநில சுயாட்சி, இந்தித் திணிப்பு என்று நீங்கள் பூச்சாண்டி காட்டுகிறீர்கள் என்று மக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று சொல்கிறீர்கள். அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டுமென்று சொல்கிறீர்கள். அதிகாரங்களை மத்திய அரசு தனது கழுத்துப்பட்டையும் அளவிற்கு குவித்து வைத்துள்ளது என்றெல்லாம் சொல்கிறீர்கள். சில அதிகாரங்கள் சிலரிடம் இருந்தால் தான் நிர்வாகத்திற்கு இலகுவாக இருக்கும். அது ஒரு administrative compulsion. உதாரணமாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உள்துறை, நிதி போன்ற முக்கிய இலாக்காக்களைத் தன்னிடத்தில் வைத்திருக்கிறார்கள். அதை அதிகாரக் குவிப்பு என்று சொல்லிவிட முடியாது. அந்த

1989 பிப்ரவரி 14] [திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்]

அதிகாரங்கள் அவர்களிடம் இருக்கிறபோது தான் அவற்றின் பயனைப் பெற முடியும். இது ஒரு administrative compulsion, administrative convenience. இதையெல்லாம் மீறித் திட்டமிடுதலையும், நிதி ஒதுக்குதலையும் மிகப் பரவலாக்கி மாநிலம், மாவட்டம் என்ற அமைப்புக்களையெல்லாம் தாண்டி ஊராட்சி ஒன்றியங்களின் தலைவாயிலில் அதிகாரங்களைக் கொண்டு வந்து தருவோம் என்று நாங்கள் சொன்னால் அதையும் மத்திய அரசின் அதிகார ஆக்கிரமிப்பு என்று சொல்கிறீர்கள், எதற்குத்தான் மத்திய அரசை குறை சொல்வது என்று தெரியவில்லை. தமிழ்நாட்டிலே சற்று அதிகமாக வெய்யில் அடித்தால் கூட அதற்கும் மத்திய அரசு செய்கின்ற சதி என்று சொல்லக்கூடிய ஒரு மனப்பான்மையை நாம் பெற்றுக் கொண்டு வருவது வேதனை தரத்தக்க விஷயம். மின்சார வெட்டா, மத்திய அரசு, அரிசி விலை ஏற்றமா, மத்திய அரசு, தொழில் துறைத் தேக்கமா, மத்திய அரசு. 'மெக்கார்டிசம்' என்று ஆங்கிலத்திலே சொல்வார்கள். மெக்கார்டி என்று அமெரிக்காவிலே ஒருவர் இருந்தார். அவர் கம்யூனிச எதிர்ப்பையே வாழ்க்கை முழுவதும் நினைத்து, எதைப் பார்த்தாலும், எப்படிப் பார்த்தாலும் அதை ஒரு கம்யூனிச எதிர்ப்பாகவே கருதி, கடைசியில், கம்யூனிச எதிர்ப்பையே ஒரு மனநோயாக ஆக்கி; ஒரு மாடியிலே இருந்து விழுந்து தற்கொலை செய்து கொண்டார்கள். அதைப்போல எதைப் பார்த்தாலும் மத்திய அரசு, மத்திய அரசு என்று நினைத்து அந்த மெக்கார்டிசத்திற்கு நீங்கள் ஆளாகிவிடக்கூடாது என்று எனது அருமை நண்பர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

மத்திய அரசின் கொள்கைகள், சில நடைமுறை விதிகள் நமக்குச் சில நேரங்களில் சரியாக வராவிட்டாலும்கூட, அதை எதிர்த்துப் போராடுவதில் தவறு இல்லை. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை நேரும் என்று சொன்னால், நாங்கள் கூட உங்களோடு சேர்ந்து குரல் எழுப்புவதற்குத் தயாராக இருக்கிறோம். ஆனால் எதிர்ப்பதையே ஒரு கொள்கை என்று மற்றவர்கள் நினைக்கக் கூடிய அளவிற்கு உங்களுடைய பேச்சுக்களும், நடவடிக்கைகளும் இருக்குமேயானால், அது தமிழ்நாட்டிற்கு நல்லதல்ல என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நீங்கள் கேட்கக்கூடிய இடத்திலே இருக்கிறீர்கள். அவர்கள் கொடுக்க வேண்டிய இடத்

திலே இருக்கிறார்கள். அரிசி வேண்டுமென்றால், அவர்களிடம் தான் கேட்க வேண்டும். இன்று 200 கோடி கேட்டு, 150 கோடியாவது தருவார்களா என்று பார்த்துக்கொண்டிருக்கிறோம். இதிலே நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் எவ்வளவு சாதுர்யமாக, எவ்வளவு சாணக்கியத்தனமாக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாங்கள் உணர்கிறோம். அவர்களிடம் நிகழ்ந்துள்ள மாற்றத்தை நாங்கள் பார்க்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களது இளைய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களைப் பார்த்து இருக்கிறார்கள். இன்றைக்கு மூன்று முறை பேசியிருக்கிறார்கள். ஒருமுறை நமது மாநிலங்களவை உறுப்பினர் மாண்புமிகு மாறன் அவர்கள் இல்லாமல் தனியாகச் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். பேசிவிட்டு ஒன்றைச் சொல்லி இருக்கிறார்கள். இதய நிறைவோடு இருக்கிறேன் என்று சொல்லி இருக்கிறார்கள். இதைத் தொடர்ந்து முதல்வர் அவர்களின் கண்ணோட்டத்திலே ஏற்பட்டுள்ள உருமாற்றததை நாங்கள் உணர்கிறோம். நமது முதல்வர் அவர்களுடைய வார்த்தையிலே சொல்லவேண்டும் என்று சொன்னால், காயாக இருந்தவர் இன்று கனிந்து இருக்கிறார்கள். அவர்கள் மட்டும் கனிந்தால் போதாது. அவர்களின் அன்புத் தம்பிகளாக இருக்கிற நீங்களும் கனிய வேண்டும். இன்னும் சில பேர்கள் எதற்கு எடுத்தாலும் மத்திய அரசைக் குறை சொல்வது, அவர்கள் இன்னும் பிஞ்சாக இருப்பதாக நாங்கள் உணர்கிறோம்.

கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றி இங்கே பேசினார்கள். கூட்டுறவுச் சங்கங்கள் 1967-க்கு பிறகு எப்படி இருக்கின்றன என்று நாங்கள் சொல்கிறபோது சில நண்பர்கள் ஒழுங்குப் பிரச்சினையைக் கூட எழுப்பலாம். உதாரணத்திற்குச் சொல்கிறேன். சில கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அவைகள் பில் போடுகின்ற கூட்டுறவுச் சங்கங்களாக எங்களுடைய மாவட்டத்திலே இருக்கின்றன. ஒரு அரசு ஆணையைத் தற்போது கொடுத்திருக்கிறார்கள். ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு என்ன பொருள்கள் வேண்டும் என்றாலும், கூட்டுறவுச் சங்கத்திலேதான் வாங்கவேண்டும் என்று சொல்லி ஆணை போட்டிருக்கிறார்கள். சில பேர்கள் பில்களைப் போடுவதற்காகவே கூட்டுறவுச் சங்கங்களை வைத்திருக்கிறார்கள். ஒரு யானை வேண்டும் என்று கேட்டால் கூட அதற்குப் பில் போட்டு 3 சதவிகித கமிஷனையும் சேர்த்து, விற்றுவிடக் கூடிய அளவிற்கு சில கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன.

1989 பிப்ரவரி 14]

* மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, யானை வாங்குவதற்கு எந்தக் கூட்டுறவுச் சங்கத்திலேயும் பில் போடும்படி அரசு உத்தரவு பிறப்பிக்கவில்லை. யானை வாங்கவேண்டிய வேலையும் சங்கங்களுக்குக் கிடையாது. பொதுவாக ரேசன் கடைகளிலே இருக்கக்கூடிய பொருள்களுக்குத்தான் பில் கொடுக்கவேண்டுமே தவிர, மற்றவற்றிற்குப் பில் கொடுக்கக் கூடாது என்று அரசாங்கமே ஏற்கெனவே உத்தரவு போட்டிருக்கிறது. அப்படி ஏதாவது ஆதாரம் இருந்தால், யானைக்குப் பில் போட்டதாக, அதை அரசுக்குத் தருவார்களானால், நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கன்னிப் பேச்சை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே அமைச்சர்கள் இடையூறு இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: ஒரு சிறிய விளக்கத்தைத் தர கடமைப்பட்டு இருக்கிறோம். யானை என்று சொன்னால், உதாரணத்திற்காக அதைச் சொன்னேன். அதாவது சில சங்கங்களிலே கூட்டுறவு நடவடிக்கைகளேயில்லை. வெறுமனே பில் போடுவதற்காக மட்டும் சங்கங்களை வைத்திருக்கிறார்கள். எந்தப் பொருட்களை ஒரு தனிப்பட்ட ஒப்பந்தக்காரர் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்குக் கொடுக்கவேண்டும் என்று சொன்னாலும் கூட அவர்கள் அந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு அந்தப் பொருட்களைக் கொடுத்து விட்டு, இவர்களிடம் வந்து 3 விழுக்காடு கமிஷனைக் கொடுத்துவிட்டு அவர்கள் கொடுக்கிற பில்களை வாங்கி, இங்கே வந்து ஒப்படைக்கிறார்கள் என்பதைத்தான் நான் அப்படிச் சொன்னேன் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, அருப்புக்கோட்டை, காஞ்சிபுரம், ஈரோடு ஆகிய இடங்களிலே இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்கள் கொள்ளைக்கூடங்களாக இருப்பதை இந்த அரசு உணர்ந்து பார்க்க வேண்டும். அங்கே கூட்டுறவு இல்லை, அங்கே சங்கங்கள் இல்லை, அங்கே மெம்பர்கள் இல்லை. இப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தினால் என்ன லாபம் என்பதை இந்த அரசு நினைத்துப் பார்க்க வேண்டும். முதலிலே

[திரு. சா. பீட்டர் அல்போன்ஸ்] [1989 பிப்ரவரி 14

அந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் பின்னாலே இருக்கிற அந்தரங்கங்களை அலசிப் பார்ப்பதற்கு ஒரு கமிட்டியை நியமிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் உண்மையான கூட்டுறவுச் சங்கங்கள்தானா, அங்கே கூட்டுறவுப் பணிகள் நடந்து வருகின்றனவா, அதிலே உண்மையாக உறுப்பினர்கள் இருக்கிறார்களா என்றெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். கடன் வாங்கிய ஒரே காரணத்திற்காக இன்று சில விவசாயிகளுக்கு கூட்டுறவுச் சங்கங்களிலே வாக்களிக்கக்கூடிய ஒரு வாய்ப்பே இல்லாமல் இருக்கிறது. அந்த வாய்ப்பை நீங்கள் கொடுக்கவேண்டும். கடன் பட்டிருக்கிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக அவர்களை நீங்கள் கூட்டுறவுச் சங்கத் தேர்தலில் பங்கெடுத்துக் கொள்ள வாய்ப்பு கொடுக்கவில்லை என்று சொன்னால், கூட்டுறவு இயக்கம் தனது முழுமையான பலனைப் பெற முடியாது. நிர்வாகச் சீர்திருத்தம் என்று சொல்லியிருக்கிறார்கள். Administrative Machinery will be geared up என்று சொல்லியிருக்கிறார்கள். நிர்வாகத்தை முடுக்கிவிட்டிருக்கிறீர்களோ இல்லையோ ஆனால் சில நிர்வாகிகளை முடுக்கி விட்டிருப்பதை நான் பார்க்கிறேன். பத்திரிகையில் எழுதியிருக்கிறார்கள். இந்த அரசுக்குச் சாதகமாக இல்லாத அதிகாரிகள் பந்தாடப்படுகிறார்கள் என்று பத்திரிக்கையில் எழுதியிருக்கிறார்கள். அதற்குள் நான் போக விரும்பவில்லை. ஆனால் அதிகாரிகளுக்கு அப்படிப்பட்ட ஒரு எண்ணத்தை உருவாக்கி விடக்கூடாது என்று உங்களை மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எம்.ஜி.ஆர். சமாதிக்குச் சென்று மாலை வைத்து இருக்கிறீர்கள். எம்.ஜி.ஆர். படத்தைத் திறந்து வைக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். சட்டசபையில் திறந்து வைக்கின்ற பெருந்தன்மை தொடரும் என்று மாண்புமிகு கலைஞர் அவர்களே அறிவித்திருக்கிறார்கள். ஆனால் எம்.ஜி.ஆர். உடன் இருந்த அதிகாரிகள் இன்று எங்கெங்கோ, தூக்கி எறியப்படுவதாக பத்திரிகையில் போடுகிறார்கள். நான் சொல்லவில்லை. ஒரு அரசு வந்தவுடன், அந்த அரசுக்கு வேண்டாத அதிகாரிகள் எல்லாம் குப்பை மேட்டுக்கும், களத்து மேட்டுக்கும் தூக்கி எறியப்படுகிறார்கள் என்று சொன்னால் மிக Senior Administrative Officials நிர்வாகத்திறனை முழுமையாகப் பெற்ற அதிகாரிகளுடைய பணி அவர்களுடைய

1989 பிப்ரவரி 14] [திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்]

சேவை தமிழகத்திற்குக் கிடைக்காது என்பதை உங்களுக்குச் சுட்டிக்காட்டுகின்ற கடமை எங்களுக்கு இருப்பதால் நான் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

நிர்வாகிகளை மாற்றுவதற்குப் பதிலாக நிர்வாக முறையை மாற்றவேண்டுமென்று நான் மிக பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாகச் சொல்கிறேன். இதை ஏதோ தனிப்பட்ட விளக்கமாகச் சொல்ல நான் ஆசைப்படவில்லை. இராஜபாளையத்தில் ஒரு தலைமை ஆசிரியர், அந்தத் தலைமை ஆசிரியர், ஆசிரியர் போராட்டத்தில் கலந்து கொள்கிறார். போராட்டத்தில் கலந்துகொள்கின்ற நேரத்தில் தற்காப்பு நடவடிக்கையாக 151 Cr.P.C., Criminal Law Amendment Act 7 (1) (a) படி வழக்கு போடுகிறார்கள். போராட்டம் முடிந்தவுடன் அவரைத் திரும்ப விட்டுவிடுகிறார்கள். ஆனால் அந்த வழக்கு இன்னும் வழக்காகவே இருந்து வருகிறது. அந்தத் தலைமை ஆசிரியருக்குக் கீழே பணியாற்றியவர்கள் எல்லாம் இன்று C.E.O., D.E.O. ஆக பதவி ஏற்றம் பெற்றுவிட்டார்கள். ஆனால் எந்த குற்றமும் செய்யாத ஒரு தலைமை ஆசிரியர், தற்காப்பு நடவடிக்கைக்காக கைது செய்யப்பட்ட ஒரே காரணத்திற்காக தன்னுடைய வாழ்க்கை முழுவதையும் இழந்து வருகின்ற கொடுமை எல்லாம் இன்று நிர்வாகத்தில் நடந்து வருகிறது.

இங்கே தலைமைச் செயலகத்தில் உள்ள ஊழியர்கள் மீது உள்ள வழக்குகளை நீங்கள் வாபஸ் பெற்று இருக்கிறீர்கள். நாங்கள் சந்தோஷப்படுகிறோம். அதை வாபஸ் பெற்ற அரசை நாங்கள் பாராட்டுகிறோம். அதேபோல் அரசு ஊழியர்கள் மேல் அனாவசியமாக கிடக்கின்ற வழக்குகளை எல்லாம் துடைத்து எடுத்து அவர்களை வேகமான ஒரு பணி சீர்திருத்தத்திற்கு கொண்டு வரவேண்டுமென்று நான் உங்களை கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல் தமிழகத்திலே இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம். (மணியடிக்கப்பெற்றது). மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு நிமிடம் கொடுத்திருக்கிறார்கள்.

குடிநீரைப் பற்றிக் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நான் சொல்லுகிறேன். என்னுடைய தொகுதியில் ஆவுடையானூர் என்ற கிராமம் இருக்கிறது. அது 10 ஆயிரம்

பேர் வாழ்கின்ற பகுதியாகும். அங்கே இருக்கின்ற இளைஞர் களுக்கு பக்கத்து கிராமத்தில் இருப்பவர்கள் பெண் கொடுப்பது இல்லை. ஏன் என்று கேட்டால் அந்த ஊரிலே தண்ணீர் குடத்தைத் தூக்கிக் கொண்டு ஒரு இரவு முழுவதும் நடந்தால் தான் மறுநாள் வீட்டுக்கு ஒரு குடம் தண்ணீர் கிடைக்கும். அப்படிப்பட்ட கிராமங்களை எல்லாம் இந்த அரசு விழித்துப் பார்க்கவேண்டும்.

நாங்கள் திட்டங்களை உடனே செயல்படுத்துங்கள் என்று சொன்னோம். இங்கே சொன்னார்கள், கர்ப்ப ஸ்திரீகளுக்கு மாதா மாதம் பணம் தருகிறோம் என்று தேர்தல் அறிக்கையில் சொன்னீர்கள். கல்யாணம் ஆகாத கன்னிப் பெண்களுக்கு எல்லாம் திருமணம் செய்து வைக்கிறோம் என்று சொன்னீர்கள். எல்லோருக்கும் இலவசமாக கல்லூரி வரை படிப்புத் தருகிறோம் என்று சொன்னீர்கள். அதையெல்லாம் சுட்டிக்காட்டிப் பேசி னால் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமநாதன் அவர்கள் அரச மரத்தைச் சுற்றி வந்தவுடனே அடி வயிற்றில் கை வைத்துப் பார்க்கக் கூடாது என்று சொல்கிறார்கள். அதை நான் ஒத்துக் கொள்கிறேன். கல்யாணம் ஆகாத கன்னிப் பெண்கள் இன்னும் ஒரு ஆண்டுக் காலம் காத்துக்கொண்டிருக்கலாம். கர்ப்பமுற்று இருக்கும் தாய்மார்கள் இதற்கு மேல் காத்துக் கொண்டிருக்க முடியாது. அவர்களுக்காவது ஒரு திட்டத்தை உடனடியாக நீங்கள் அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தின் முன்னேற்றத்தைக் கருதி, தொழில் வளர்ச்சியைக் கருதி இந்த அரசு எடுக்கின்ற ஒவ்வொரு நடவடிக்கைக்கும் உள்ளச் சுத்தமாக நாங்கள் துணை இருப்போம் என்று சொல்லி, அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது இது கொள்கை விளக்கமாக மட்டும் காட்சி தருகிறது. சமுதாயத்தினுடைய பல்வேறுபட்ட மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுகின்ற உரையாக இல்லையென்று தெரிவித் தார்கள். அவர்கள் ஆளுநர் உரையில் 21-வது பாராவை மட்டும் படித்து விட்டு மற்றைய பகுதிகளை படிக்கவில்லை என்று கருதுகிறேன். 22-வது பாராவிலிருந்து சமுதாயத் திலுள்ள அனைத்துத் தரப்பு மக்களுக்கும் நம்பிக்கை ஊட்டுகின்ற

1989 பிப்ரவரி 14] [திரு. பொன். முத்துராமலிங்கம்]

திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்பு கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்குக் கொடுத்ததில் அவ்வாறு சொல்லப்பட வில்லை. அப்படிச் சொல்லியிருந்தால் —நிச்சயமாக நாங்கள் சொல்லியிருக்க மாட்டோம். திட்டங்கள் அளிக்கப்படும் என்று தான் சொல்லியிருக்கிறதே தவிர திட்டங்களைச் சொல்லியிருந் தால் நேற்று நானும் பேசியிருக்க மாட்டேன், இன்று நண்பர் பீட்டர் ஆல்போன்ஸ் அவர்களும் பேசியிருக்க மாட்டார்கள்.

[முற்பகல் 10-00]

5. அமைச்சரின் அறிக்கை.

எண்ணூர் அனல் மின்நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 110-ன் கீழ் மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் இப்பேரவைக்கு ஓர் அறிக்கையை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 110-ன் கீழ் நான் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

1988 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10 ஆம் நாள் அன்று மாலை 6-20 மணியளவில் எண்ணூர் அனல் மின் நிலையத்தில் ஒரு தீ விபத்து ஏற்பட்டது. இதனால் மின் உற்பத்தி பிரிவுகள் மூன்றா வது மற்றும் நான்காவது (மொத்தம் 220 மெகாவாட் திறன் கொண்டது) மற்றும் பிற பிரிவுகளிலுள்ள முக்கியமான கேபிள்கள் பாதிக்கப்பட்டன. 9½ மணி நேர தாமதத்திற்குப் பின்புதான் தீ முழுமையாக அணைக்கப்பட்டது. தமிழ்நாடு பெட்ரோ கெமிகல் நிறுவனம், சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம், துறை முகக்கழகம் மற்றும் தமிழ்நாடு தீயணைப்புப் படையினர் உதவி யுடன்தான் தீயை அணைக்க முடிந்தது.

[திரு. கே. என். நேரு] [1989 பிப்ரவரி 14

2. இதுபோன்ற தீ விபத்துக்களை கண்டுபிடிப்பதற்கான 'புகை கண்டுபிடிப்புக் கருவி' மேற்படி நிலையத்தில் பொருத்தும் வேலை முழுமையாக முடிவடையவில்லை. அது இயங்கும் நிலையிலிருந்து உபயோகப்படுத்தப்பட்டிருந்தால் இந்த தீ விபத்து பெருமளவிற்குத் தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

3. இந்த இரு பிரிவுகளில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக 8 அல்லது 9 மாதங்களுக்கு ஒரு மாதத்திற்கு 100 மில்லியன் யூனிட்டுகள் வீதம் மின் உற்பத்தி இழப்பு ஏற்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. மாநிலத்தின் மொத்த மின் உற்பத்தியைப் பார்க்கும்போது இது 8 சதவிகிதமாகும்.

4. தீ விபத்து குறித்து ஆராய்வதற்கும் அதற்கான காரணங்களை கண்டறிவதற்கும் தமிழ்நாடு மின் வாரியம் இரு குழுக்களை நியமித்தது. மின் நிலைய செயல்பாட்டிலும் அவற்றை மேற்பார்வையிடுவதிலும் கடுங்குறைபாடுகள் இருப்பதை இக்குழுக்கள் தெரியப்படுத்தியுள்ளன. சதி வேலைகள் நிகழ்வதற்குரிய சூழ்நிலைகளைத் தவிர்ப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் இந்த தீ விபத்து நடந்தபோது தீவிரமாக நடைமுறைப் படுத்தப் படவில்லையென்று ஒரு குழு கருத்து தெரிவித்துள்ளது. கேபிள் பிரிவுகளுக்கு துரிதமாக செல்ல வழிகள் இல்லையென்றும், பிராணவாயுக் கருவிகள் இல்லையென்றும் தீயில் இறங்குவதற்கான ஆடைகள் மற்றும் அத்தகைய சந்தர்ப்பங்களில் உபயோகப்படுத்தப்படும் விளக்குகள் இல்லையென்றும் இக்குழு கருத்துத் தெரிவித்துள்ளது. கேபிள் செல்லும் வழிகளில் தீ கண்டுபிடிப்பு சாதனங்கள் பயன்படுத்தப்பட வேண்டுமென்றும் நீண்ட கேபிள்கள் செல்லுமிடங்களில் தடுப்புச் சுவர்கள் அமைக்கப்பட வேண்டுமென்றும் கேபிள் செல்லும் வழிகளில் தகுந்தாற்போல் தீ அடைப்பான்கள், கேபிள்களுக்கு மேல் தீ தடுப்பு பூச்சுகள் மற்றும் விரும்பத்தகாதவர்கள் நுழைவதைத் தடுக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் கடினப்படுத்தப்பட வேண்டுமென்றும் மற்றொரு குழு பரிந்துரை செய்துள்ளது.

5. இக்குழுக்களின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது குறித்து தமிழ்நாடு மின் வாரியம் ஆய்வு செய்து வருகிறது. மின் நிலைய பணியாளர்களில் சிலர் இந்த தீ விபத்து ஏற்பட்ட நேரத்தில் தங்களது பணியிடத்தில் இருக்கவில்லையென்று இக்குழுக்களின் அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. இத் தீ விபத்தில்

1989 பிப்ரவரி 14] *[திரு. கே. என். நேரு]*

மனிதர்களின் பங்கு அல்லது தவறு உள்ளது என்று ஐயப்பாட்டிற்கு இது இடமளிக்கிறது. இது காவல் துறையினரால் புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது.

6. இது போன்ற தீ விபத்துகள் ஏற்படாவண்ணம் இக்குழுக்களின் பரிந்துரைகளை செயல்முறைப்படுத்துவதை அரசு கவனமுடன் கண்காணிக்கும். பழுதுபட்ட பிரிவுகளைத் திட்டமிடப்பட்டுள்ள காலத்திற்கு முன்னரே சரி செய்யத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி தமிழ்நாடு மின் வாரியத்திற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்காவிட்டால் மாநிலத்தில் இருக்கும் மின்வெட்டைக் குறைக்க முடிந்திருக்கும் என்று அரசு கருதுகிறது.

7. இத் தீ விபத்தின் காரணமாக ரூபாய் 12 கோடி மதிப்புள்ள கருவிகள் மாற்றியமைக்கப்படவேண்டியது அவசியமாகியுள்ளது. இதைத் தவிர ரூபாய் 4 கோடி செலவில் சில மேம்பாட்டு வேலைகளும் செய்யப்படவுள்ளன. 8 முதல் 9 மாதங்களுக்கு மின் உற்பத்தி இழப்பு ஏற்படுமெனக் கணக்கிடப்பட்டுள்ளதால் மின் வாரியத்திற்கு பெரும் நிதி இழப்பு ஏற்படும். மேம்பாட்டு வேலைகள் செய்யும்பொழுது தற்போது வளர்ந்துள்ள தொழில் நுட்பத்திற்கிணங்க மேம்படுத்தப்பட்ட கருவிகளையே உபயோகிக்கக் கருதப்பட்டுள்ளது. மாற்றுதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகள் முடிக்கப்பட்டு முதல் பிரிவு 1989 மே மாதத்திலும் இரண்டாவது பிரிவு ஜூலை மாதத்திலும் செயல்படத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் மீதான உரையின் மீது எங்களுடைய இயக்கத்தை சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் கொண்டு வந்த நன்றி கூறும் தீர்மானத்தின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை இங்கே நான் கூற விரும்புகிறேன்.

தலைவர் அவர்களே, இங்கே எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் அவர்கள் கவர்னர் உரையாற்றியது முரசொலி தலையங்கம் போல்

இருந்தது என்று சொன்னார். நான் உண்மையில் அதை ஒரு பாராட்டாக எடுத்துக்கொள்கிறேன். காரணம், கவர்னர் உரை என்பது கவர்னர் அவர்கள் எழுதிப் படிக்கும் உரையல்ல. இந்த அமைச்சரவை எழுதித் தருவதைத் தான் கவர்னர் படிக்கிறார். இந்த கவர்னர் உரையைப் பொறுத்தவரையில் முழுக்க முழுக்க தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள்—டாக்டர் கலைஞர் அவர்கள்—எழுதிக் கொடுத்ததைத்தான் கவர்னர் படித்தார். அது முரசொலி தலையங்கம் போல் இருக்கிறது என்று சொன்னால் அதிலே ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. காரணம் முரசொலியில் அன்றாடம் எழுதிக் கொண்டு இருப்பவர் தான் நம்முடைய தமிழகத்திலுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், இங்கே அவர் கவர்னர் உரை முரசொலி தலையங்கம் போல் இருக்கிறது என்று சொன்ன காரணத்தாலே நான் சொல்லுகின்றேன். ஒரு காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் இதனால் தான் சொன்னது—'ஆட்டுக்கு எப்படி தாடி தேவையற்ற ஒன்றோ அதேபோல நாட்டிற்கு கவர்னர் தேவையில்லை என்ற கருத்தை அன்றைக்கே நாங்கள் எடுத்து வைத்தோம். மாண்புமிகு இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் அவர்கள் டெல்லியிலே கூற வேண்டியவர்களுக்கு அதைப் பற்றி கூறி, அந்த கவர்னர் பதவி ஒரு மாநிலத்திற்கு தேவையா என்பதையும் அவர்கள் யோசிக்க வேண்டும் என்று நான் பணிவன் போடு கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர் அவர்களே, நடைபெற்று முடிந்த இந்தத் தேர்தல், ஏதோ சாதாரணமாக திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் களத்திலே நின்றதைப் போலவும், மற்றக் கட்சிகள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் தானே நிற்கிறது, அவர்கள் வெற்றி பெற்றுவிட்டு போகட்டும் என்று பெருந்தன்மையோடு விட்டுவிட்டு சென்றதைப் போலவும், இப்போது பல்வேறு கூட்டல், கழித்தல் கணக்குகளையெல்லாம் போட்டுப் பார்த்து, நாம் அப்படி கூட்டியிருந்தால், இப்படி கழித்திருந்தால் நிலைமை வேறு வேறாக வந்திருக்குமே என்றெல்லாம் இன்றைக்கு பல்வேறு விமர்சனங்கள் நாட்டிலே வந்து கொண்டிருப்பதை நம்மாலே பார்க்க முடிகிறது.

நான் தலைவர் அவர்கள் மூலமாக இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புவது ஏதோ சாதாரணமாக இந்தத் தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெறுவதற்கு

1989 பிப்ரவரி 14] [திரு. இரா. மோகன்]

மத்தியிலே இருக்கின்ற, ஆண்டுகொண்டிருக்கின்ற கட்சியோ அல்லது இங்கே தமிழ்நாட்டில் இருக்கின்ற கட்சிகளோ விட்டு விடவில்லை என்பதை அவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டும். தங்களுடைய முழு சக்தியையும் பயன்படுத்தினார்கள். தங்கள் அதிகாரத்திலே இருக்கின்ற அத்தனை சக்திகளையும் பயன்படுத்தினார்கள். தமிழ்நாட்டில் இருக்கின்ற கட்சிகளும் தங்களுடைய ஆற்றலை, தங்களிடத்திலே இருக்கின்ற எல்லா பலத்தையும் தமிழகம் முழுவதும் பயன்படுத்தி, திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்திலே ஆட்சிப் பொறுப்புக்கு வரக்கூடாது என்பதற்காக எப்படிப்பட்ட பிரச்சாரங்கள் எல்லாம் செய்ய வேண்டுமோ அப்படிப்பட்ட பிரச்சாரங்கள் எல்லாம் செய்யப்பெற்றன. இத்தனை பிரச்சாரங்களுக்கும் பின்னால்தான், எல்லாவிதமான பிரயோகங்களுக்கும் பின்னால்தான், திராவிட முன்னேற்றக் கழகத்தை தமிழக மக்கள் ஏற்றுக்கொண்டு மிகப் பெரிய வெற்றியை அந்த இயக்கத்திற்குத் தந்து, அந்த இயக்கத்தை வழி நடத்திய டாக்டர் கலைஞர் அவர்களை இன்றைக்கு தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சராக அமர வைத்து இருக்கிறார்கள். ஒன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏற்கனவே தங்களிடத்திலே இதைச் சுட்டிக்காட்டுவதற்கு அனுமதி பெற்றிருக்கிறேன்.

Letters to the Editor, Hindu, February 2, 1989 Mr. K. V. Venkatachari. அந்த வாசகர் 'இந்து' பத்திரிகைக்கு எழுதியிருக்கிறார். அதிலே மிக அழகாக அவர் குறிப்பிடுகின்றார். தமிழகத்தினுடைய தேர்தல் முடிவுகளைக் குறிப்பிட்டு திரு. வெங்கடாச்சாரி என்ன சொல்லுகிறார் என்று சொன்னால்

"that the people of this part of the country cannot be carried away by political propaganda with all sorts of tall promises".

இந்தியாவினுடைய இந்தப் பகுதியிலே வாழ்கின்ற இந்த மாநிலத்து மக்களை இன்னும் ஏராளமான நம்ப முடியாத உறுதி மொழிகளை எல்லாம் தந்து, அவர்கள் வழிக்கு அவர்களை அழைத்துச் செல்ல முடியாது என்பதை இந்தத் தேர்தல் முடிவு காட்டியிருக்கிறது. இரண்டாவதாகச் சொல்லுகிறார்,

"that they are able to distinguish between the promises that are capable of being fulfilled and those which cannot be implemented" தரப்படுகின்ற வாக்குறுதிகளில் எவைகளை நிறைவேற்ற முடியும்

எந்தெந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது என்பதையும் வேறுபடுத்திப் பார்க்கக் கூடிய ஆற்றலை தமிழக மக்கள் பெற்று விட்டார்கள்.

"they are intelligent enough to decide for themselves the leader who is capable of delivering the goods."

யார், எந்தத் தலைவன், எந்தத் தலைமை தங்களுக்கு நல்லது செய்ய முடியும், இந்தத் தமிழகத்தை வழிநடத்திச் செல்ல முடியும் என்பதை முடிவு செய்கின்ற ஆற்றலை இந்தத் தமிழக மக்கள் இப்பொழுது பெற்றுவிட்டார்கள் என்று மூன்று அழகான கருத்துக்களை அவர் அந்தக் கடிதம் மூலமாக மக்களுக்கு 'இந்து' பத்திரிகையிலே எழுதியிருக்கிறார். ஆகவேதான் அந்த முடிவினை தமிழகத்திலே இருக்கிற நகர்ப்புறத்து மக்கள் மட்டுமல்ல, தமிழகத்திலே இருக்கிற கிராமப்புறத்து மக்கள் மட்டுமல்ல, எங்கோ நம்முடைய கண்ணுக்குத் தெரியாமல், சிற்றூர்களிலே, பட்டிதொட்டிகளிலே வாழ்கின்ற மக்கள் அத்தனை பேரும் ஒரேமாதிரியான தீர்ப்பை இந்தத் தேர்தலிலே தந்து. தங்களை வழிநடத்துகின்ற தலைவர் யார், தங்களுக்கு நல்ல திட்டங்களை ஆற்றக்கூடிய தலைவர் யார் என்பதை முடிவு செய்த காரணத்தினாலேதான் . . . (குறுக்கீடு)

(முற்பகல் 10-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த அவையைப் பொறுத்த வரையில், உறுப்பினர் கன்னிப் பேச்சை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர்கள் குறுக்கிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இரா. மோகன்: நகர்ப்புறத்திலே, கிராமப்புறத்திலே, சிற்றூர்களிலே வாழுகின்ற மக்களும் ஒரே தீர்ப்பைத் தந்து, தங்களுக்குத் தெரிந்த, தங்களுக்கு உழைத்த, தங்களுக்கு உழைத்துக் கொண்டிருக்கிற, கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை தமிழகத்தின் முதல்வராக்கி இருக்கிறார்கள். இது நாங்கள் கூறுவது அல்ல. வெங்கடாச்சாரி அவர்கள் இரண்டாம் தேதி 'ஹிந்து' பத்திரிகையிலே எழுதி, வந்திருப்பதைத்தான் இங்கே நான் கூறுகின்றேன்.

தலைவர் அவர்களே, மற்றொரு மகிழ்ச்சியான செய்தியினை இங்கே கூறுவதிலே நான் பெருமைப்படுகின்றேன். தமிழ்நாட்டிலே இருக்கிற நாம்தான் இந்தத் தேர்தலை உற்று கவனித்து இருக்கிறோம் என்பதல்ல. இந்தியாவிலே இருக்கின்ற 25 மாநிலங்

களிலே இந்த மாநிலமும் ஒன்று. உலக அளவிலே பார்த்தால் இது ஒரு சாதாரணமான பிரச்சினை. உலக அளவு கண்ணோட்டத்திலே பார்த்தால் இந்த மாநிலத்திலே நடைபெற்ற தேர்தல் அவர்களுடைய கவனத்திற்குக்கூட எட்டியிருக்கிறது என்று கருதலாம். ஆனால் நடைமுறை என்னவென்று சொன்னால், இந்தத் தேர்தலுக்காக ஓராண்டுக் காலமாக செய்யப்பட்ட ஆயத்தங்கள், இந்தத் தேர்தலுக்காக நாட்டினுடைய பிரதமரே நேரடியாகக் கவனம் செலுத்தி, எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள், இதன் காரணமாக உலக அளவிலே இந்த மாநிலத்தினுடைய தேர்தல் அவர்களுடைய கவனத்தை எட்டிய காரணத்தினால் எங்கேயிருந்து வருகின்ற பத்திரிகை என்கிறீர்கள். பூகோளத்திலே பூமி பந்து உருண்டை என்று சொன்னால், நம்முடைய தமிழ்நாடு மேலே இருக்கிறது என்றால், நேர் கீழே இருக்கிற நாடு அர்ஜென்டினா. நமக்கு சம்பந்தமே இல்லாத எத்தனையோ ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் பூமிப் பந்தின் கீழ் பாகத்திலே இருக்கிற அந்த நாட்டிலேயிருந்து வருகின்ற அந்தப் பத்திரிகை Buenos Aires Herald எவ்வளவு ஆழமாக இந்த மாநிலத்தின் தேர்தலை அவர்கள் பரிசீலித்து இருக்கிறார்கள் என்பதற்காகச் சொல்கிறேன். அந்தப் பத்திரிகையிலே இந்த மாநிலத்திலே நடைபெற்ற தேர்தலைப்பற்றிக் குறிப்பிட்டு, 'இந்தியா' என்று போட்டு, இந்தியாவில் நடைபெற்ற ஒரு முக்கிய நிகழ்ச்சி என்று போட்டு, நம் தலைவருடைய இனிஷியல் முன் எழுந்து 'எம்' என்கின்ற காரணத்தினால்,

"Muthuvel takes over:

Mr. Muthuvel Karunanidhi, a charismatic script-writer who led his Party to a landslide victory over Prime Minister Rajiv Gandhi's Congress—I Party in Tamil Nadu Assembly polls, yesterday took power as the State's new Chief Minister."

என்று போட்டுவிட்டு, எழுதப்பட்டிருக்கிறது.

"Gandhi's party came a poor third with 25 Constituencies in a resounding defeat for the Prime Minister as he prepares for Parliamentary elections that must be held before the end of this year.".

"Mr. Gandhi, whose ability to win votes was already under a cloud due to a string of previous State election defeats, staked his personal prestige on the polls, spearheading his Congress-I party campaign by visiting Tamil Nadu as many as 13 times in less than a year."

[திரு. இரா. மோகன்] [1989 பிப்ரவரி 14

ஒரு வருடத்தில் 13 முறைக்குமேல் தமிழ்நாடு என்கிற சிறிய மாநிலத்தில் இந்தியாவினுடைய பிரதமராக இருக்கிற ராஜீவ் காந்தி அவர்களே தொடர்ந்து, தானே பொறுப்பேற்று, பிரச் சாரத்தைத் தானே நடத்தி, சுற்றுப்பயணம் செய்து, ஓட்டர் களைச் சந்தித்த பின்னாலும் என்ன தீர்ப்பு கிடைத்திருக்கிறது என்று சொன்னால், இந்த ஆண்டு இறுதியிலே பாராளுமன்றத் தேர்தலைச் சந்திக்கப் போகிற இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு, ராஜீவ் காந்திக்கு பெரிய தோல்வி இந்தத் தமிழ்நாட்டு தேர்த லிலே, 13 முறை அவருடைய சுற்றுப்பயணத்திற்குப் பின்னாலும் கிட்டியிருக்கிறது என்ற செய்தியை எங்கேயிருந்து வருகின்ற பத்திரிகை, அர்ஜெண்டினாவிலிருந்து வருகின்ற Buenos Aires Herald என்ற பத்திரிகையிலே முதல் பக்கத்திலே போட்டு எழுதுகிறார்கள் என்று சொன்னால், இந்தத் தேர்தல், உலக நாடுகளுடைய கவனத்தைக் கவர்ந்த தேர்தலாக அமைந் தது. உலக நாடுகள் முழுவதுமுள்ள அரசியல் பார்வையாளர் கள் உற்று நோக்குகிற தேர்தலாக அமைந்தது. காரணம் என்ன? ஓராண்டுக் காலமாக இங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியலமைப்பு இல்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு முதலமைச் சர் இல்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அமைச்சரவை இல்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சட்டமன்றம் இல்லை. கவர்னருடைய கையிலே கொண்டு போய் ஆட்சியை ஒப்படைத்தார்கள். ஒரு மாநிலத்தைக் கவர்னர் ஆளுகிறார் என்று சொன்னால், மாநிலத் திற்கு அதைவிட அவமானம் என்ன இருக்கிறது? அந்த அவ மானத்தைச் செய்தார்கள். ஓராண்டுக் காலம் கவர்னர் ஆட்சி —ஜனாதிபதி ஆட்சி என்ற பெயரிலே இங்கே மக்களுடைய குரல் வளை நெரிக்கப்பட்ட ஆட்சி நடைபெற்றது. இறுதியில் என்ன வாயிற்று. ஓராண்டுக் காலத்திற்குப் பின்னால், தேர்தல் முடிந்து, இன்றைக்கு ஒரு முதலமைச்சர் கிடைத்திருக்கிறார். செயல் படுகிற ஒரு முதலமைச்சர் கிடைத்திருக்கிறார். இங்கே குறுகிய காலத்திற்குள்ளாக, பத்திரிகைகளில் வருகிற செய்திகளைப் பார்க்கிறபோது எவ்வளவு மகிழ்ச்சி நமக்கெல்லாம் ஏற்படுகிறது? தி.மு.க.வில் இருக்கிற எங்களுக்கு மட்டுமல்லாமல், காங்கிரஸ் கட்சியில் இருந்தாலும் சரி, கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்தாலும் சரி, ஜனதா தளத்தில் இருந்தாலும் சரி, அ.தி.மு.க விலிருந் தாலும் சரி, எல்லோருக்குமே மகிழ்ச்சி. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு வேகமாக இங்கே செயலாற்று கிறார். நமக்காக டெல்லிக்குப் போகிறார். அங்கே நம்முடைய

1989 பிப்ரவரி 14] [திரு. இரா. மோகன்]

பிரச்சினைகளுக்காக வாதாடுகிறார். 200 கோடி ரூபாயைத் தாருங்கள் என்று அங்கே இருக்கிற பிரதமரோடு வாதிடுகிறார். இலங்கையிலே இருக்கிற தமிழர்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக ஏதாவது செய்ய வேண்டுமென்பதற்காக அங்கே இருக்கிற பிரதம அமைச்சரோடு பேசுகிறார். திரு. நட்வார் சிங் அவர்களோடு பேசுகிறார். இந்தச் செய்திகளெல்லாம் பத்திரிகைகளில் வருகிற போது, 'இயங்குகிற ஒரு முதலமைச்சர்' நமக்குக் கிடைத்திருக்கிறார், 'செயல்படுகிற ஒரு முதலமைச்சர்' நமக்கு கிடைத்திருக்கிறார். 'செயல்படுகிற ஒரு அரசின் கையிலே ஆட்சியை மக்கள் ஒப்படைத்திருக்கிறார்கள்' என்று நாம் அனைவருமே மகிழ்ச்சியடைய வேண்டாமா? இது ஒரு நல்ல சூழ்நிலை என்பதை யாரும் மறுக்க முடியாது.

மற்றொன்றையும் நான் இங்கே பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இங்கே பேசிய சில மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 'தேர்தல் அறிக்கையிலே—அதாவது திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையிலே காணப்பட்டவையெல்லாம் கவர்னருடைய அறிக்கையில் காணப்படவில்லையே' என்று குறிப்பிட்டார்கள். இங்கே இப்போது என் கையிலே இருப்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கை. ஒரு காலத்திலே கட்சிகள் தேர்தல் அறிக்கைகளை வெளியிடுகின்றன என்று சொன்னால் மக்களுக்கு அது என்னவென்றே தெரியாது. ஏன்? அந்தக் கட்சியில் இருக்கிற பல பேருக்கே அது தெரியாது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் தேர்தல் அறிக்கையைத் தயாரித்து என்னென்ன திட்டங்களைச் செயல்படுத்த இருக்கிறோம் என்று ஒரு அறிக்கையாகத் தமிழ்நாடு மக்களிடத்திலே கொண்டு சென்றிருக்கிறோம். என் கையிலே இருக்கிற தேர்தல் அறிக்கை தமிழ்நாடு முழுவதும் இருக்கிற மக்களிடத்தில் லட்சக்கணக்கான துண்டுப் பிரசுரமாக வெளியிட்டு கொடுத்திருக்கிறோம். ஒவ்வொரு தமிழனுடைய கையிலேயும் தேர்தல் நேரத்திலே தரப்பட்டது இந்த அறிக்கை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் தமிழக மக்களிடத்தில் 'மனப்பாடம்' ஆன ஒன்று. யாரையும் ஏமாற்ற முடியாது. சில கட்சிகளின் தேர்தல் அறிக்கையைப் போல் ஏமாற்ற முடியாது. ஏனென்றால் அவைகள் மக்களிடம் போய் எட்டவில்லை. ஆனால் தி.மு.க. தேர்தல் அறிக்கை அப்படி யல்ல. தமிழகத்தில் உள்ள ஒவ்வொருவரின் கையிலும்

இது பத்திரமாக இருக்கிறது. ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நான் சிங்காநல்லூர் தொகுதிக்குப் போனால் அங்கே இருக்கிற சாதாரண குடிமகன் என்னைப் பார்த்து, "என்ன, இப்படியெல்லாம் தேர்தல் அறிக்கையிலே சொன்னீர்கள்? அது என்னவாயிற்று" என்று கேட்பார். இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிக்குப் போனால் அங்கே இருப்பவர்கள் கேட்பார்கள். ஏமாற்ற முடியாது. அப்படி 'மனப்பாடம் ஆன' ஒன்று இந்தத் தேர்தல் அறிக்கை. இந்தத் தேர்தல் அறிக்கையிலே காணப்பட்டவை நிறைவேற்றப்படவில்லையே என்று இங்கே சிலர் சொன்னார்கள். நான் கேட்கிறேன். எது நிறைவேற்றப்படவில்லை? எவ்வளவு வேகமாக, கவர்னர் உரையிலே இன்றைய தினம் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டாமா? இந்தித் திணிப்புப்பற்றி இல்லையா? இதிலே மாநில சுயாட்சிபற்றி இல்லையா? தொழில் வளர்ச்சி பெருக வேண்டும் என்று இல்லையா? எது இல்லை? ஆனால் பேசிய வர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். "மாநில சுயாட்சி என்று சொன்ன காரணத்தால், இங்கே மக்களுடைய வயிறு நிரம்பி விடுமா? என்று கேட்டார்கள். இப்படியே பேசுவது என்றால், பேசிக் கொண்டே போகலாம். அப்படிப் பார்த்தால் "இந்தி என்று பேசினால் இங்கே நமக்கு என்ன வருகிறது" என்றுகூட பேசலாம். இதெல்லாம் நியாயமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் எதற்காக மாநில சுயாட்சி கேட்கிறோம்? இருக்கிற அதிகாரங்கள் எல்லாம் மத்தியிலே குவிக்கப்பட்டிருப் பதைப் பாவலாக்கினால் தான் இன்னும் பல்வேறு நல்ல திட்டங் களை தமிழக மக்களுக்குச் செயல்படுத்தி அவர்களின் வறுமை யைப் போக்க முடியும் என்ற காரணத்திற்காகத்தான் மாநில சுயாட்சி கேட்கிறோமே தவிர, அதிகாரங்களையெல்லாம் வாங்கி மூட்டை கட்டி வீட்டில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற் காக அல்ல. நிரம்ப அதிகாரம்பெற்ற முதலமைச்சர் என்ற பதவியில் செயல்படாமல் உட்கார்ந்து இருக்க வேண்டும் என்பதற் காகக் கேட்கவில்லை? எதற்காகக் கேட்கிறோம் மாநில சுயாட்சி? இந்த முதலமைச்சர் என்றில்லை. நாளைக்கு யார் இந்தச் சட்டமன்றத்தின் முதலமைச்சராக உட்கார்ந்தாலும் சரி, அதிக அதிகாரம்பெற்ற முதலமைச்சராக இந்த மாநிலத்தில் அவர் திகழ வேண்டும் என்ற உணர்வோடும்தான் கேட்கிறோமே தவிர, தி.மு.க. வுக்கு மட்டும் கேட்கவில்லை (மேசையைத் தட்டும் ஒலி).

1989 பிப்ரவரி 14] [திரு. இரா. மோகன்]

இங்கே மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். பாராளுமன்றத்தில் மாநில சுயாட்சி பற்றிய தீர்மானம் வந்தபோது, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தர வேண்டும் என்றும், எங்களுடைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர்., அவர்களுக்கு அதிக அதிகாரத்தை வழங்க வேண்டும் என்றும் தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக பாராளுமன் றத்தில் குரல் கொடுத்த உறுப்பினர்களில் ஒருவன் என்று இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

தி.மு.க. விற்காகக் கேட்பதல்ல. இந்த மாநிலத்தினுடைய உரிமைகள் பறி போகக்கூடாது என்பதற்காகக் கேட்கக்கூடிய ஒரு வாதம். அதைக் கொச்சைப் படுத்தக்கூடாது என்று பணி வன்போடு கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது) இரண்டு, மூன்று பிரச்சினைகளைப் பேசுவதற்கு தலைவரவர்கள் அனுமதிக்க வேண்டும்.

இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினைகளைப் பற்றி இந்தத் தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலே எடுத்த வுடன் சொல்லியிருக்கிறோம். வேறு எந்தக் கட்சி சொல்லி யிருக்கிறது? சில கட்சிகள் சொல்லியிருக்கின்றன. சில கட்சிகள் சொல்லவில்லை. அகில இந்திய கட்சி, இந்திரா காங்கிரஸ் கட்சி, இங்கே என்ன கிடைக்கும் என்று சொன்ன கட்சி, இலங்கைத் தமிழர்கள் பற்றி ஏதாவது ஒரு வார்த்தை தேர்தல் அறிக்கையிலே சொன்னதா? சொல்லவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் சொன்னது. ஏன் சொன்னது? தமிழர்களோடு ஒன்றிப்போன கட்சி அது. எனவே இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை வந்த போது, சட்டமன்றப் பதவியைத் தூக்கி எறிந்த இரண்டு தலைவர் கள் முன்னாலே உட்கார்ந்திருக்கிறார்கள்—தலைவரும், பேராசிரி யர் அவர்களும் (பலத்த மேசையைத் தட்டும் ஒலி). அந்தப் பிரச்சினையை வலியுறுத்துவதற்காக, அந்தக் காரியத்தைச் செய் தார்கள். 7 வருடங்கள் முதலமைச்சராக இருந்தவர்கள் தலைவர் அவர்கள். பக்கத்திலே உள்ள பேராசிரியர் பல்லாண்டுக்காலம் அமைச்சராக, பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர்கள். ஒவ் வொருத்தருக்கும் 50 ஆண்டுக்கால பொது வாழ்வு சொந்தம். இத்த னைக்கும் பிறகு, அவர்கள் தங்களுடைய 60. 62 வயதில் இலங்கைத் தமிழருக்காக போராட்டம் நடத்தி, சென்னை சிறை

யிலே அடைபட்டார்கள் கைதிகளைப்போல. இத்தனை ஆண்டுக் காலமாக பாடுபட்ட அந்தத் தலைவரை, ஒரு தலைவருக்குத் தரவேண்டிய சாரசரி மரியாதைகூடத் தராமல், ஒரு முன்னாள் முதலமைச்சர் என்றுகூடப் பார்க்காமல், தமிழுக்காகப் பாடு பட்ட தலைவராயிற்றே என்ற அந்த உணர்வுகூட இல்லா மல், சாதாரண கைதிகளுக்குத் தரும் உடையை அணி வித்து, சிறையிலே அடைத்தார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. எதற்காக அந்தத் தியாகம் செய்தோம்? இலங்கை யிலே வாழும் அந்தத் தமிழர்கள், நம்முடைய சகோதரர்கள் அன்றாடம் சாகிறார்கள், அன்றாடம் சுடப்பட்டு சாகிறார்கள். அந்தத் தமிழனுடைய வாழ்விலே ஒளி பிறக்க வேண்டுமென்பதற் காக அந்தத் தியாகம் செய்தார்கள். தேர்தல் அறிக்கையிலே அதைச் சொன்னோம். தேர்தல் அறிக்கையிலே சொன்ன அந்தக் காரியத்தை நிறைவேற்ற வேண்டுமென்பதற்காகத் தான் டெல்லிக்குச் சென்ற முதல் நாள், பிரைம் மினிஸ்டர் அவர்களைப் பார்த்த முதல் நாள், இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினை யைத் தீர்ப்பதற்கு என்ன திட்டம் வைத்திருக்கிறீர்கள் என்று இவராகப் போய் கேட்டு, திரு. நட்வார் சிங் அவர்களை இவரி டத்தில் பேசச் சொல்லி அவர் அனுப்பி, திரு. நட்வார்சிங் அவர் களிடத்திலே இந்தப் பிரச்சினையைப் பற்றி அந்த இலாக்கா அமைச்சரோடு விவாதித்து, திரும்பி வருவதற்குக் கடைசி நாள் மாலை மறுபடியும் பிரதமரைப் போய் பார்த்து எப்படியாவது இந்தப் பிரச்சினைக்கு ஒரு பரிகாரம் காண வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். பத்திரிகையாளர்கள் எல்லாம் வந்து கேட்கிறார்கள் என்ன பரிகாரம் கண்டீர்கள் என்று. We want peace எங்களுக்கு ஒரு அமைதி தேவை, அமைதி என்று சொன்னால், Genuine peace அது ஒரு உண்மையான அமைதியாக இருக்க வேண்டும். எப்படிப்பட்ட அமைதியாக இருக்க வேண்டுமென்றால், Lasting peace நீடித்த அமைதியாக இருக்க வேண்டும். இந்தக் குறிக்கோள்களை அங்கே எடுத்துச் சொல்லி, பிரதமர் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, அதை நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லியிருக் கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கை யிலே காணப்பட்டது இதிலே காணப்படவில்லை என்று சொல்லு கிறார்களே, இது காணப்படவில்லையா? சொன்னதை நிறை வேற்றுவதற்காக கலைஞர் எடுத்துக்கொண்ட முயற்சி அல்லவா இது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

அடுத்து, மிக முக்கியமானதொரு பிரச்சினையை, தலைவரவர்களே, நான் இங்கே சொல்லுவதற்கு விரும்புகிறேன். 1976 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி டிஸ்மிஸ் செய்யப்பட்டது. காரணம், இந்த அவை முழுவதற்கும் தெரியும். தலைவரவர்களே, தங்களுக்கும் தெரியும். ஜனநாயகத்தினுடைய குரல் வளை நெரிக்கப்பட்டபோது, அது தவறு என்று சொன்ன காரணத்திற்காக தண்டிக்கப்பட்டோம். அன்று ஆட்சியை விட்டு டிஸ்மிஸ் செய்யப்பட்டபோது, தமிழகத்தினுடைய நிதி நிலைமை என்ன? 14 கோடி ரூபாயிலிருந்து 17 கோடி ரூபாயாக இருப்பு வைத்துவிட்டு நம்முடைய ஆட்சி கீழே இறக்கப்பட்டது. இன்றைக்கு இந்தப் புதிய ஆட்சி பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கிற சூழ்நிலையில், 1989-லே, 13 ஆண்டுக் காலத்திற்குப் பின்னாலே, முதலமைச்சர் பொறுப்பை மீண்டும் கலைஞர் ஏற்கிற நேரத்தில் நிதி ஆதாரம் என்ன? டெபிசிட் பட்ஜெட்—மைனஸ் 70 கோடி ரூபாய். எங்கே நிறுத்தப்பட்டிருக்கிறோம் நாங்கள்? இங்கே இருக்கும் சில கட்சிக்காரர்கள், அன்புக்குரிய மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள், கவர்னர் உரையிலே இன்னும் ஏராளமாக அறிவித்திருக்க வேண்டாமா என்று. ஆசை இல்லையா எங்களுக்கு? முதலமைச்சருக்கு ஆசை இருக்காதா? எங்கே அறிவிப்பது இன்னும்? 70 கோடி ரூபாய் டெபிசிட் பட்ஜெட்டிலே இந்த மாநிலத்தை முதலமைச்சரவர்களின் கையிலே ஒப்படைத்திருக்கிறீர்களே, அந்த நிதி ஆதாரத்தைப் பெருக்கி இந்த மாநிலத்தை வழி நடத்திச் செல்ல வேண்டிய கால அவகாசத்தைத் தர வேண்டுமென்ற ஈவு இரக்கம்கூட இல்லாமல் அத்தனையும் கவர்னர் உரையிலேயே அறிவிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அவர்கள் செய்யத்தான் போகிறார்கள். அதைத்தான் முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மற்றொன்றை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்போது கஜானா காலியாக இருக்கலாம். களஞ்சியம் காலியாக இருக்கலாம். தமிழ் நாட்டிலே ஏற்பட்டிருக்கக்கூடிய . (மணி அடிக்கப்பெற்றது) தலைவரவர்களே, இதை நான் சொல்லாமல் விட்டால் நான் என்னுடைய கடமையிலிருந்து தவறியவர் ஆவேன். தயவு செய்து அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மிக மிக முக்கியமான பிரச்சினை. அநாவசியமாக எந்த பிரச்சினையையும் நான் பேசமாட்டேன். அதனாலேதான் பார்லிமெண்டிலேயே கூட அப்படிப் பேசிப் பழக்கம் இல்லை. திட்டத்

தொகை மிகமிக முக்கியமான பிரச்சினை. அதாவது தமிழ் நாட்டிலே ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு துரதிருஷ்டவசமான சூழ் நிலை. நாம் எல்லோரும் சேர்ந்து இதிலே முயற்சித்து நல்லது செய்யவேண்டும். இதிலே அரசியல் கிடையாது. தமிழ்நாடு வரலாற்றில் முதன்முறையாக, திட்டத் தொகையை குறைக்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கியமான சூழ்நிலையில் நம் மாநிலம் இருக்கிறது என்பதை நாம் மறுக்கக்கூடாது. இதுவரையில் அது இல்லை. ஏன் இந்த சூழ்நிலை ஏற்பட்டது? கையிலே இருப்பது

" Economic Times ".

"This is perhaps for the first time in the recent past that Tamil Nadu, known for its higher performance and higher plan outlay, is resorting to the unpleasant task of reducing what the Governor called 'unattainable approved plan outlay of Rs. 1,457 crores " . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எந்த கட்சியாக இருந்தாலும் சரி, அது ஆளுங் கட்சியானாலும், எதிர்க்கட்சியானாலும், ஒரு உறுப்பினர் அதிக நேரம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பினால் அந்த நேரத்தை அந்தக் கட்சியைச் சேர்ந்த இன்னொரு உறுப்பினரிட மிருந்து கடன் வாங்கித் தந்துவிட வேண்டும். இன்னொரு உறுப் பினர் பேசுவதை நிறுத்திக் கொள்வதாக இருந்தால்தான் அந்த உறுப்பினரைப் பேச நீடிப்பது நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் ஒரு மணித் துளியில் முடிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உங்களுடைய அதிக நேரத்தை உங்கள் கட்சி சார்ந்த மற்றொரு உறுப்பினரிடமிருந்து நீங்கள் பெற்றுக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

திரு. இரா. மோகன்: பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் முடித்துக் கொள்கிறேன். அதாவது திட்டமிட்ட தொகையைக் குறைக்கவேண்டிய நிலைமை, நம்முடைய வரலாற் றில் முதன்முறையாக ஏற்பட்டிருக்கிறது என்று அறிவிக்கப்பட் டிருக்கிறது. அதாவது 1,457 கோடியிலிருந்து இந்த ஆண்டு திட்டத் தொகையைக் குறைக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட் டிருக்கிறது. இதிலே என்ன சொல்கிறார். 'Economic Times' பத்திரிகைக்காரன். . முதன் முறையாக, இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை நமக்கு ஏற்பட்டிருக்கிறது என்ற தகவலை இந்த

1989 பிப்ரவரி 14] [திரு. இரா. மோகன்]

அவைக்கு அறிவித்து கடைசியாக நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புவது . . . (மணி அடிக்கப்பெற்றது). ஒரே ஒரு வார்த்தை. இந்த நிமிடத்தோடு முடித்துக் கொள்கிறேன். மிக மிக முக்கியமான பிரச்சினை. அதற்காகத்தான் சொல்கிறேன். நம்முடைய கவர்னர் அவர்கள் ஒரு நான்கு நாட்களுக்கு முன்னால் குறிப்பிட்டு இருக்கிறார்கள். Indian Express பத்திரிகையிலே வந்திருக்கிறது. 'Industry in doldrum when Governor took over Tamil Nadu' அதிலே ஒரு பரிதாபகரமான சூழ்நிலையை அவர்கள் இங்கே சுட்டிகாட்டியிருக்கின்றார்கள். என்ன என்று சொன்னால்,

'I was shocked at the state of affairs of the industry when I took over administration of the State'

நான் ஓராண்டு காலத்திற்கு முன்னால் இந்த மாநிலத்தினுடைய பொறுப்பை ஏற்கிறபோது இந்த மாநிலத்தினுடைய தொழில் நிலைமையைப் பார்த்து அதிர்ச்சி அடைந்துவிட்டேன். அதற்குக் காரணம் சொல்கிறார்.

'An analysis of the loans advanced to industries revealed that out of 28,000 cases of loans advanced by the TIIC 18,000 got into default and 90 per cent of them were small scale industries. A mere 10,000 repaid the loans periodically.'

28 ஆயிரம் தொழிற்சாலைகளை அவக்குவதற்கு T.I.IC. யிலே கடன் கொடுத்ததில் 18 ஆயிரம் பேர்கள் அந்த கடனைத் திருப்பிக் கொடுக்காமல் default ஆகியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு நம்முடைய மாநிலத்தினுடைய நிதி வளம் எங்கே போய் இருக்கிறது என்பதை மட்டும் நான் இங்கே எடுத்து காட்டுகிறேன். இவைகளை எல்லாம் தாண்டி. இவைகளை எல்லாம் மீறி நலிந்து கிடக்கின்ற இந்த தொழிற்சாலைகளை மூடிக் கிடக்கின்ற ஆலைகளை, என்னுடைய சிங்காநல்லூர் தொகுதியிலே மூடப்பட்டு கிடக்கின்ற பஞ்சாலைகளை எல்லாம் திறக்கின்ற மிகப் பெரிய நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளவேண்டும். அந்த அரசு மேற்கொள்வதற்கான எல்லா விதமான நடவடிக்கையும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அமைச்சரவையும் மேற்கொள்ள வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுங்கட்சியைச் சார்ந்த உறுப்பினர் அவர்கள், அதிக நேரத்தை எடுத்துக் கொண்ட காரணத்தினால் ஆளுங்கட்சியைச் சார்ந்த மற்றொரு உறுப்பின ருடைய வாய்ப்பு மறுக்கப்படுகிறது என்பதைக் கூறி அடுத்து திருமதி பாப்பா உமாநாத் அவர்களை உரையாற்றக் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, பாராளுமன்றத்திலே உறுப்பினராக இருந்த மாண்புமிகு உறுப் பினர் திரு. மோகன் அவர்கள் இங்கே கன்னிப் பேச்சை நிகழ்த் தியதால் குறுக்கிடக் கூடாது என்று நான் அமர்ந்திருந்தேன். அவர்கள் இங்கே சுட்டிக் காட்டிப் பேசியபோது அர்ஜென்டினா விலேயிருந்து வருகின்ற ஓர் ஏட்டினுடைய கருத்துக்களை இங்கே எடுத்து வைத்து மிக விளக்கமாக கருத்துக்களைச் சொன்னார். நடந்து முடிந்த தேர்தலில் தமிழ்நாட்டிலே காங்கிரஸ் கட்சி வெற்றி பெற காரணமாக இருந்தது ராஜீவ் காந்தி அவர்களுடைய தமிழக வருகை என்று எழுதியிருந்தார்கள். ராஜீவ் காந்தி அவர் களுடைய தமிழக வருகை பற்றி எழுதியிருந்தார்கள். Muthuvel takes over என்கிற செய்தி வந்ததாக, பொருள்பட கூறினார். அந்த வகையிலே பிரதமருக்கு நாங்கள் நன்றி தெரி விக்க வேண்டும். தமிழ்நாட்டிலே நடைபெற்ற தேர்தல் பற்றி, முடிவுகளைப் பற்றி வெளி உலகத்திற்கு தெரிவிக்க நம்முடைய பிரதமருடைய வருகை துணை புரிந்திருக்கிறது. இரண்டாவதாக 25 சட்டமன்ற தொகுதிகளிலே காங்கிரஸ் கட்சி வென்றது என்றும் 13 முறை பாரத பிரதமர் தமிழ் நாட்டுக்கு வருகை தந்தார் என்றும் அந்த ஏடு எண்ணிக்கைப் பற்றி கூறியிருக்கிறது. ஆனால் அந்தப் பத்திரிக்கையின் எண்ணத்திலே தவறு செய்திருக்கிறது. ராஜீவ் காந்தி அவர்களுடைய செல்வாக்கு குறைந்திருக்கிறது என்று அந்தப் பத்திரிக்கை சொல்லியிருக்கின்றது. ராஜீவ் காந்தி யினுடைய செல்வாக்கு குறைந்திருக்கிறது என்று அந்தப் பத்திரிகை கணித்திருக்கிறது என்று சொன்னால் எண்ணிக்கை யிலே தவறு செய்திருப்பதுபோல எண்ணத்திலும் தவறு செய் திருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒவ்வொருவருடைய பேச்சுக்கும் அவ்வப்போது காங்கிரஸ் கட்சி யினுடைய துணைத் தலைவர் அவர்களே விளக்கம் கேட்டுக்

கொண்டு எழுந்தால் அது ஒழுங்கும் அல்ல, ஒழுங்குப் பிரச்சினையும் அல்ல.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தவறாக எதையாவது சொன்னால் அதை சுட்டிக் காட்டுகின்ற பணியைத்தான் காங்கிரஸ் கட்சி செய்திருக்கிறது.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, யாராவது தவறாகச் சொன்னால் அதைச் சுட்டிக்காட்டுகின்ற பொறுப்பை பின்னால் பேசுகின்ற உறுப்பினர்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமேயொழிய அவையினுடைய நேரத்தை வீணடிக்கின்ற முறையில் இப்படிப்பட்ட முறையில் குறுக்கீடுகள் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, முன் வரிசையிலே இருக்கின்ற காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களுக்கு முன்பு பேசியவர்கள் ஏதாவது தவறாக பேசியிருந்தால் அவர்கள் எழுந்து சுட்டிக் காட்டுவது தவறல்ல. அது இந்த அவையினுடைய மரபாக ஏற்கெனவே இருந்துகொண்டுதான் இருக்கிறது. அந்தவகையில் காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் இங்கே குறிப்பிட்டது தவறான கருத்தாக இருக்க முடியாது. ஆனால் 26 பேர் வெற்றி பெற்றதை அர்ஜென்டினா பத்திரிகை 25 பேர் வெற்றி பெற்றிருப்பதாகக் குறிப்பிட்டிருந்ததை இங்கே சுட்டிக் காட்டினார்கள். அர்ஜென்டினா பத்திரிகையினுடைய நிருபர் யாரும் இந்த அவையிலே இல்லாத காரணத்தால் அதை உடனடியாகத் தெரிவிக்க முடியாது. (சிரிப்பு) காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னதன் வாயிலாக அர்ஜென்டினா பத்திரிகை அதைத் திருத்திக் கொள்ளும் என்று கருதுகிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்னுமொன்றைச் சொல்கிறேன். அவர்கள் எண்ணிக்கையை மட்டுமல்ல எண்ணத்தையும் திருத்திக்கொள்ள வேண்டும். அது மாத்திரமல்ல Powerful Screen Play Writer, Movies Script writer என்கிற வகையில் எண்ணிக்கை தவறு மட்டுமல்ல எண்ணத்திலும் தவறு செய்திருக்கிறார்களே, அதையும் திருத்திக் கொள்ள வேண்டும். அதையும் மாற்ற அவர் சொல்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் திரு. மோகன் அவர்களிடத்திலிருந்து அந்தப் பத்திரிகையை வாங்கி, பத்திரிகையின் முகவரியைப் பெற்று அந்த விவரங்களை எல்லாம் அந்தப் பத்திரிகைக்கு எழுத வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 13 முறை ராஜீவ் காந்தி அவர்கள் பிரதமர் அவர்கள் தமிழகத்திற்கு வருகை தந்ததாக இங்கே குறிப்பிட்டார்கள். ஆளும் கட்சியினுடைய தேர்தல் அறிக்கை பற்றி இங்கே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் அனைவரும் இருக்கைகளில் அமர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே எதிர் வரிசையில் இருக்கின்ற காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களுக்கு விளக்கம் அளிக்க அவகாசம் கொடுத்துவிட்டோம். முதல்வர் அவர்களும் ஏற்புரை அளித்திருக்கிறார்கள். எனவே இப்பொழுது திருமதி பாப்பா உமாநாத் அவர்களைப் பேசுமாறு அழைக்கிறேன்.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தமிழகத்து வாக்காளர்கள் ஒரு சரியான தீர்ப்பை வழங்கியிருப்பதோடு, அதன் சிறப்பான பிரதிபலிப்பை நாடு முழுவதும் ஏற்படுத்தியிருக்கக் கூடிய அவர்களுக்கும், என்னை உறுப்பினராகத் தேர்ந்தெடுத்திருக்கக்கூடிய திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளர்களுக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு ஆளுநர் உரையில் பல நல்ல திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருப்பது உண்மைதான். ஆனால் அனைத்துப் பகுதி மக்களையும் பாதிக்கக்கூடிய விலைவாசி ஏற்றம், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றி, அதனுடைய தீமைகளைச் சுட்டிக்காட்டியிருக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன்.

குறிப்பாக, மத்தியிலே ஆளக்கூடிய காங்கிரஸ் கட்சியினுடைய அரசாங்கம் ஒவ்வோராண்டும் போடக்கூடிய பட்ஜெட்டின் விளைவாகப் பற்றாக்குறையை ஏற்படுத்துவதன் காரணமாக விலைவாசி

1989 பிப்ரவரி 14] [திருமதி பாப்பா உமாநாத்]

பறந்து கொண்டிருக்கிறது. எல்லாப் பொருளுமே ஏறத்தாழ ஓராண்டுக் காலமாகவே தொடர்ச்சியாக, இந்தச் சமீப காலமாக ஏறிக் கொண்டிருக்கிறது. அதனால், எவ்வளவுதான் வருமானம் வந்தாலும்கூட மக்கள் வாழ முடியாத துன்ப துயரங்களில் தள்ளப் படுகிறார்கள். சென்ற ஆண்டு பட்ஜெட் மட்டுமல்ல, அடுத்த மாதம் வரக்கூடிய பட்ஜெட்டிலும் என்ன கொடுமைகள் வரப் போகிறதோ என்ற ஒரு அச்சத்தை மக்கள் அனுபவித்துக் கொண் டிருக்கிறார்கள்.

நான் கூற விரும்புவது, நியூட்டனின் தத்துவத்தைப் போல புவியீர்ப்புத் தத்துவம் என்பது மேலே எதைத் தூக்கியெறிந் தாலும் கீழ் நோக்கி வரும் என்பது. ஆனால் மத்தியில் இருக்கக் கூடிய காங்கிரஸ் ஆட்சி தூக்கியெறியக்கூடிய விலைவாசி உயர்வு கீழே வருவதே இல்லை. மாறாக, புவியீர்ப்புப் பகுதியைத் தாண்டி, வானவெளியிலே சஞ்சரித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட விலைவாசி உயர்வைச் சமாளிப்பதற்காக பொதுத் துறையைக் கொஞ்சம் வேகப்படுத்தி—பொது விநியோக முறையை நாம் அமுலாக்க வேண்டுமென்ற முறையில் சில யோசனைகளை நான் சொல்ல விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இந்தச் சபைக்கு நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, நம்முடைய பொது விநியோக முறையில் தரக்கூடிய அரிசி சம்பந்தமாக. இருபது கிலோ அரிசி நல்ல அரிசி. தரமான அரிசி தரவேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். அதற்காக மத்திய தொகுப்பிலிருந்து கூடுதலாக கோரிப் பெறு வதற்கு நமக்கு உரிமை உண்டு. அது மத்திய ஆட்சியின் சொந்த மும் அல்ல, நாமெல்லாம் பிச்சைக்காரர்களும் அல்ல. ஆகவே, அதி லிருந்து நாம் பெறுவதற்கு உரிமையிருக்கிறது. ஆனல் துரதிருஷ்ட வசமாக மத்தியில் இருக்கக்கூடிய காங்கிரஸ், அந்த ஆட்சி ஒரு அரசியல் காழ்ப்புணர்வோடு என்பதாயிரம் டன் கொடுத்து வந்திருக்கக்கூடிய அந்த அரிசியை சரிபாதியாக வெட்டிக் குறைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, தேர்தல் முடிந்து அரசு பொறுப்பேற்கும்பொழுது அரிசி விலையைத் திடீரென்று உயர்த்தி னார்கள். ஆகவே, இப்படிப்பட்ட முறை சரியல்ல என்பதை நான் சுட்டிக்காட்டுவதோடு, நாம் கூடுதலாக ஒரு இலட்சம் டன் அரிசியாவது வாங்க வேண்டுமென்ற ஒரு நிலையை வலியுறுத்த வேண்டுமென்று கோருகிறேன்.

அதுமட்டுமல்ல. இப்படிக் குறைப்பது என்பது நம்முடைய தமிழகத்தில் மட்டுமல்ல, கேரளத்தில்கூட இடதுசாரி ஜனநாயக ஆட்சி ஏற்பட்ட நாலே மாதத்தில் முதல் தடவை இருபதாயிரம் டன்னும் இரண்டாவது முறை ஒரு வாரத்திற்குள்ளாக இருபத்தைந்தாயிரம் டன்னும் குறைத்து வெற்றிப் புகழ் பெற்றார்கள்.

அதுமட்டுமல்ல, நான் உங்களுக்கு குறிப்பிட விரும்புவது அரிசியிலே அரசியல் நடத்தக்கூடாது என்பது என்னுடைய கருத்து. ஏனென்று சொன்னால் ஒரு மாநிலத்தில் மக்களெல்லாம் சேர்ந்து ஒரு ஆட்சியை தேர்ந்தெடுக்கிறார்கள் தேர்தலில். அந்த ஆட்சி காங்கிரஸ் கட்சியினுடைய ஆட்சி இல்லை என்று சொன்னால், இப்படிப்பட்ட முறையில் அவர்களுக்கு, அந்தப் பகுதி மக்களை, வாக்களித்த மக்களைப் பட்டினி போட்டு அவர்களைப் பழி வாங்கக்கூடிய நிலையை நாம் அனுமதிக்கக்கூடாது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்கிறேன்.

நியாய விலைக் கடைகளில் இருபது கிலோ அரிசியோடு, மிளகாயும், பருப்பு வகைகளும், எண்ணெய் வகைகளும் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்வதோடு எடையைக் குறைப்பது, அளவைக் குறைப்பது என்ற நியாய விலைக் கடைகளினுடைய முறைகேட்டைக் களைந்து முறைப்படுத்த வேண்டும். உடனடியாக முடியும் என்று நான் சொல்லவில்லை. நீண்ட நெடுங்காலமாக இருக்கக்கூடிய பிரச்சினை. அதைக் கண்காணிப்புக் குழுக்கள் மூலமாக அதிகாரப் பற்றற்ற கண்காணிப்புக் குழு மூலமாக, குறிப்பாக மாதர் இயக்கத்தினுடைய பிரதிநிதிகளுக்கு அதிக பங்கும், பொறுப்பும், அதிகாரமும்கொடுத்து, நிலைநிறுத்தப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன் ஒரு நிபந்தனை விதிக்கப்படுகிறது. அதாவது ஒரு பொருளை வாங்கவேண்டுமென்று சொன்னால் ஒரு மோசமான வாசனை சோப் அல்லது வேறு ஏதாவது ஒரு பொருளை கட்டாயம் வாங்க வேண்டுமென்ற ஒரு நிபந்தனை விதிக்கிறார்கள். மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் இதற்கு ஒரு தகுந்த ஏற்பாடு செய்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1989 பிப்ரவரி 14]

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆட்சி பொறுப்பேற்றுக்கொண்ட உடன் எந்தக் கூட்டுறவு சொசைட்டியிலும் மக்களை வற்புறுத்தக்கூடாது என்றும் அவர்கள் எந்தப் பொருளைக் கேட்கிறார்களோ அதைத் தான் வழங்க வேண்டுமென்றும் அதிலும் குறிப்பாக அரிசி ஒரு நாளைக்கு, கெரோசின் ஒரு நாளைக்கு, சர்க்கரை ஒரு நாளைக்கு, பாமாயில் ஒரு நாளைக்கு என்று கொடுத்தவந்த முறையை மாற்றி, மார்ச் 1 ஆம் தேதி முதல் எல்லாப் பொருள்களும் ஒரே நாளில் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்றும் இந்த அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் ஆனால் பல இடங்களில் இன்னும் இந்த நிலைமை இருப்பதால் கூறுகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இது கன்னிப் பேச்சாக இருக்கிறது. அவர்கள் குறிப்பிட்டதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்து விட்டார்கள். ஆகவே, கன்னிப் பேச்சில் குறுக்கீடு இல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்களைத் தொடர்ந்து பேச அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏதாவது ஐயப்பாடு இருந்தால், அல்லது விளக்கம் கேட்கவேண்டுமென்று விரும்பினால் உரையை முடித்த பிறகு கேட்கலாம்.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஏற்பாட்டை செய்திருந்தாலும் எல்லாக் கூட்டுறவு ஸ்டோர்களுக்கும் இந்த உத்தரவை அனுப்ப வேண்டும்; உத்தரவுபடி நடந்து கொள்கிறார்களா என்பதையும் கண்காணிக்க வேண்டும். நான் இதைச் சொல்வதற்குக் காரணம் சில இடங்களில் இன்னும் இந்த நிபந்தனை இருக்கிறது.

அது மட்டுமல்ல, கிராமப்புறங்களில் நியாயவிலைக் கடைகள் இரவு 7-00 மணி வரையிலாவது திறந்திருக்க வேண்டும். அப்படியானால்தான் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற பெண்கள் தங்

களுடைய வேலை முடிந்த பின்னால், அங்கே சென்று பொருள்களை வாங்குவதற்கு வசதியாக இருக்கும்; அவர்களுக்கு உதவியாக இது இருக்கும்.

இன்றைக்கு தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால் வேலையில்லாத நிலைமை, அதனால் பல கஷ்டங்கள் இருக்கின்றன. தமிழ்நாட்டில் மட்டும் படித்து பட்டம் பெற்ற பெண்களும் ஆண்களும் 20 இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள். படித்து வேலையில்லாத காரணத்தால் ஓரளவுக்கு உதவித் தொகை பெறுபவர்கள் ஒரு பக்கம் இருந்தாலும் உதவித்தொகை பெறாதவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பை உருவாக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். நாளைக்கே வேலை வாய்ப்பை உருவாக்கிவிட முடியும் என்று நான் கூறவில்லை. ஆனால் அதுவரை அவர்கள் பட்டினியால் சாகாமல் தடுப்பதற்கு கணிசமான உதவித்தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு கிராமப்புறங்களில் வேலைக்கு உத்தரவாதம் அளிக்கும் திட்டங்களை உருவாக்கினால் கிராமப்புற மக்களுக்கு பயனுடையதாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, குடிநீர் பிரச்சனைப்பற்றி கூற விரும்புகிறேன். குடிநீர் பிரச்சனை தமிழ்நாடு பூராவும் பரவலாக இருக்கிறது என்னுடைய தொகுதியில் ஏறக்குறைய 70 சத வீதம் மக்கள். சாதாரண மக்கள் நம்மை கேட்பதெல்லாம் குடிப்பதற்கு தண்ணீர் கொடுங்கள் என்பதுதான். இதற்கு முன்னால் ஆட்சியில் இருந்தவர்கள் இதிலே போதுமான அக்கறை காட்டவில்லை. அதனால் இன்றைக்கு அதிகமான கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் இன்னும் கோடைக்காலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. அதனால் இப்போதே உன்னிப்பாக கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கெனவே உள்ள குடிநீர் திட்டங்களை அமலாக்குவதோடு, புதிய திட்டங்களையும் உருவாக்கி, எல்லாப் பகுதி மக்களுக்கும் நல்ல குடி தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்தால்தான் வருங்காலத்தை நாம் ஓரளவுக்கு சமாளிக்க முடியும். குறிப்பாக பொன்மலை நகராட்சியில் கூட்டுக் குடிநீர் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டால்தான் பெரும் பகுதி மக்களுக்கு பயனுடையதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

1989 பிப்ரவரி 14] [திருமதி பாப்பா உமாநாத்]

மேலும், திருச்சி பகுதியில் ஒரு எரி சாராயத் தொழிற்சாலை இருக்கிறது. அது தனியாருக்குச் சொந்தமானது. அதிலுள்ள கழிவு நீர் உய்யகொண்டான் கால்வாயில் கலக்கிறது. அதனால் அந்த நீர் பயிர் சாகுபடிக்கும் பயன்படவில்லை ; குடிப்பதற்கும் பயன்படவில்லை ; ஆடு மாடு குடிக்கவும் பயன்படவில்லை. இந்த நிலைமை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. 12 ஆண்டு காலமாக இப்படித்தான் இருந்துகொண்டிருக்கிறது. அந்தத் தண்ணீர் கறுப்பாக இருக்கிறது. நான் தேர்தல் பிரச்சாரத்திற்காக சென்ற போது அங்கே உள்ளவர்கள் அந்தத் தண்ணீரில் பாலை ஊற்றி, சிறிது சர்க்கரை போட்டு தந்தார்கள். அந்த அளவுக்கு கறுப் பாக, குடிக்க முடியாத அளவுக்கு தண்ணீர் இருக்கிறது என்பதை சுட்டிக் காட்டுவதற்காக இதைக் குறிப்பிடுகிறேன். நல்ல முறையில் அதைச் சுத்திகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும். அங்கே துர்நாற்றம் அடிக்கும். ஒரு தனிப்பட்ட முதலாளியின் தேவையைவிட பல்லாயிரக்கணக்கான மக்களின் தேவைதான் நமக்கு முக்கியமானது. ஆகையால் அந்தத் தண்ணீரை சுத்திகரித்து நல்ல தண்ணீராக மாற்றக்கூடிய பணிகளை இந்த அரசாங்கம் அவசரமாக மேற்கொள்ள வேண்டும் ; அந்த நீரை பாசனத்திற்குப் பயன்படுத்த வேண்டும் ; குடிப்பதற்கும் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக இருப்பது பொதுச் சுகாதாரம். இன்றைக்கு பொதுச் சுகாதாரம் இருக்கிறதா என்று ஒரு ஆய்வறிக்கை கொடுத்தால் கூட சிறப்பாக இருக்கும். அந்த அளவுக்கு சுகாதாரக் கேடு இருக்கிறது. அதிலும் குறிப்பாக எனது தொகுதியில் 'ஹவுசிங் யூனிட்' ஒன்று இருக்கிறது. அங்கே கழிவு நீர் வெளியேற வழியில்லை. அதனால் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு சாக்கடை கிணறு காட்சியளிக்கிறது. அந்தக் கிணறு நிறைந்து, தெருவிலும் சாக்கடை நீர் ஓடுகிறது. சில நேரங்களில் சாக்கடை கிணற்றிலே சின்ன குழந்தைகள் விழுந்து இறக்கக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது. நோய் நொடி அதிக மாகிறது ; கொசுத் தொல்லையும் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. ஆகவே நல்ல முறையில் சாக்கடை வசதித் திட்டத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திருமதி பாப்பா உமாநாத்] [1989 பிப்ரவரி 14

மருத்துவமனைகள் பற்றிச் சொல்லவே வேண்டாம். நம்முடைய மாநிலத்தில் இருக்கக்கூடிய பெரும்பாலான மருத்துவ மனைகளைப் பொறுத்தவரையில் நோயைக் குணமாக்கப் போய் வருகிறோம் என்றால் திரும்பி வரும்போது புதிதாக இரண்டொரு நோய்களை எடுத்துக்கொண்டு வரக்கூடிய நிலைமைதான் இன்று இருக்கிறது. ஆகவே மருத்துவமனைகள் ஒழுங்கு படுத்தப்பட வேண்டும். லஞ்ச லாவண்யங்கள் ஒழிக்கப்பட வேண்டும். மருத்துவமனைகள் மருத்துவமனைகளாக, நோய் குணப்படுத்தக்கூடிய மனைகளாக ஆவதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. இது பொதுச் சுகாதாரத்தோடு சம்பந்தப் பட்ட ஒரு விஷயம். இதில் வேலை செய்யக்கூடிய பணியா ளர்கள் மிகவும் குறைவாக இருக்கிறார்கள். அவர்கள் போது மான அளவுக்கு இல்லை. 1930 ஆம் ஆண்டிலிருந்தே புதிய பணியாளர்கள் உள்ளாட்சித் துறையில் நியமிக்கப்படாத நிலை தான் இருந்து வருகிறது. 1952 ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்ற நீதிபதி நித்தியானந்த கனுங்கோ என்பவர் ஆய்வு செய்து அளித்த அறிக்கையில் சொல்லியிருக்கிற அந்தக் கணக்குப்படி கூட இன்றைக்கு உள்ளாட்சித் துறைப் பணியாளர்கள் நியமிக்கப்பட வில்லை. ஆகவே அவர்களை அதிகப்படுத்துவது பொதுச் சுகாதாரத்திற்கு நல்லது என்பது மட்டுமல்ல, தேவை என்பதை யும் நான் வலியுறுத்துகிறேன். மேலும் இன்றைக்கு வேலை செய்பவர்களில் கூட 3 இலட்சம் பேர் தற்காலிகமாக வைக்கப்பட் டிருக்கிறார்கள் பல ஆண்டுகளாக. அதையும் கவனிக்க வேண்டு மென்று சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித் துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து கழிப்பறை வசதியைப் பொறுத்தவரையில் மிகுந்த கொடுமை என்னவென்றால் தமிழ்நாட்டில் பல பகுதிகளில் பெண் களுக்கும் போதுமான கழிப்பிட வசதி இல்லை. இது குறித்து ஏராளமான கோரிக்கை மனுக்கள் வைக்கப்பட்டன. சென்ற ஆட்சியில் நாங்கள் இவ்வாறு கோரிக்கை வைத்தால் கமிஷனர் சொல்வார், "எந்த இடம் என்று பார்த்துவிட்டு வாருங்கள், கட்டித் தருகிறேன்" என்று. அது தனியாருக்குச் சொந்தமாக இருந்தால் அவர்கள் கவனிப்பது இல்லை. இப்போதும் நான் சொகிறேன், நான் சார்ந்திருக்கின்ற ஜனநாயக மாதர் சங்கம் பல போராட்டங்களை நடத்தியும் கூட கழிப்பறை வசதி கிடைக்கவே

1989 பிப்ரவரி 14] [திருமதி பாப்பா உமாநாத்]

இல்லை. எனவே இதனை அரசுக்கு ஒரு வேண்டுகோளாக நான் வைக்கிறேன், கழிப்பறை வசதியை நவீன முறையில் கட்டித் தருவதோடு அதைச் சுத்தம் செய்வதற்கும் ஏற்பாடு செய்தால் நிச்சயமாக பெண்கள் மிகவும் நிம்மதி அடைவார்கள் என்று நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

"அடுத்தபடியாக மகளிர் நலன். இந்த விஷயத்தில் இந்த அரசு அதிகமான அக்கறை காட்டுவதை நான் பாராட்டுகிறேன்; வரவேற்கிறேன். மாண்புமிகு ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு நடவடிக்கைகள், மகளிர் நலனைக் காக்க வேண்டும் என்ற இந்த அரசின் அக்கறையைக் காட்டுகின்றன. இது தொடர்பான சில யோசனைகளை இந்த நேரத்தில் நான் முன் வைக்க விரும்புகிறேன். முதலாவதாக வேலைவாய்ப்பினை அதிகரிக்க பெண்களுக்கு நவீன இயந்திரத் தொழிற் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்பது. ஆசிரியர்களாக மட்டுமல்ல பெண்கள் ஆயா வேலைக்கு மட்டுமல்ல; நவீன இயந்திரத் தொழிலிலும் பெண்கள் முன்னுக்கு வரக்கூடிய முறையில் அவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும். அதற்காகத் தொழிற் பயிற்சி வசதிகளை மேம்படுத்த வேண்டும்.

தமிழ்நாட்டிலே இன்றைக்கு பாலி டெக்னிக்குகள் 132 இருக்கின்றன. அவற்றிலே 14 தான் பெண்களுக்காக இருக்கின்றன. ஐ.டி.ஐ. 7 தான் இருக்கின்றன. அவற்றில் ஐந்தை அரசு நடத்துகிறது; இரண்டைத் தனியார் நடத்துகின்றனர். தனியாரைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். அவர்கள் எவ்வளவு காசு பிடுங்குகிறார்கள் என்பது உங்களுக்கெல்லாம் நன்கு தெரியும். ஆகவே அரசே இந்த வகையில் பாலிடெக்னிக்குகளை நடத்த வேண்டும். அதிலே முக்கியமான ஒரு வித்தியாசம் என்னவென்றால் ஆண்களுக்கு இருக்கக்கூடிய பாடத் திட்டங்கள் பெண்களுக்கு இல்லை. ரொட்டி சுடுவது, தையல் தைப்பது போன்றவை மட்டும்தான் பெண்களுக்கு என்று சொல்வதை அனுமதிக்க முடியாது. நவீனத் தொழில் முறையிலும் பெண்களுக்குப் பயிற்சி அளிக்கவேண்டும், புதிய, புதிய பாலிடெக்னிக்குகளையும், ஐ.டி.ஐ. களையும் அமைக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பாகுபாடு நீக்கப்பட வேண்டும் என்றும் நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, மாவட்ட அளவில் மட்டுமல்லாது சில

இடங்களில் வட்ட அளவில் கூட இப்படிச் செய்து தருவதோடு அந்தப் பெண்களுக்கு உதவித் தொகை அளித்து ஊக்கப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வயது வந்த பெண்களை வீட்டில் வைத்துக் கொண்டிருப்பவர்கள்—திருமணம் என்றாலே இன்றைக்கு வியாபாரமாக ஆக்கப்பட்டுவிட்ட நிலைமையில்—அவர்கள் வாழ்வுக்கு என்ன செய்வது என்று கவலைப்படுகிற நிலைமையில் தொழிற் பயிற்சிக்கு வேறு செலவழிக்க வேண்டுமே என்று கவலைப்படுகிறார்கள். அந்தகைய நிலைமையில் பெற்றோர்கள் இருப்பதன் காரணத்தால் ஊக்கத் தொகை தந்து அந்தக் கல்வி வசதியை ஏற்படுத்த வேண்டும்.

கிராமப்புறங்களிலே விவசாயம் சார்ந்த முறையில் சில தொழிற்சாலைகளைத் திறந்து அந்த வகையில் விவசாயம் பெண்களுக்கு ப்ளாக் அளவில் கூட பயிற்சி அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சமுதாயத்தை இன்றைக்கு மிகவும் ஆட்டிப் படைக்கக் கூடியது வரதட்சணைக் கொடுமை. இதைப்பற்றி முழுமையாக நான் இங்கே பேச வரவில்லை. அதைத் தடுக்க சில ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். பொதுவாக வரதட்சணைக் கொலை, தற்கொலை போன்றவை ஏற்பட்டால் அதுபற்றிய குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வதற்குக் கூட மூன்றாண்டுகள் எடுத்துக் கொள்ளப்படுகிறது. அதற்கு மூன்று மாதங்கள் போதும். ஆர்.டி.ஓ. அளவில், மாஜிஸ்ட்ரேட் அளவில் விசாரணை நடத்தி அறிக்கை வரவே 6 மாதங்கள் ஆகிவிடுகின்றன. அதற்கு ஒரு மாதம்தான் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று ஒரு வரைமுறையைக் கொண்டு வரவேண்டும். அந்த வகையில் மூன்று மாதங்களுக்குள்ளாகக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யவேண்டும்; அந்த விசாரணையை எதிர்பார்க்காமல் காவல் துறை புலன் விசாரணையைத் துவக்க வேண்டும் என்ற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து இறந்து போன பெண்களுடைய சவப் பரிசோதனை சர்ட்டிஃபிக்கேட், எஃப்.ஐ.ஆர். என்ற முதல் தகவல் அறிக்கை ஆகியவை பெற்றோர்களுக்குத் தரப்படுவதில்லை. அவற்றைக் கட்டாயமாகப் பெற்றோர்களுக்குத் தரவேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும்.

1989 பிப்ரவரி 14] *[திருமதி பாப்பா உமாநாத்]*

(முற்பகல் 10-50)

பல வழக்குகளைப் பொறுத்தவரையில் கீழ்க்கோர்ட்டுகளில் பாதகமாகத் தீர்ப்பு வந்தால் மேல் கோர்ட்டுக்கு அப்பீல் செய்வதற்கு ஏற்பாடு செய்வதில் சென்ற அரசு அக்கறை காட்டவே இல்லை. நாங்கள் பல வழக்குகளிலே அன்றைக்கு முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர் அவர்களிடமும், சட்ட அமைச்சராக இருக்கக் கூடிய பொன்னையன் அவர்களிடமும், ஒரு முறையல்ல பல முறை சொல்லியும், கூட, அவர்கள் அக்கறை காட்டாத நிலைமை இருந்தது. அது தொடர்கிறது. இந்த அரசு அதிலே அக்கறை காட்டி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது போன்ற வழக்குகளில் காவல் துறைக்கு உதவுவதற்காக ஆலோசனைக் குழுக்கள் அமைக்க வேண்டும் என்று மத்தியிலே இருக்கக்கூடிய சமூக நல போர்டு ஏறத்தாழ 8 வருடங்களுக்கு முன்பு உத்திரவு இட்டது. ஆனால் இன்னைறக்கும் அமைக்கப்படவில்லை. பல இடங்களில் ஆசிரியர்களாக இருக்கக் கூடிய சிலரை, இந்தப் பிரச்னையில் அக்கறை அற்றவர்களை போட்டு சில பகுதிகளில் குழுக்கள் இருக்கிறதே தவிர, இந்தப் பிரச்சினையில் பெண்களுக்கான கொடுமையை எதிர்க்கக் கூடிய மாதர் இயக்கங்களைச் சேர்ந்தவர்களை, அவர்களின் பிரதிநிதிகளை போட்டு ஒரு ஆலோசனைக் குழு கட்டாயமாக அமைக்கப்பட வேண்டுமென்றும், அதை இயங்கச் செய்ய வேண்டுமென்றும் நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து திருமணங்களைப் பொறுத்தவரையில் எல்லாத் திருமணங்களும் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதை சட்ட முறையில் கொண்டு வர வேண்டும். குறிப்பாக சென்னை இந்து திருமண சட்டத்தை சில முறைகளில் திருத்தம் செய்து விட்டால், அதில் உண்மையிலேயே எல்லாத் திருமணங்களையும் நாம் பதிவு செய்யும் முறையில் கொண்டு வந்தால் அது பெண்களுடைய எதிர் காலத்திற்கு நல்லது என்ற முறையில் அதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

உழைக்கும் பெண்களைப் பொறுத்தவரையில் இன்றைக்கு தங்கும் விடுதிகள் நகரில் பரவலாக இல்லை. அவர்களுக்கான விடுதிகளை தனியார் நடத்துவதில் ஏகப்பட்ட விவகாரங்கள்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இருக்கின்றன. ஆகவே அவைகளை அரசே நடத்த வேண்டும். குழந்தைகளோடு தங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். குழந்தைகள் காப்பகம் அமைக்கப்பட வேண்டும் என்பதும், அலுவலகம் செல்லக்கூடிய பெண்களுக்கு இன்றைக்கு பஸ் போக்குவரத்து கொஞ்சம் பாதகமாக ஏற்பட்டிருக்கிறது. அதை கூடுதலாக்கி விட வேண்டும் என்பதையும், சத்துணவு ஊழியர்களை நிரந்தரமாக்குவதை நான் வரவேற்கக் கூடிய அதே நேரத்தில் அவர்களைக் குடும்பக் கட்டுப்பாட்டுக்கு ஆளைப் பிடித்து வரச் சொல்லி ஏற்கப்பட்ட நிர்ப்பந்தங்கள் செய்வது தவிர்க்கப்பட வேண்டும் என்றும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அத்தோடு ஆபாச திரைப்படங்கள். அதன் போஸ்டர்கள் இன்றைக்கு பரவலாக ஒட்டப்படுகிறது. முதல்பாவம் என்ற சினிமாவில் கூட எவ்வளவு மோசமான படம் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர்களும், உறுப்பினர்களும் தெருவிலே போகும்போது பார்த்திருப்பார்கள். அப்படிப்பட்ட பகிரங்கமான படங்கள் ஒட்டுவதை தவிர்க்கப்பட வேண்டும். ஏற்கெனவே ஒரு சட்டம் வந்தது. கூரான பற்களைக் கொண்டிருக்கக்கூடிய சட்டம் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொன்னார்கள். பல் எல்லாம் என்ன ஆயிற்று என்று இப்போது தெரியாது. அது அமலுக்கு இல்லை. ஆகவே அதைத் தடுப்பதற்கு கறாரான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்த அமைச்சரவையை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நான் பேச விரும்புவது கள்ளச் சாராயம். சாராய சாம்ராஜ்யத்திற்கு முடிவு கட்டுவதாக நேற்று நடந்த விவாதத்திலே சொன்னார்கள். ஆனால் இந்தக் கள்ளச் சாராயம் இருக்கிறதே, வீட்டிற்குள்ளே, தெருவிலே எல்லாம் ஒரு குடிசைத் தொழிலாக ஆகியிருக்கிறது. சென்ற காலத்திலே இருந்த ஆட்சிக் காலத்தில் அது ஒரு குடிசைத் தொழில். சமுதாய விரோதிகள் அதிகமாக இதிலே பங்கெடுக்கிறார்கள். அது மட்டுமல்ல காவல் துறையினருக்கு மாமூல் வாங்கக்கூடிய வழக்கமும் இன்றைக்கு தொடர்ந்து நடக்கிறது. இதை முதலிலே நாம் கட்டுப்படுத்த வேண்டும். எதற்காக நான் இதைச் சொல்கிறேன் என்று சொன்னால் தேர்தல் காலத்திலே நான் போகும்போது பெண்கள் எல்லாம் அழுதார்கள். ஒரு அம்மாவை அவள் குடிகாரக் கணவன் அடித்ததனால் காதே செவிடாகப் போய் விட்டது என்று சொல்லி

1989 பிப்ரவரி 14] [திருமதி பாப்பா உமாநாத்]

அழுதார்கள். இந்தக் கொடுமை நிறுத்தப்பட வேண்டும். தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய லட்சக் கணக்கான பெண்கள் கள்ளச் சாராயம் தடுத்து நிறுத்துவதில் இந்த அரசுக்கு நிச்சயமாக ஆதரவு தருவார்கள். ஆகவே நிச்சயமாக அதைத் தடுக்க வேண்டும் என்றும் போலீசாரை தடுத்து இது போன்ற பிரச்சினையில் அவர்கள் ஈடுபடக்கூடாது என்று தயவு தாட்சண்யம் இன்றி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள் கிறேன்.

பிறகு பெண்களுக்காக என்ன சட்டம் இருக்கிறது என்று பார்க்க வேண்டும். வரதட்சணைக் கொடுமை மற்ற விவகாரங்கள் எல்லாம் மக்கள் தொடர்பு சாதனங்கள் வாயிலாக விளம்பரம் செய்ய வேண்டும். விஷயங்களைச் சொல்லித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மகளிர் நலனிற்காக இந்த அரசு எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகளை ஜனநாயக மாதர் சங்கத்தைச் சேர்ந்த எங்கள் அமைப்பு ஆதரிக்கும் என்பதோடு இப்படிப்பட்ட புதிய சட்டங்கள் திட்டங்கள் கொண்டு வரும் போது மாதர் இயக்கத்தைச் சார்ந்திருக்கிற பிரதிநிதிகளுடைய ஆலோசனைகளையும் பெற்று அதைச் செம்மைப்படுத்தக்கூடிய முறையில் அந்த திட்டங்களைக் கொண்டு வர வேண்டும் என்று நான் உங்களை வேண்டி விரும்பி கேட்டுக் கொண்டு அமர்கிறேன். நன்றி.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கன்னிப் பேச்சு நிகழ்த்துகிறார் என்பதற்காகத்தான் ஒவ்வொரு முறையும் நாம் அமைதியாக இருந்து பின்னர் நம்முடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லுகிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னதைத்தான் நான் மீண்டும் விளக்கத்திற்காக எழுந்து இங்கே நின்றேன். ஆனால் அவைத் தலைவர், நமது சபாநாயகர் அவர்கள் சொன்னதை அப்படியே கேட்டு, ஒருவருக்கொருவர் இணக்கமாக நடந்து இந்தச் சபையை நடத்துவதற்கு நாம் ஒத்துழைக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு நானும் அமர்ந்தேன். நமது சபாநாயகர் அவர்களும் எனக்கு இப்போது அனுமதி கொடுத் திருக்கிறார்கள். நன்றி. அமைச்சர் பெருமகனார் குறுக்கிட்டு விளக்கம் சொல்கிற போது ஒவ்வொன்றுக்கும் ஒரு நாள் வந்து வாங்கு என்று சொல்வதற்குப் பதிலாக, நீண்ட நெடிய வரிசை

யிலே காத்திருந்து பொருள்களை வாங்குகிற போது அரிசியை இன்று வாங்கு, பாமாயிலுக்கு நாளைக்கு வா என்று சொல்கிற மிகச் சிரமமான காரியத்திலேயிருந்து, துன்பகரமான காரியத்திலேயிருந்து மக்களை விடுவிப்பதற்காகத்தான், அத்தனையும் ஒரே நாளில் கொடுக்க வேண்டும் என்று உத்திரவு இட்டிருக்கிறோம் என்று சொன்னதை மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம். ஆனால் இதிலே ஒரு விளக்கம் பெற விரும்புவது அத்தனையும் வாங்குவதற்கு வேண்டுபவர்களுக்குக் கொடுக்கலாம் அதற்கு ஏறத்தாழ 140 ரூபாய் தேவைப்படும். ஏழை, பாட்டாளி மக்கள் அத்தனை ரூபாயோடு அங்கே போக முடியவில்லையென்றால், இன்று தேவையான பொருள்களை மட்டும் வாங்கிக் கொண்டு, மற்ற பொருள்களை பிறகு வாங்கிக்கொள்கிறோம் என்று சொன்னால், அதற்கு அந்தக் கடைக்காரர் அனுமதியளித்து உறுதியாக அதைப் பிறகு கொடுக்க வேண்டுமென்று சொல்கிற உத்தரவையும் அமைச்சர் அவர்கள் இட வேண்டுமென்பதற்காக நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் சொன்ன யோசனையை ஏற்கனவே பரிசீலனை செய்து வசதி படைத்தவர்கள் கேட்கிற எல்லா பொருள்களையும் ஒரே நாளில் கொடுக்க வேண்டுமென்றும், வசதியற்றவர்கள் எப்போதைக்கெப்போது கேட்கிறார்களோ அப்போதெல்லாம் வழங்க வேண்டுமென்றும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீர்த்திமிக்க இந்தப் பேரவையின் பீடத்தில் அமர்ந்திருக்கிற உங்களை வணங்கி, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சிறப்புமிகு இப்பேரவைக்கு உறுப்பினராக வருவதற்கு எனக்கு வாய்ப்பளித்த கழகத்தினுடைய தமிழினத் தலைவர், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை காணிக்கையாக்கிக் கொள்கிறேன். உங்களை இந்தப் பீடத்தில் பார்க்கிறபோது நாங்கள் பூரிப்பும், புளகாங்கிதமும் அடைகிறோம். மதுரை மத்திய சிறைச்சாலையில் மிசாக் கொடுமையில் வாடிக் கொண்டிருந்தபோது ஒரு புதிய வரலாற்றை

1989 பிப்ரவரி 14] [திரு. வே. தங்கபாண்டியன்]

உருவாக்கி, அங்கே வந்த தாங்கள் பட்டிமன்றம் மட்டும் நடத்தாமல், கொட்டடியில் பூட்டி வைக்கப்பட்டிருந்த மிசாக் கைதிகளுக்கு தாங்கள் நல்வாழ்த்துக்களை சொல்லி, சொல்லுக்குச் சொல் சுவையூட்டி அன்றைக்கு எங்களுடைய புண்பட்டிருந்த நெஞ்சங்களுக்கு இதமாக மருந்து தடவிய தாங்கள் தமிழ் இனத்திற்கு ஓர் அடையாளமாக இப்பேரவையை அலங்கரிக்கிறீர்கள். கடந்த 12 ஆண்டுகளாக தமிழகத்தில் இருந்த ஓர் இருண்ட ஆட்சியை அகற்றிவிட்டு, ஒளிமயமான தமிழகத்தை உருவாக்குவதற்கு காத்திருக்கிற தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையில் உருவான அமைச்சரவையில் தாங்கள் பேரவைத் தலைவர் பொறுப்பில் இருப்பதையெண்ணி நான் மகிழ்ச்சி அடைகிறேன். History repeats என்று சொல்வார்கள். வரலாறு திரும்புகிறது. படித்த பாடத்தை நாம் இங்கே மீண்டும் படித்துப் பார்க்க வேண்டும். நடந்து வந்த பாதையை நாம் சற்றுத் திரும்பிப் பார்க்க வேண்டும். இங்கே எதிர்கட்சியில் இருப்பவர்கள் ஆளுநர் உரையின் மீது கருத்துக்களைச் சொன்னார்கள். ஆசையையும், ஆர்வத்தையும் வெளியிட்டார்கள். ஆளுநர் உரையில் அனைத்தையும் சொல்ல வேண்டுமென்ற ஆதங்கத்தைச் சொன்னார்கள்.

(முற்பகல் 11-00)

ஆளுகின்ற பொறுப்பில் இருந்தபோது ஆளுநர் உரையில் எல்லாவற்றையும் சொல்லிவிட்டதைப் போலவும், இன்றைக்கு தயாரிக்கப்பட்டுள்ள இந்த அறிக்கையில் தான் அனைத்தும் சொல்லப்படவில்லை என்பதைப் போலவும் சொன்னார்கள். கால் நூற்றாண்டுகளுக்கு முன்னால் ஆளுகிற கட்சியாக இருந்தோம், இப்போது மீண்டும் ஆள்வோம் என்று ஆசைக்கனவு கண்ட காங்கிரஸ்காரர்களுக்கு ஒரு ஆசை வந்து இங்கே தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தார்கள். ஒரு சுருக்கமான கையேடு பெட்டகமாக, இலக்கிய நயத்தோடு எழுதப்பட்டிருக்கிற இந்த ஆளுநர் உரையை ஒரு கலைக்களஞ்சியமாகத் தான் நாங்கள் கருதுகிறோம். இது முரசொலிப் பத்திரிகையின் தலையங்கமாக இருக்கிறது என்று சொன்னது எங்களுக்கு இன்னமும் பெருமையாக இருந்தது. அதைத்தான் நாடு எதிர்பார்த்தது. முரசொலி தலையங்கத்தால் தான் தமிழகத்து மக்கள் வாக்களித்து நல்ல தீர்ப்பை வழங்கி, யார் யார் எந்தெந்த இடத்தில் இருக்க வேண்டுமோ அவரவர்களுக்கு அந்த இடங்களைத் தந்து ஒரு மகத்தான தீர்ப்பை வழங்கி இருக்கிறார்கள். எதிர்கட்சியாகி

[திரு. வே. தங்கபாண்டியன்] [1989 பிப்ரவரி 14

விட்ட காரணத்தால் கொஞ்சம் எரிச்சல் வரலாம். ஆத்திரம் வரலாம், ஆவேசம் வரலாம். ஆளுநர் உரையைப் பற்றி இங்கே கருத்து தெரிவித்த எதிர்க்கட்சி உறுப்பினர் ரொம்பவும் ஆதங்கப் பட்டார். கேட்டதெல்லாம் இல்லை, நினைத்ததெல்லாம் இடம் பெறவில்லையென்று சொன்னார். நாம் திருக்குறள் படித்திருக் கிறோம். ஒரு காலத்தில் திருக்குறளுக்கு பரிமேலழகர் உரை மட்டும் தான் இருந்து வந்தது. அதை யாரும் எளிதில் படிக்க முடியாது. பிற்காலத்தில் திருக்குறளுக்கு மு.வ. அவர்கள் எழுதிய உரை முக்கியமான உரையாக அமைந்தது. அதை இன்றைக்கு நாம் படிக்கிறோம். அதைப்போல தான் கழகத்தினுடைய தலைவர், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிற இந்த உரை இருக்கிறதே அது ஏதோ வெறும் அரசாங்கத்தினுடைய சட்டங்களைத் தீர்மானங்களைச் சொல்கிற புத்தகமாகக் கருதாமல் 12 ஆண்டுகளாக, 13 ஆண்டு களாக உருவாகிக்கொண்டிருந்த எங்களுடைய எண்ணங்களின் வெளிப்பாடுதான் உணர்வுகள்தான் இன்றைக்கு வரிவடிவங்களாக நமக்குத் தரப்பட்டு இருக்கின்றன. வரப்போகிற நிதிநிலை அறிக்கைக்கு இது முன்னோடியாக, முன்னோட்டமாக முகவுரை யாக அமைந்திருக்கிறது. அந்த வகையிலே இந்த கவர்னர் உரையை, அரசினுடைய உரையை நாங்கள் வரிக்கு வரி, சொல்லுக்குச் சொல் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இங்கே நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களுடைய படம் இடம் பெற வேண்டும் என்று பெருந்தன்மையைப் பற்றிப் பேசினார்கள். பெருந்தன்மை ஒருவழிப் பாதையாக இருக்கக்கூடாது It is not one way traffic கடந்த 13 ஆண்டுக்கால பெருந்தன்மையைப் பற்றி கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். நாங்கள் பட்ட அடிகள், அடைந்த துன்பங்கள், துயரங்கள் அனுபவித்த சிறைச்சாலைக் கொடுமைகள், காவு கொடுக்கப்பட்ட இளஞ்சிங்கங்கள். அரசியலுக் காக திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தோழர்களுடைய பச்சை ரத்தங்கள் பரிமாறப்பட்டன. எத்தனையோ தோழர்கள் எங்களுடைய மாவட்டத்திலே பலியாக்கப்பட்டார்கள். இங்கே அரசாங்கத்தினுடைய அதிகாரிகளுக்காக வக்காலத்து வாங்கிப்

1989 பிப்ரவரி 14] [திரு. வே. தங்கபாண்டியன்]

பேசினார்கள். அரசினுடைய உயர்மட்ட அதிகாரிகள் பந்தாடப் படுவதாக இன்றைக்கு வேதனைப்பட்டார்கள். நீலிக் கண்ணீர் வடித்தார்கள். அன்றைக்கு நீதிக்குத் தலைவணங்காமல் இருந்தார்கள். இன்றைக்கு தமிழகத்தில் உள்ள மக்கள் நீதிக்குத் தலை வணங்கி ஒரு புதிய அரசாங்கத்தை உருவாக்குகிறபோது, ஆட்சிச் சக்கரம் மாறுகிறபோது, பீரோக்கிரட்டிலே இருக்கிற அந்த அரசு நிர்வாகிகள் இன்றைக்கும் தங்களுடைய மனதை மாற்றிக்கொள்ளாமல், பழைய காலத்திலே இருந்த அரசர்களுக்கு அவர்கள் கைகட்டி சேவகம் செய்து கொண்டிருக்கிறபோது, நம்முடைய அரசாங்கம் அவர்களுடைய நடவடிக்கைகளை கூர்ந்து கவனிக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டு கோள்.

உதாரணத்திற்குச் சொல்கிறேன். உங்களுக்குத் தெரியும் அருப்புக்கோட்டைத் தொகுதியிலேயிருந்து வெற்றி பெற்று வந்திருக்கிறேன். அந்தத் தொகுதி வானம் பார்த்து வாழ்ந்தாலும் மானத்தோடு வாழ்கிற பகுதியாகும். மருது சகோதரர்கள் உலவிய பூமி ஆன்மீகத்திற்கும் அறிவியலுக்கும் எடுத்துக்காட்டாக விளங்கிய பகுதி. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினுடைய பிடரி யைப் பிடித்து ஆட்டி, அவர்களை வெளியேற்றுவதற்கு தென் பாண்டி மண்டலத்திலே வீர காரியங்களை புரிந்து, காங்கிரஸ் ஏகாதி பத்தியத்திற்கு இறுதிக்காலத்திலே சவால் எடுத்து, இன்றைக்கு படமாக இருக்கிற முத்துராமலிங்கம் அவர்கள் உலவிய பூமி. அந்த அருப்புக்கோட்டையிலிருந்து வெற்றி பெற்று வந்திருக்கிறேன். அந்தத் தொகுதியிலே நடைபெற்ற இடைத்தேர்தல் உங்களுக்குத் தெரியும். அந்த இடைத்தேர்தல் நடந்த பிறகு பட்டப் பகலிலே ஒரு ஊரில் அரசாங்கத்தினுடைய கூட்டுறவு ஊழியர் கொலை செய்யப்பட்டார். கொலை செய்யப்பட்டபோது, அரசு அதிகாரி கள் பார்க்கிறார்கள்; காவல்துறையினர் பார்க்கிறார்கள். எடுத்த நடவடிக்கை என்ன? ஹைக்கோர்ட்டிலேயிருந்து அந்தக் குற்ற வாளி ஜாமீன் வாங்கும் வரைக்கும் அந்தக் குற்றவாளியினுடைய வீட்டுக் கதவை போலீஸ் தட்டியது கிடையாது. (குறுக்கீடு). I am not yielding என்னுடைய கருத்துக்களை நான் எனது கன்னிப் பேச்சில் தெரிவித்துக் கொண்டிருக்கும்போது, I am not yielding to anybody காமராஜர் மாவட்டத்திலே நடைபெற்ற அரசியல் கொலைகள், ஸ்ரீவில்லிபுத்தூர் நகரத்தில் இளஞ்செழியன்

கொலை செய்யப்பட்டான். ஸ்ரீவில்லிபுத்தூர் நகரிலே, தேரோடும் வீதியிலே எங்கள் இயக்கத்தினுடைய உழைப்பாளி, இளைஞர் அணி நண்பர், உங்களுக்குத் தெரியும், தந்தையை இழந்தால், தனயன் அவருக்கு ஈமச்சடங்கு செய்வான், ஆனால் வெற்றிச் செல்வன், ஸ்ரீவில்லிபுத்தூர் நகரத்தினுடைய திருவிளக்கு, பட்டப் பகலிலே வெட்டி சாய்க்கப்பட்டான். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஊழியன். என்ன பரிகாரம் காணப்பட்டது? இன்றைக்கு வன்முறையைப் பற்றிப் பேசுகிறார்கள், இன்றைக்கு காந்தி உபதேசம் செய்கிறார்கள். The Dveil also quotes scriptures. சைத்தான் வேதம் ஓதுகிறது என்பதைப் போல, சில பேர்கள் இன்றைக்கு கீதாஉபதேசம் செய்து கொண்டிருக்கிறார்கள். இவைகள் எல்லாம் அன்றைக்கு எங்கே சென்றன? ராஜபாளையத்திற்குப் பக்கத்திலே இருக்கிற சம்சாரத்திலே முருகன் என்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஊழியன் கொலை செய்யப்பட்டான், பட்டப் பகலிலே கண்ணைக் குத்தி, சைக்கிள் ஊர்வலம் வருகிறபோது, கொலை செய்யப்பட்டான். இப்படிப்பட்ட அரசியல் கொலைகளுக்கு என்ன பரிகாரம்? என்ன பாதுகாப்பு? 13 ஆண்டுக்காலமாக இருந்த அந்த நடவடிக்கைகளுக்கு பரிகாரம் தான் நல்ல தீர்ப்புதான், நியாயத் தராசிலே வைத்து, பாலை வனத்து ரோஜாவாக இருந்த தலைவர் கலைஞர் அவர்களை, தமிழகத்தினுடைய மக்களுடைய இதயச் சிம்மாசனத்திலே இருக்கிற கழகத் தலைவரை இன்றைக்கு மக்களுடைய தலைவராக ஆக்கி முதலமைச்சர் பொறுப்பை கொடுத்து இருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட நிலைமைகளை எண்ணிப் பார்க்கிற போது, 13 ஆண்டுக்கால அரசியலையும் கொஞ்சம் நினைத்துப் பார்த்து, அந்தக் காலத்திலே நடைபெற்ற அக்கிரமங்களையும் அநியாயங்களையும் நினைத்துப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் எத்தனை போராட்டங்களில் ஈடுபட்டாலும் அவர்களை மட்டும் தனிமைப்படுத்தி, அவர்கள் மீது பொய்வழக்கு போட்டு இருக்கிறார்கள். அந்த வழக்குகளை நீங்கள் அருள்கூர்ந்து மீண்டும் திறவுங்கள். யார் மீது இருந்தாலும் சரி, எந்த அரசியல் கட்சித் தலைவர் மீது போடப்பட்ட வழக்காக இருந்தாலும் சரி, 13 ஆண்டுக் காலத்தில் போடப்பட்ட கொலை வழக்குகள், நடைபெற்ற அரசியல் கொலைகள் அத்தனையையும் இந்த அரசு மறு பரிசீலனை செய்யட்டும். அதற்கு ஒரு கமிஷன் போடலாம்.

1989 பிப்ரவரி 14] [திரு. வே. தங்கபாண்டியன்]

போட்டார்களே ஒரு கமிஷன் 'மிசா' எமர்ஜென்சி கொண்டு வந்தவுடன் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் மீது எத்தனை விசாரணை நடந்தது? 15 ரூபாய் கட்ட வேண்டும், 20 ரூபாய் கட்டவேண்டும்; தொலைபேசிக் கட்டணம் கட்ட வேண்டும் என்று பாரதி கமிஷன் போட்டார்களே அப்படி ஒரு கமிஷன் போடட்டும். கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெற்ற கொள்ளைகள் பற்றி இங்கே நம்முடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தோழர்கள் சொன்னார்கள்.

அருப்புக்கோட்டையில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெற்ற கொள்ளைகள், கூட்டுக் கொள்ளைகள். காமராஜர் மாவட்டத்திலே 190 நெசவாளர் சங்கங்கள் இருக்கின்றன. 190 நெசவாளர் சங்கங்களில் அருப்புக்கோட்டை நகரத்தில் மட்டும் 100-க்கு மேற்பட்ட நெசவாளர் சங்கங்கள் இருக்கின்றன. அந்த நெசவாளர் சங்கங்களில் ஒரு குறிப்பிட்ட தேதியில் அருப்புக்கோட்டைத் தொகுதியில் இடைத்தேர்தல் நடைபெறும்போது அந்த இடைத்தேர்தல் சமயத்தில் மட்டும் அந்த சங்கங்களிடமிருந்த கையிருப்புத் தொகையை முன்கூட்டியே ஒவ்வொரு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து முன் தொகையாகப் பெற்று அந்தப் பணம் வேறு பல வழிகளில் செலவிடப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் உண்மை வெளிவரவேண்டும் என்றால் அவர்கள் ஆசைப்படுவதைப் போல அது எவ்வளவு பெரிய கொம்பனாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் மீது ஒரு விசாரணையைக் கொண்டு வாருங்கள். அப்படி வருகிற போது அரசியல்வாதிகள் என்று பார்க்காதீர்கள், அதிகாரிகள் என்று பார்க்காதீர்கள். யாராக இருந்தாலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுங்கள். அந்த நடவடிக்கைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆதரவுடையவர்கள் எந்தப் பொறுப்பில் இருந்தாலும் சரி, அவர்கள் ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறார்கள். அதற்கு, என்னைப் போன்றவர்கள் உறுதியாக பின் நிற்போம் என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே நம்முடைய தலைவர் அவர்கள் சொன்னார்கள், மாண்புமிகு எம்.ஜி.ஆர். படம் இருக்கவேண்டும் என்று. அதில் இரண்டுபட்ட கருத்துக்கள் இல்லை. கழகத்தினுடைய தலைவர்,

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு உடன் பட்டு இதே மாமன்றத்தில் அறிவித்து இருக்கிறார்கள். ஆனால் 13 ஆண்டு காலத்திலே கழகத் தலைவர் அவர்களுடைய பெயர் இருக்கக் கூடாது என்று கங்கணம் கட்டி மதுரை மாநகரத்திலே ஒரு ஆர்ச் நீதி மன்றத்திற்குப் பக்கத்தில் கலைஞருடைய நூற்றாண்டு விழா வளைவு என்று இருந்தது. அதை எடுத்து விட்டார்கள். இதே சென்னை நகரத்திலே அவர் பெயரால் வைக்கப்பட்டு இருந்த கட்டிடத்தினுடைய பெயர் எடுத்து விடப்பட்டதே அப்போது அந்த பெருந்தன்மை வந்து இருந்ததா?

நடந்து போன தவறுகளுக்கு வருத்தம் தெரிவித்து நாங்கள் தான் அந்த தவறுகளைச் செய்து விட்டோம். 9 ஆண்டு காலம் முதலமைச்சராக இருந்தவர், இந்த மக்களோடு, மண்ணோடு கலந்தவர், இந்த மண்ணின் மைந்தர் அவருக்கு இழைக்கப்பட்ட, அநீதிகள், அக்கிரமங்கள், அநியாயங்களுக்கு தவறுகளுக்கு பிராய சித்தமாக அவருடைய பெயர் எத்தனையோ கட்டிடங்களுக்கு அன்று வைக்கப்பட்டது; மீண்டும் இவருடைய பெயர் இருக்க வேண்டும்; அவருடைய படங்களும் ஏற்கனவே வைக்கப்பட்ட கட்டிடங்களில் இருக்க வேண்டும் என்று சொல்லி, இங்கே எம்.ஜி.ஆர். படம் இருக்கவேண்டும் என்று சொன்னால் அதிலே கூட எங்களுக்கு பெருமையாக இருக்க முடியும். அவர்களுக்கு அந்த உணர்வு வருகிறபோது 13 ஆண்டு காலம் அனுபவித்த அரசியல் கொடுமைகள். அக்கிரமங்களுக்கு ஒரு நியாயபூர்வமான விசாரணைத் தேவை; அனைத்து காரியங்களிலும். அனைத்து மட்டங்களிலும் அப்படிப்பட்ட விசாரணை இருந்தால் தான் அரசியல்வாதிகளைப் பற்றி மக்கள் மத்தியில் ஒரு நல்ல அபிப்பி ராயம் ஏற்படும்.

ஏதோ அநியாயக்காரர்கள், அக்கிரமக்காரர்கள், தி.மு.க. காரர்கள், கொள்ளை அடித்து விட்டார்கள் என்று பறை சாற்றினார்கள்; பிரசாரம் செய்தார்கள். இன்றைக்கும் கழகத்தினுடைய வெற்றியை விமர்சனம் செய்கிறார்கள், தொலைக் காட்சியில், 146 இடங்களைப் பெற்று இருக்கிறோம். தமிழகத் தினுடைய அரசியல் வரலாற்றில் இப்படிப்பட்ட ஒரு மகத்தான காரியம் நிகழவில்லை என்று அனைத்துப் பத்திரிகையிலும் எழுதினார்கள். இந்த பெருமையை தாங்கிக்கொள்ள முடியாத,

1989 பிப்ரவரி 14] [திரு. வே. தங்கபாண்டியன்]

மத்திய அரசினுடைய பிடிப்பில் இருக்கின்ற தொலைக்காட்சி அதை விமர்சனங்களில் கொச்சைப்படுத்துகிறார்கள். புதிய சிந்தனை என்ற பெயரால் வியாக்கியானம் தருகிறார்கள்.

அணிகள் ஒன்று சேர்ந்திருந்தால் தி.மு.க. ஆட்சிக்கு வந்திருக்காது என்று அவர்களுடைய ஆதங்கத்தை, ஆசையை வெளிப்படுத்துகிறார்கள். 'அத்தைக்கு மீசை முளைத்தால் தான் சித்தப்பா' அந்த அணிகள் வந்த பின்பு திமுக தோற்று இருந்தால் அது உண்மையாக இருக்கலாம். இதே அணிகள் தான் 1977, 1980-ல் வெற்றிப் பெற்றிருக்கிறார்கள். அப்போது பூரித்துப் போன சில மத்திய அரசினுடைய ஏவலாளர்கள் அவர்களை மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ளவேண்டும், அவர்கள் சந்தோஷப்பட வேண்டும் என்று விரும்புகிற பத்திரிகையாளர்கள் சிலபேர் இன்னும் இருக்கிறார்கள். அதில் வளைந்து போய், நிமிர்ந்து போய் இன்றைக்கு ஒரு மிகப்பெரிய பயங்கரமான நிறுவனமாக இருக்கின்ற சென்னை தொலைக் காட்சி நிறுவனம் தன்னுடைய போக்கை இன்றைய அளவுக்கும் மாற்றிக் கொள்ளவில்லை. ஆகவே தான் நாங்கள் இந்த மாமன்றத்திலே சொல்கிறோம். மத்திய அரசினுடைய அதிகாரத்தில் இருக்கிற காரணத்தால் தான் இந்த மாநிலத்தில் அரசியல் வியாபாரம் செய்கின்ற சென்னை தொலைக்காட்சி நிறுவனத்தை நம்மால் கட்டுப்படுத்த முடியவில்லை

(முற்பகல் 11-10)

இங்கே நம்முடைய மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் எதற்கெடுத்தாலும் மத்திய அரசினுடைய பலத்தைப் பற்றி, மத்திய அரசினுடைய அதிகாரத்தைப் பற்றிப் பேசுகிறீர்களே என்று சொன்னார்கள். ஒரு சிறிய உதாரணத்தைச் சொல்கிறேன், 25 ஆண்டுக் காலமாக இந்த நாட்டை ஆண்டோம் என்று பெருமையாக, கித்தாப்பாகப் பேசுகிறீர்களே ; மீண்டும் யாருடைய ஆட்சியை இங்கே கொண்டுவர வேண்டுமென்று பேசினார்கள்? கோட்டையிலே கொடி ஏற்றுகிற அந்த உரிமையைக் கூட காங்கிரஸ்காரர்கள் 20 ஆண்டுகளாகத் தரவில்லை. தலைவர் கலைஞர் அவர்கள் தான் இந்தியாவிற்கு எடுத்துக்காட்டாக சுதந்திர நாளில் ஒரு நாட்டினுடைய, ஒரு மாநிலத்தினுடைய முதலமைச்சர் கொடியேற்றவேண்டுமென்ற உரிமையைப் பெற்றுத் தந்து அதை 10 ஆண்டுகளுக்கு நம்முடைய மறைந்த மாண்புமிகு

முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் செய்தார்கள். அப்படிப்பட்ட சிறு சிறு காரியங்களுக்குக் கூட கலைஞர் தான் தேவைப் பட்டார். மத்திய மாநில உறவு, மத்தியிலே இருக்கின்ற அதிகாரங்கள் மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்வது, திடீரென்று சொன்ன சித்தாந்தம் அல்ல. அறிஞர் அண்ணா காலத்தில் பேசப்பட்டு நம்முடைய காலத்தில் ராஜ மன்னார் குழு அமைக்கப்பட்டு, அப்போது அந்தக் குழு பரிந் துரை செய்தது, இதே மாமன்றத்தில் விவாதிக்கப்பட்டு தீர்மானம் செய்யப்பட்டு, மத்திய அரசிற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

தென் மாநில முதலமைச்சர்கள் பல முறை இன்றைக்குப் புதிய அரசுகள் மாநிலக் கட்சிகள் அரசாங்கத்தை அமைத்த போது இந்த சிந்தனை இன்றைக்கு விரிவுபடுத்தப்பட்டு மத்திய அரசாங்கம் உணர்ந்ததால் சர்க்காரியா கமிஷன் போட்டு, மத்திய அரசாங்கம் தயாராக இருக்கிறது விவாதிப்போம் என்ற வகையில் என்னென்ன அதிகாரங்களை மாநிலங்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று தயாராக இருக்கும்பொழுது, இங்கே இருக்கின்ற மாநில கட்சிகளுக்கு, இங்கே இருக்கின்ற காங்கிரஸ் கட்சிக்கு அந்த உணர்வு வரவில்லையே என்பது தான் என்னுடைய ஆதங்கம். ஆகவே மத்திய மாநில உறவிலே ஒரு நிரந்தரமான வகையில், மாநில அரசுகளுக்கு கிடைக்க வேண்டிய அதிகாரங்கள் இருந்தால்தான் அடிப்படைத் தேவைகளை நிறை வேற்றுவதற்கு, ஏராளமான அடிப்படை கோரிக்கைகளை நிறை வேற்றுவதற்கு இந்த அரசுக்கு அக்கபூர்வமான காரியமாக அமையும். ஒரேயொரு சிறிய உதாரணத்தைச் சொல்ல விரும்பு கிறேன். மதுரையிலிருந்து கன்னியாகுமரிக்கு ஒரு நெடுஞ் சாலை இருக்கிறது. அந்த நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்த மாக தேசீய 'ஹைவேஸ்' இருக்கிறது. அதிலே ஒரு பாலம் கட்ட வேண்டுமென்று மாநில அரசு முடிவு எடுத்தாலும்கூட, அதற்கு மத்திய அரசாங்கத்தினுடைய அதிகாரிகளைச் சந்தித்து அவர்களுடைய அனுமதிக்குப் பின்னாலேதான் செயல்படவேண் டியிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பாப்பா உமாநாத் அவர்கள் சொன்னார்கள். ஒரு சிறிய காரியத்திற்குக் கூட நாம் ஒரு மனு போட்டு, 6 மாதம், ஒரு வருட காலத்திற்குப் பின்னர்தான் அந்தக் காரியம் நிறைவேறுகிற சூழ்நிலை இருக் கிறது என்று சொன்னார்கள். ஆகவே சின்ன சின்ன காரியங் களிலே மத்திய மாநில அரசு உறவுகள் ஒரு முரண்பாடாக இருக்

1989 பிப்ரவரி 14] [திரு. வே. தங்கபாண்டியன்]

கிற காரணத்தால் மாநில வளர்ச்சி தடைப்பட்டுப் போயிருக்கிறது. தலைவர் அவர்களே, எனக்குக் கொஞ்சம் அவகாசம் தர வேண்டுகிறேன் (குறுக்கீடுகள்).

மேலவை ஒழிப்புபற்றி இங்கே புதிய வியாக்யானங்கள் சொன்னார்கள். திடீரென்று மேலவையை நாங்கள் ஒழிப்போம் என்று மந்திரிசபையைக் கூட்டாமல் அல்லது யாருக்கும் சொல்லாமல் மேலவையை இங்கே கொண்டுவரவில்லை. தேர்தலிலே அறிவித்திருக்கிறோம். நாட்டு மக்கள் தீர்ப்பு அளித்திருக்கிறார்கள் மேலவை வேண்டுமென்று. மேதைகள் அறிஞர்கள் பெருமக்கள், சட்ட வல்லுநர்கள் ஆகியவர்கள் அடங்குவது தான் மேலவை என்பது. அந்த மேலவையில் அறிஞர் அண்ணா அவர்கள் இருந்தார்கள். லட்சுமணசுவாமி முதலியார் போன்றவர்கள் எதிர்க்கட்சி வரிசையில் சுமார் 25 ஆண்டுக்காலம் இருந்தார்கள். திரு. வெங்கட்ராமன் போன்றவர்கள் எல்லாம் அங்கே பணியாற்றினார்கள். இந்த அவையில் யாரோ வந்துவிடுவார்கள் என்று அச்சம் தெரிவித்தார்கள். உறுதியாகச் சொல்கிறேன் * * இங்கே இடம் கிடையாது. நீங்கள் எதிர்பார்க்கிற * * வரமாட்டார்கள். நியாயமானவர்கள்தான் வருவார்களே தவிர, நீங்கள் யாருக்கும் அச்சப்பட வேண்டாம். அறிஞர் பெருமக்கள், தியாகம் செய்பவர்கள், சேவை செய்பவர்கள், வல்லுநர்கள் தான் இங்கே வருவார்கள்.

அடுத்து, செலவினங்களைப் பற்றிச் சொன்னார்கள். அதை யாருக்குச் சொல்வது? செலவு அதிகம் வரும் என்று வேதனைப்படுகிறார்கள். ரூ. 3,600 கோடி ஆண்டுக்கு தமிழகத்தினுடைய வரவு-செலவு. மேலவை இருந்தால் நாம் அதற்காகச் செலவு செய்வது ஆண்டுக்கு ரூ. 1 கோடி. ரூ. 3,600 கோடியிலே ரூ. 1 கோடி செலவு செய்வது அவர்களுக்கு வேதனை, சிரமம், கஷ்டம். ஆனால் அவர்கள் போட்ட வாரியங்கள் எத்தனை? கோழிக்கு வாரியம் போட்டார்களே. 43 வாரியங்கள். கட்சிகளுக்காக வாரியங்கள். நினைத்தவர்களுக்கு எல்லாம் வாரியங்கள். அரசு உடைமை. யார் யாருக்கோ அரசுடைமை, வசதி வாய்ப்புகள் செய்து கொடுத்தார்கள். ஆகவே இப்படிப்பட்ட

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

விணான செலவுகள் இனி நீக்கப்பட்டு, முறையான மேலவை வந்தால்—மேலவை என்பது சாதாரண காரியம் அல்ல. அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். நான் ஓர் உதாரணம் சொல்ல விரும்புகிறேன். சூடான தேநீர் இருந்தால் அதைக் கப்பிலிருந்து சாசருக்கு மாற்றி விடுவதனால், அதன் சூடு குறைந்து, ஆனால் சுவை குறையாது—சாப்பிட முடியும். அதைப் போல. . . . (குறுக்கீடு).

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், சட்டமன்ற மேலவைக்கு * * வரமாட்டார்கள் என்றார்கள். எனக்குத் தெரியும். * * (குறுக்கீடுகள்).

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சரவர்கள் * * மேலவைக்கு வராமல் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் தங்கள் மூலமாக அவர்களை கேட்டுக்கொள்ள விரும்புவது அவர்கள் ஏதாவது இன்கம் டாக்ஸ் பாக்கி வைத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் உறுப்பினராக இல்லாதவர்களைப் பற்றி பேச வேண்டாம் என்று இருதரப்பாரை நான் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பிடுவது பொருத்தம் அல்ல என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, * * இன்கம் டாக்ஸ் பாக்கி இருக்கிறதா இல்லையா என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத்தான் தெரியும். எனக்குத் தெரியாது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே உறுப்பினராக இல்லாதவர்களைப் பற்றி இங்கே குறிப்பிடக்

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

கூடாது. எனவே * * என்ற சொல்லையும், * * என்ற சொல்லையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த இரண்டு பெயர்களையும் நீக்க உத்தரவிடுகிறேன். திரு. தங்கபாண்டியன் விரைவிலே பேசி முடிக்க வேண்டும்.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய சொந்த மாவட்டமான காமராஜர் மாவட்டத்தில் பல்வேறு காரியங்கள் புறக்கணிக்கப் பட்டு போய் இருக்கின்றன. நீண்ட நெடுங்காலமாக அழகர் அணைத் திட்டம், அதைப் போலவே நீர்ப்பாசனத் திட்டங்கள் என்று இன்றைக்கு பெரிதும் எதிர்பார்க்கின்ற பல்வேறு திட்டங் கள் அங்கே நிறைவேற்றப்பட வேண்டும். நிரந்தரமான பரிகாரம் செய்வதற்கு இந்த அரசு வழி வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய அருப்புக்கோட்டை தொகுதியைப் பற்றி நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

வறுமை கோட்டிற்குள்ளே மனிதன் தான் இருப்பான். ஆனால் வறுமை கோட்டிற்குள்ளே ஒரு தொகுதியே இருக்கிறது. இடைக் காலத்திலே தேர்தல் நேரத்திலே Incentive cash கொடுப்பதைப் போல ஏராளமான காரியங்கள் செய்வதாக பிரமை உண்டாக்கினார்கள். பிறந்த மேனியாக இருக்கின்ற அந்தத் தொகுதியை இந்த அரசு கொஞ்சம் கண்ணும் கருத்துமாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நறிக்குடி, காரியப்பட்டி, திருச்சுழி போன்ற போக்குவரத்து வசதிகள், குடிதண்ணீர் வசதிகளற்று இருக்கின்ற அந்த குக்கிராமங்களை இந்த அரசு தனியாக கவனிக்க வேண்டுமென்று கேட்டு இந்த நல்ல வாய்ப்பிற்கு என் நன்றியைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். நன்றி வணக்கம்.

திரு. வே. நா. சுப்பிரமணியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, அருப்புக்கோட்டை

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றன.

தொகுதியிலே இடைத் தேர்தல் நடந்தபோது, கூட்டுறவுச் சங்கங்களிலே ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் அநியாயமாக கொள்ளையடித்து தேர்தல் நிதி வசூல் செய்தார்கள் என்ற அந்தக் குற்றச்சாட்டை சுமத்தியிருக்கிறார்கள். ஆதாரமில்லாமல் குற்றச்சாட்டுகள் சுமத்துவது இந்த அவையிலே ஏற்றுக்கொள்ளகூடாது ஒன்று என்று முதல்வர் அவர்கள் காலையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே அந்தப் பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதை நீக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லி மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

(முற்பகல் 11-20.)

* திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே ஆளுநர் அவர்களின் அறிக்கையின் பேரிலே விவாதங்கள் இரண்டு நாட்களாக நடந்து கொண்டிருக்கின்றன. இந்த அறிக்கை விரிவாக இல்லை, பக்கங்கள் அதிகமாக இல்லை என்றெல்லாம் குறை கண்டவர்கள் உண்டு. பக்கங்கள் அதிகமாக இல்லையென்றாலும், ஒவ்வொரு பக்கத்திற்கும் திட்டங்கள் அதிகமாக இருக்கின்றன (மேசையைத் தட்டும் ஒலி) சில பேர் சொல்வார்கள்—நம்முடைய தமிழ் மறையிலே—மூர்த்தி சிறியதாக இருந்தாலும் கீர்த்தி பெரியது என்று சொல்வார்கள். அதுபோன்று இந்த ஆளுநர் உரையிலே விரிவாக நல்ல திட்டங்களை எடுத்து வைத்திருக்கிறார்கள் 'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே' என்று சொல்வார்கள். அரசாங்கத்திலுடைய திட்டங்களை இந்த ஆண்டிற்கு என்னென்ன காரியங்களை ஆற்றவிருக்கிறார்கள், அவர்களுடைய கொள்கை என்ன, எந்தப் பாதையிலே இந்த அரசாங்கம் செல்லவிருக்கிறது என்பதை கோடிட்டு காட்டுகின்ற ஒன்றுதான் ஆளுநர் உரை என்பது. எல்லாவற்றையும் இதிலே எதிர்பார்க்க முடியாது. ஆனால் இருக்கின்றதை வைத்து இவர்கள் எல்லாம் இந்தப் போக்கிலே போவார்கள், இந்த அரசாங்கம் இந்த திசையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்பதை நாம் கண்டுகொள்ள முடிகிறது. ஆனால் என்னைப் பொறுத்த அளவிலே எல்லா பக்கங்களையும் நாம் பார்க்காவிட்டாலும், சில பக்கங்களிலே சொல்லியிருக்கிற சில முக்கியமான

1989 பிப்ரவரி 14] [திரு. கோ. பூவராகன்]

கருத்துக்களை எடுத்து வைக்க ஆசைப்படுகிறேன். ஒன்று, ஒரு நிர்வாகத் திறமை வரவேண்டும். அந்த நிர்வாகத் திறமையிலேயே சிக்கன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பொறுப்புள்ள அரசாங்கமாக இந்த அரசாங்கம் நடந்து கொள்ளும் என்று இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனென்றால், மிகுந்த ஆழ்ந்த அனுபவமும், சிறந்த அறிவாற்றலும் உள்ள முதல்வர் அவர்கள் இந்த அமைச்சரவையினுடைய பொறுப்பை ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். இந்த அறிக்கையைப் பொறுத்த அளவிலே அவர்களுடைய அனுபவம் இதிலே நன்றாக, தெள்ளத்தெளிவாக தெரிகிறது. ஒன்று, வருங்காலத்திலே நம்முடைய நிதிநிலைமையை எவ்வாறு பெருக்குவது? இருக்கிற நிதி ஆதாரங்களை எவ்வாறு நாம் வளர்த்துக் கொள்வது? கொடுக்கிற பணத்தை, வரிப் பணத்தை எவ்வாறு சிக்கனமாக ஒரு காசுகூட வீணாக்காமல் செலவு செய்யப்படவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது நம் எல்லோராலும் வரவேற்கப்பட வேண்டும். ஒரு காசு கூட வீணாக்கப்படக்கூடாது என்பதைப் பார்க்கின்றபோது,—ஏற்கெனவே வீணடித்துவிட்டார்களா என்று நீங்கள் கேட்கக் கூடாது—இனிமேல் அவ்வாறு செய்ய மாட்டோம் என்ற அளவிற்குத்தான் அவர்கள் எடுத்து வைத்திருக்கிறார்கள்.

பல குறைகள் இருக்கலாம். எந்த ஆட்சியிலும் குறைகளே இல்லாமல் நிறைவாகச் செய்கின்ற நிலை இருக்க முடியாது. குறைகளைப் போக்கி நல்ல முறையிலே ஆட்சி அமைய வேண்டுமென்பதுதான் எல்லோருடைய கருத்தாக இருக்கிறது. இந்த ஆளுநர் உரையைப் பொறுத்த அளவிலே ஏற்கெனவே நடந்த தவறுகள் மீண்டும் நடைபெறாமல் பார்த்துக் கொள்வோம்; நல்ல முறையிலே ஆட்சி அமைவதற்கு உறுதுணையாக எல்லோருடைய ஒத்துழைப்பையும் நாங்கள் கோருகின்றோம் என்று கூறியிருக்கிறார்கள். மக்கள் நல்ல தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். 'மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு' என்று முதலிலேயே குறிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு இடங்களிலே கடவுளைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஒன்று, 'ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்கின்றோம்' என்றும், மற்றொன்று, 'மக்களின் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு' என்றும் மகிழ்ந்து சொல்லியிருக்கிறார்கள். மக்கள், மிகுந்த, ஆழ்ந்த தெளிவுபெற்று நல்லமுறையிலே, ஒரே கட்சி ஆட்சியிலே, நிலையான ஆட்சி அமைய வேண்டுமென்று,

இந்தக் கட்சி அந்தக் கட்சி என்று பாராமல், ஒரே கட்சியிடம் பொறுப்பைக் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பொறுப்பை ஏற்றிருக்கின்றவர்கள், ஆளுநர் உரையிலே பொறுப்பான சில விஷயங்களை வெளியிட்டிருக்கிறார்கள் என்று பார்க்கின்றபோது என்னைப் போன்றவர்கள் மகிழாமல் இருக்க முடியாது.

சத்துணவு மையத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சத்துணவு மையத்திலே பணிபுரிகின்ற 2½ இலட்சத்திற்கும் மேற்பட்டவர்களுடைய பதவிக்காலம் உறுதி செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய ஒன்றுதான். சத்துணவுத் திட்டத்திலே இருக்கின்ற குறைபாடுகளெல்லாம் களையப்படும். ஒவ்வொரு பணத்துக்கும் சரியான பொறுப்பு வைத்து, நல்லவிதமாக சத்துணவுத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதேபோன்று, இங்கே மேலவை கொணரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். மேலவை வேண்டுமா, வேண்டாமா என்ற இரு வேறு கருத்துக்களில், பெரிய கட்சிகள் என்று சொல்லப்படுகின்ற கட்சிகள் அத்தனையும் தேர்தல் அறிக்கையிலே நாங்கள் வந்தால் மேலவையைக் கொண்டு வருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது வரும், இது வரும் என்று சொன்னாலும் கூட, மேலவை வரும் என்று சொன்னவர்கள் இன்றைய தினம் எதிர்க்க வேண்டிய அவசியமே இல்லை. மேலவை வருகின்றபோது அதிலே யாரைப் போடுவது, எப்படிப் போடுவது யாரையெல்லாம் அதிலே நியமிப்பது என்பதை அவ்வப்போது அறிந்தவர்களை, தெரிந்தவர்களைப் பார்த்து போடுவார்கள். அதிலே தேர்தல் முறையும் இருக்கிறது. நியமன முறையும் இருக்கிறது. தேர்தலிலே நிற்பவர்களை அந்தந்தப் பகுதிகளிலே உள்ள வாக்காளர்கள் தேர்ந்தெடுப்பார்கள்.

அதே போன்று, இன்றைய தினம், மாநகராட்சிகளுக்கெல்லாம் தேர்தல் நடைபெறவேண்டும்; அதுவும் ஏப்ரல் மாதத்திற்குள்ளேயே நடத்திவிடவேண்டுமென்று குறிக்கப்பட்டிருக்கிறது. சிலபேர் 21 வயதிலிருந்து 18 வயது வந்தபிறகு வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். என்னைப் பொறுத்த அளவிலே உடனடியாக அந்தத் தேர்தல் வைக்கப்பட வேண்டும். சட்டமன்றம் கலைக்கப்பட்ட பிறகு, ஓராண்டுக்

காலம் கழித்து, வாக்குரிமை அளிக்கும் உரிமை 21 வயதிலிருந்து 18 வயது வந்த பிறகு வைத்துக்கொள்ளலாம் என்று நீதி மன்றங்களிலேகூட வழக்கு போடப்பட்டது. இருந்தாலும் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தப்பட்டு, அந்தத் தேர்தலிலே வெற்றி பெற்று இந்தச் சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பல ஆண்டுக் காலமாக மாநகராட்சிகளுக்கு தேர்தல் நடைபெறாமல் யார் யார் கையிலேயோ நிர்வாகம் போய்க்கொண்டிருப்பதைப் பார்க்கின்றபோது விரைவிலேயே, எவ்வளவு சீக்கிரத்திலே, அந்தத் தேர்தல் நடைபெறவேண்டுமோ அவ்வளவு சீக்கிரத்திலே நடைபெற்று, ஜனநாயக முறையிலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அந்தப் பொறுப்பிலே வரவேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை. அதைச் செய்யவேண்டுமென்று நான் இந்தச் சமயத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே கூட்டுறவு இயக்கங்களைப் பற்றிச் சொன்னார்கள். அந்தக் கூட்டுறவு இயக்கங்களுக்கு விரைவில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். கூட்டுறவு இயக்கங்கள்தான் நாட்டிற்கு நல்வுயர்வைக் கொடுக்கும் என்று எல்லோருமே சொல்லுகிறோம். அப்படிப் பார்க்கிறபோது நீண்ட காலமாக கூட்டுறவு இயக்கங்களுக்கு தேர்தல் நடத்தப்படாமல் அவையெல்லாம் தனிப்பட்ட அதிகாரிகளின் மூலமாகவே செயல்பட்டு வருவதை நாம் தொடர்ந்து அனுமதிக்கக் கூடாது. அப்படித்தான் இருக்க வேண்டும் என்று யாரும் சொல்ல முடியாது. எனவே விரைவில் தேர்தல் நடக்க வேண்டும் என்ற ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

அடுத்து, கிராமப்புறங்களில் இருக்கிற கிராம நிர்வாகம் சீர்கெட்டிருப்பதைப்பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது எல்லோரும் அறிந்த ஒன்று. கடந்த காலத்தில் எப்படியோ அவசரமாக என்று சொல்ல மாட்டேன்—ஏதோ ஒரு நினைப்பின் அடிப்படையில், கிராமப்புறங்களில் இருந்த அடிப்படை நிலையையே அழித்துவிட்டு அங்கே புதிய கிராம நிர்வாகத்தை ஏற்படுத்திவிட்டார்கள். அது இன்னும் புதியதாகவே இருக்கிறது. 4, 5 ஆண்டுகளாகியும் கூட அந்தப் புதிய நிர்வாகம், புதியதாகவே இருக்கிறது. நான் பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருந்தபோது தபால்துறை நிறுவனம் ஒன்றிற்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அந்தப்

பொதுத் துறை நிர்வாகம் 10 ஆண்டுக் காலமாக நஷ்டத்திலேயே செயல்பட்டுக் கொண்டு வந்தது. அதன் காரணமாக ஏன் கடந்த 10 ஆண்டுக் காலமாகவும் இந்தப் பொதுத் துறை நிறுவனம் சரியாகச் செயல்படவில்லை என்றும், லாபம் காட்டவில்லை என்றும் கேட்டோம். அதற்கு அவர்கள் பதில் சொல்லும்போது முதல் ஐந்தாண்டுகள் அனுபவமில்லாத காரணத்தால் "டீத்திங் டிரபிள்" ஏற்பட்டதென்றும், அதற்கு அடுத்த ஐந்தாண்டுகளில் ஏன் அதே நிலைமை தொடர்ந்து என்று கேட்டபோது 'அதற்குள் எல்லா மெசினரிகளும் பழசாகிப் போய் விட்டன. ஆகவே லாபம் காட்ட முடியவில்லை' என்றும் சொன்னார்கள். அதைப்போல கடந்த 4 ஆண்டுகளாகியும்கூட தமிழகத்தில் கிராம நிர்வாகம் சீராக இல்லை என்பதால் அது திருத்தியமைக்கப்பட வேண்டும் என்று சொல்லுவதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

இன்றைக்கு இருக்கிற கிராம நிர்வாகத்தில் உள்ள அதிகாரிகளுக்கு, பழைய அதிகாரிகள்தான் கணக்கு எழுதிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். யாரையெல்லாம் முன்பு வேலையைவிட்டு அனுப்பிவிட்டோமோ, அவர்கள்தான் தற்போது பணியில் இருப்பவர்களுக்கு உதவியாக இருந்து கொண்டு, கணக்குகளை எழுதிக் கொண்டிருக்கிறார்கள். கிராம நிர்வாகத்தில் உண்மையான நிலையை இன்றைக்குப் பார்க்க வேண்டுமென்றால் அறிந்து கொள்ளவே முடியாத சூழ்நிலைதான் இருக்கிறது. அந்த அளவுக்கு கிராம நிர்வாகத்தின் அடிப்படையே அழிந்துவிட்ட சூழ்நிலைதான் இருக்கிறது. ஆகவே பொறுப்பில் இருக்கிறவர்கள் தற்போதைய கிராம நிர்வாகத்தைச் சீர்திருத்தம் செய்து, நல்ல முறையில் செயல்படும்படி செய்ய வேண்டும். அதோடு, அந்த நிர்வாகத்தில் பணியில் இருப்பவர்களுக்குப் பாதகம் இல்லாமலும் பார்த்துக் கொள்வோம் என்ற பாதுகாப்பையும் தெரிவித்திருக்கிறார்கள், ஆளுநர் உரையிலே. அப்படிப் பார்க்கிறபோது என்னைப் பொறுத்த வரையில் இருப்பவர்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டு கிராம நிர்வாகத்தையே மாற்றி அமைக்க வேண்டும் என்று சொல்ல முன்வரவில்லை. கிராம நிர்வாகச் சீரமைப்பு என்பது நல்லவிதமாக அமைய வேண்டும். அடித்தளம் நன்றாக அமைய வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கையாகும்.

அடுத்து பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து ஒன்றியங்கள், நகராட்சிகள் ஆகியவற்றின் பதவிக் காலத்தை 3 ஆண்டுகளி லிருந்து மேலும் இரண்டாண்டுகள் அதிகப்படுத்த சட்டம் கொண்டு வரப்படும் என்று ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக் கிறது. அந்தச் சட்டம் விரைவில் வரும் என்றும் சொல்லியிருக் கிறார்கள். மூன்று ஆண்டுகள் போதாது. அதிலும் இப்போது பதவிக்கு வந்திருப்பவர்களுக்கு மூன்றாண்டுகள் நிச்சயமாகப் போதாது. அவர்கள் வந்து அமர்ந்ததும் கணக்கையெல்லாம் பார்த்தார்கள். கணக்கில் ஒன்றுமே இல்லை; ஏதோ புதிய புத்தகங்களை வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். அவ்வளவுதான். பல பஞ்சாயத்துக்களிலும், பஞ்சாயத்து ஒன்றியங்களிலும் இது தான் நிலைமை. இதையெல்லாம் சட்டசபையில் நிதிநிலை அறிக்கை வரும்போது விளக்கமாகப் பேசலாம் என்றே கருது கிறேன். இப்போது நேரமில்லாத காரணத்தால் அதன் உள்ளே போக விரும்பவில்லை. எனவே கிராம நிர்வாகத்தை மேற் கொண்டிருக்கிற பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் மற்றும் நகராட்சிகள் ஆகியவற்றின் பதவிக் காலத்தை 3 ஆண்டுகளி லிருந்து 5 ஆண்டுகளாக உயர்த்த சட்டம் கொண்டு வரப்படும் என்று சொல்லியிருப்பதை வரவேற்கிறேன் என்று சொல்லி அதற் கான சட்டத்தை விரைவில் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் "ஒரு சாம்ராஜ்யம்" பற்றிக் குறிப்பிட்டார்கள். நாம் பல சாம்ராஜ்யங்களை அழித்து விட்டோம். ஆனால் இன்றைக்கும் ஒரு சாம்ராஜயம் பரவலாக, எல்லா மக்கள் மத்தியிலும் அடிபட்டு வருகிறது. அது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று கருதுகிறேன். அதைப்போலவே சாராயக் கடைகள் திறக்கப்பட மாட்டாது என்று சொல்லியிருக்கிறார்கள். சாராயக் கடைகள், கள்ளுக் கடைகள் திறக்கப்பட மாட்டாது. சரி. இருக்கிற கடைகள் என்ன ஆவது என்று எல்லோரும் கேட்கிறார்கள். பிராந்திக் கடைகள் என்ன ஆவது? அந்தப் பிராந்திக் கடைகள் மூலமாக அரசாங்கத்திற்கு ஒழுங்காக வர வேண்டிய வருமானம் இன்றைக்கு வரவில்லை. தமிழ் நாட்டில் இதுதான் நிலைமை. இதேபோன்று பிராந்திக் கடையை வைத்திருக்கிற மகாராஷ்டிர மாநிலத்திற்கு வருகிற வருமானம்

நம் தமிழ்நாட்டிற்கு வரவில்லை. அதையொட்டி கடைகளையெல்லாம் எடுக்க வேண்டுமென்றால் கட்டாயம் எடுத்துவிட வேண்டும் என்பதுதான் என் கொள்கை. நான் வருவாய்க்காகத்தான் சொல்கிறேன். பிராந்திக் கடைகள் யாருக்கு, எவ்வாறு வழங்கப்பட்டன என்பதையெல்லாம் முதல்வர் அவர்களின் கவனத்திற்கே விட்டுவிடுகிறேன். அவருக்கு நிறைய பரிசீலனை செய்யக்கூடிய திறமைகள் உண்டு. எப்படி அனுமதி அளித்தார்கள் என்பதைக் கண்டுபிடித்து, முறையாக அவற்றிலிருந்து வருவாய் தேடிக்கொள்ளும் அளவுக்கு அவை நீடிக்க வேண்டுமென்றால், அவ்வாறு செய்ய வேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கை. அல்லது அறவே மதுவிலக்கில் முழுக் கவனம் செலுத்தி, பிராந்திக் கடைகள் வேண்டாம், கள்ளுக் கடைகள் வேண்டாம், சாராயக் கடைகள் வேண்டாம் என்று சொன்னால், அதை ஒத்துக்கொள்ள வேண்டும், வரவேற்க வேண்டும். அதனால் பாதிக்கப்பட்டுள்ள சாதாரண ஏழை மக்கள் நம்முடைய அரசாங்கத்தைப் பெரிதும் பாராட்டுவார்கள். அத்தோடு அவர்கள் சொன்னது போன்று, எங்கு பார்த்தாலும் தனியாக ஒரு ராஜ்யம் நடந்து கொண்டிருக்கிறது. அந்த ராஜ்யத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் அதற்கு எவ்வாறெல்லாம் செய்ய வேண்டுமென்பதை அவர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். எனவே செய்வார்கள் என்பதால், அதை அவர்கள் முடிவிற்கே விட்டுவிடுகிறேன். அதிலே வருவாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். (மணி அடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

சாராய உற்பத்தி குறித்து பல சமயங்களிலே பலவிதமான சட்டங்கள், திருத்தங்கள் எல்லாம் கொண்டு வந்து, ஒரு கோடியல்ல, பல கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. தவிர்க்கப்படுமென்று சொல்லி இருக்கிறார்கள். அந்த இழப்பைத் தவிர்க்க வேண்டும். அந்த வருவாயை நல்ல முறையிலே பயன்படுத்த வேண்டுமென்று நான் கருதுகிறேன்.

அடுத்து, ஆளுநர் உரையில் மூடிக் கிடக்கும் தொழிற்சாலைகளை திறப்பதற்கு முயற்சி எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய விருத்தாசலம் தொகுதியிலே, வேண்டு

மென்றே ஒரு தொழிற்சாலையை மூடிவிட்டார்கள். ஒரு போட்டி. அந்தப் போட்டி எல்லாம் எப்படி வந்தது என்பதை அவர்கள் உணர்வார்கள். நிர்வாகத்தில் இருக்கும் தலைமைக்கும், தொழிலாளர்களுக்கும் போட்டி. தவறான முறையிலே ஒரு நோட்டீஸ் அடித்துவிட்டார்கள். அந்த நோட்டீசை வைத்துக் கொண்டு, இந்தத் தொழிற்சாலையை மூடிவிட்டால் உங்களுக்கு வேலை கிடைக்காது என்று சொல்லி, அதை மூடிவிட்டார்கள். இதே போன்ற மற்ற தொழிற்சாலைகள் லாபகரமாக நடக்கின்றன. கர்நாடகாவில், ஆந்திராவில் லாபகரமாக நடக்கின்றன. நம்முடைய தொழிற்சாலையும் லாபகரமாக நடந்தது. எனவே அதை திடீரென்று மூட வேண்டிய அவசியமில்லை. இருந்தாலும் மூடச் சொல்லி, அதை வாங்குவதற்குக்கூட ஆளைத் தயார் செய்துவிட்டார்கள். அது ஏலம் போடப்பட்டது. அதை ஏலம் விடக்கூடாது என்று நானும், மற்ற சம்பந்தப்பட்டவர்களும் நீதி மன்றத்திலே வழக்கு போட்டிருக்கிறோம். அந்த வழக்கு இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. நான் முதலமைச்சரவர்களுடைய கவனத்திற்கு அதைக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். அந்தத் தொழிற்சாலை திறக்கப்பட வேண்டும். அது விருத்தாசலத்திற்கு மட்டுமல்ல, தமிழ் நாட்டிற்கே பெருமை தேடித் தரும் ஒரு தொழிற்சாலையாகும். மேலும் புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு எவ்வளவு சிரமம் என்பதைப் பார்க்க வேண்டும். எனவே பழைய தொழிற்சாலையை திறக்க வேண்டும். அதுமட்டுமல்ல, நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்றால் கிட்டத்தட்ட 2 கோடி ரூபாய் கொடுக்க வேண்டும். இது குறித்து மாண்புமிகு முதல்வரவர்களுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். அவர்கள் தொழில் அமைச்சராகவும் இருக்கிறார்கள், பணப் பொறுப்பும் அவரிடம் இருக்கிறது. 2 கோடி ரூபாய் நஷ்ட ஈடு கொடுத்து மூடிவிடுவதைவிட, 30 இலட்சம் ரூபாய் செலவு செய்தால், சிறப்பாக அந்தத் தொழிற்சாலையை நடத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு நெய்வேலியை ஒட்டியுள்ள நிறைய கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய முதல்வரவர்கள் டெல்லிக்குச் சென்றபோது, எங்களுக்கு லாபத்தில் பங்கு வேண்டும், ராயல்டி வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நெய்வேலிக்குப் பக்கத்திலே உள்ள கிராமங்களிலே வாழ்கின்ற

மக்களுக்கு, நிலங்களை எல்லாம் கொடுத்த மக்களுக்கு, உடமைகளைக் கொடுத்த மக்களுக்கு பணம் கொடுப்பதில்லை. ஆனால் நிலங்களை உடனடியாக எடுத்துக்கொள்கிறார்கள். அவர்களுக்கு இன்றைக்கு போக்குவரத்து வசதி செய்து கொடுக்கப்படவில்லை; குடியிருப்பு வசதியில்லை; பள்ளிக்கூடம் வைக்க அனுமதியில்லை; மின்சார வசதி கிடைப்பதில்லை; வைத்திய வசதி கிடையாது. அவர்கள் பல்லாண்டுக்காலமாக தொல்லைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே சரியான முறையில் அந்த நிர்வாகத்தை அழைத்துப் பேசி, அவர்களால் பாதிக்கப்பட்ட கிராம மக்களுக்கு, அந்த கிராமங்களை எடுக்கின்றவரையில், அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மிகப் பின் தங்கிய மக்களுக்கு, பின் தங்கிய மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பொருளாதார வளர்ச்சி, சமூக நீதி கிடைக்க நாங்கள் கவனம் காட்டுவோம் என்று ஆளுநர் அவர்கள் உரையில் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். நிதிச் செலவு அதிகமில்லாத சமுதாயப் பிரச்சினையை உடனடியாக அவர்கள் தீர்த்து வைக்க வேண்டும். நிதிச் செலவு இல்லாமல் ஒரு பிரச்சினை இருக்கிறது. அவர்கள் நீண்ட நாட்களாக கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சமுதாயப் பிரச்சினை, சமூகப் பிரச்சினையை அவர்கள் உணர்ந்தவர்கள் என்பதால், அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதோடு இந்த சமுதாய நீதியாக. . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நிதிச் செலவு இல்லாது சமூக நீதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அநேகமாக அடுத்த திங்கள் இறுதிக்குள்ளாக அந்த நல்ல முடிவு அறிவிக்கப்படும்.

திரு. கோ. பூவராகன்: நான் அதுதான் முன்னாலேயே சொன்னேன். இந்த அறிக்கையிலே "யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே" என்று சொல்லி இருந்தேன். அது போன்று இப்போது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்ததற்கு என்னுடைய நன்றியையும் பாராட்டுதல்

1989 பிப்ரவரி 14] [திரு. கோ. பூவராகன்]

களையும் தெரிவித்துக்கொள்கிறேன். வெளியிலே இருக்கின்ற பல்லாயிரக்கணக்கான மக்கள் சமூக நீதி வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அந்த மக்களும் நன்றாக வாழ்த்து வார்கள். இதிலே நான் ஒன்று மட்டும் சொல்லி முடித்துக்கொள் கிறேன். இது சம்பந்தமாக பல போராட்டங்கள் நடத்தி அதிலே சம்பந்தப்பட்டவர்கள், சம்பந்தப்படாதவர்கள் எல்லாம் இன்றைய தினம் வழக்கிலே சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அதை பரிசீலனை செய்து அவர்களை எல்லாம் விடுதலை செய்வதற்கு, அந்த வழக்குகளை திரும்பப் பெறுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உறுப்பினர் அவர்கள் எடுத்துக் காட்டிய அந்த வழக்குகளைப் பற்றியும் அரசு ஆலோ சனை செய்து வருகிறது. நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்த போதே, ஆளும் பொறுப்பை ஏற்பதற்கு முன்பே அந்த போராட் டத்திலே கைது செய்யப்பட்டவர்களை எல்லாம் விடுவிக்க வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வேண்டுகோள் விடப்பட்டது வேறு எந்தக் கட்சியும் எந்த வேண்டுகோளும் அது குறித்து விடுக்கவில்லை என்பதை மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். இப்போதும் அவர்கள் மீது இருக்கின்ற எந்தெந்த வழக்குகள் வாபஸ் பெறப்படலாம் என்பதையெல்லாம் யோசித்து நிச்சயமாக அந்த வழக்குகளி லிருந்து அவர்களை விடுவிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இரட்டை மகிழ்ச்சி. இரட்டை நன்றி. அவர்களுக்கு நான் மறுபடியும் மறுபடியும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு இந்த தேர்தலில் 13 முறைகள் பிரதமர் வந்தார். இதிலே 26 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். எங்கள் தலைவர் ஒரே ஒரு முறைதான் வந்தார்கள். நாங்கள் 4 பேர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறோம். தலைவர் வி. பி. சிங்., திரு. அஜித் சிங் அவர் களுக்கும், T. R. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர் களுக்கும் அவரைச் சார்ந்திருக்கின்ற கட்சிக்கும், எங்களுடைய தோழமைக் கட்சிகளுக்கும் என்னுடைய நன்றியையும் பாராட்டு தலையும் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன், வணக்கம். நன்றி.

திரு. ஒய். வெங்கடேஸ்வர திட்சிதர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. திரு. வி. பி. சிங் வந்ததும் தெரியாது, போறதும் தெரியாது என்று அவர்கள் சொல்கின்றார்கள். அந்த அளவுக்கு விளம்பரங்கள் செய்வதற்கு எங்களிடம் பணம் கிடையாது. காங்கிரஸ் கட்சியிலேதான் அவ்வளவு பணம் இருக்கிறது. அதனாலேதான் அவர்கள் விளம்பரப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். 13 தடவை அரசாங்க பொறுப்பில் வந்திருக்கிறார்கள்.

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே Prime Minister ஆகத்தான் வந்திருக்கிறார்களே தவிர கட்சித் தலைவராக இல்லை. Prime Minister என்ற முறையிலே மக்களைச் சந்திக்க வந்திருக்கின்றார்கள். தேர்தலுக்காக இரண்டு முறைகள்தான் வந்திருக்கிறார்கள். அதற்கு முன்னாலே வந்தது எல்லாம், அரசியல் நிகழ்ச்சிகள் வைத்து வந்திருக்கிறாரே தவிர வேறல்ல. அதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எடுத்துச்சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆகவே தேர்தல் பிரச்சாரத்திற்குத் தான் இரண்டு முறை வந்திருக்கிறார்கள். அதற்கு முன்னாலே வந்தது எல்லாம் இங்கே இருக்கின்ற பல நிகழ்ச்சிக்களுக்காக வந்தார்கள். அதற்காகத்தான் பிரதமர் அவர்கள் வந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் வந்த ஒவ்வொரு முறையும், 13 முறையோ 15 முறையோ, ஒவ்வொரு முறையும் திராவிட இயக்க கட்சிகளை குறை கூறிப் பேசியிருக்கிறார். பிரதமராக இருப்பவர் இப்படிப் பேசலாமா?

திரு. மா. சுந்தரதாஸ்: கட்சித் தலைவர் என்ற முறையிலே தான் அவர். . .

திரு. குமரி அவந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் திராவிட கட்சிகளைப் பற்றி குறை சொல்லி பேசி இருக்கிறார்கள் என்று இங்கே குறிப்பிட்டார்கள். அவர்கள் திராவிட கட்சி என்று சுட்டிக்காட்டியது சில கட்சிகளுடைய நடைமுறையைத்

தானே தவிர நம்முடைய தலைவர்களிலே பலர், நம்முடைய தலைவர் என்று சொல்கின்றபோது நமது முதல்வர் அவர்கள் உட்பட திராவிட இனத்தைப் பற்றியும் திராவிட கலாச்சாரத்தைப் பற்றியும் அவர்கள் குறைசொன்னார்கள் என்ற எண்ணத்தை வெளியிலே மக்கள் ஏற்றுக் கொள்கிறதுபோலவோ அல்லது நம்புகிறது போலவோ சில செய்திகளை பரப்புகிறார்கள். கழகத்தினுடைய ஆட்சியை சுட்டிக் காட்டுவதற்கு அவர்கள் அந்த பெயரைப் பயன்படுத்தினார்களே தவிர திராவிட இனத்தையும், திராவிட கலாச்சாரத்தையும் சுட்டிக்காட்டுவதற்காக அல்ல.

(முற்பகல் 11-40)

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் சொன்ன விளக்கத்தை காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்கள் புரிந்து கொள்ளவில்லையோ என்று சந்தேகப்படுகிறேன். எழுப்பப்பட்ட பிரச்சினை, பிரதமர் அவர்கள். இன்னும் சொல்லப்போனால் அன்புக்குரிய ராஜீவ் காந்தி அவர்கள் பிரதமராக வந்தாரா அல்லது காங்கிரஸ் கட்சியினுடைய தலைவராக வந்தாரா என்பதுதான். அதைத்தான் இங்கே திரு. சுந்தரதாஸ் அவர்கள் எழுப்பினார்கள். பிரதமராகத் தான் இங்கே வந்தார்கள். ஆனால் கடைசி இரண்டொரு முறைதான் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவராக வந்தார்கள் என்று இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால் 13 முறை வந்தபோதும் திராவிடக் கட்சிகளைப் பற்றிப் பிரதமர் அவர்கள் அவர்களுடைய கட்சி மேடைகளில் மட்டுமல்ல அரசு நிகழ்ச்சிகளில் கூடப் பேசியிருக்கிறார்கள்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே ஒன்றை சுட்டிக்காட்டினார்கள். அரசு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட பிரதமர் அவர்கள் திராவிட கட்சிகளைப் பற்றி பேசியதாக இங்கே குறிப்பிட்டார்கள். எல்லா இடங்களிலும் பிரதமர் அவர்கள் அப்படி பேசியதற்கான சான்றுகள் இல்லை. ஆனால் அதே சமயத்தில் பஞ்சாயத்து யூனியன், நகராட்சித் தலைவர்கள் கூட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட்டி, பேசியது சம்பந்தமான அறிக்கைகள் வெளியே வந்திருக்கின்றன என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, நல்லவேளை குமரி அனந்தன் அவர்கள் இதுபற்றி நினைவூட்டி எனக்கு விளக்கமளிக்க வாய்ப்பளித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசைக் கண்டித்து கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் நெல்லிக்குப்பம் திரு. கோவிந்தராஜன் அவர்கள் ஒரு தீர்மானத்தை அங்கே கொண்டு வந்தார்கள். அந்தத் தீர்மானத்தைக்கூட நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைக் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் கருத்தளவில் கொள்ள வேண்டும். அந்தத் தீர்மானத்தின் கருத்துக்கள் எங்களுக்கு உடன்பாடாக இருந்தாலும்கூட இப்பொழுது இந்தத் தீர்மானம் வேண்டாம் என்று சொல்லி, அதை நிறைவேற்றாமல் செய்திருக்கிறேன். உள்ளாட்சித் துறை அமைச்சருடைய தலைமையில்தான் அந்த இரண்டு கருத்தரங்குக் கூட்டங்கள் நடைபெற்றன. மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும், அதுபோல உள்ளாட்சி மன்றங்களுக்கும் மாநில அரசுக்கும் எவ்வளவு தொடர்பு இருக்க வேண்டும் என்பதைக் கவனத்தில் கொண்டு மத்திய அரசு அதிகச் சுமையுடன் இருக்க வேண்டாமென்று சொன்னோமே தவிர காங்கிரஸ் கட்சியைக் குறை கூறுவது மாதிரித் தீர்மானங்களைப் போட்டுவிடவில்லை. அவ்வளவு ஜாக்கிரதையாகத் தான் அந்தக் கூட்டத்தில் நான் கலந்து கொண்டிருக்கிறேன் என்பதைக் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களுக்கும், திரு. குமரி அனந்தன் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. கோ. வீரையன்: **

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரை மீது விவாதமே தவிர பிரதமர் உரை மீது விவாதம் அல்ல. வேறு கருத்துக்களை மற்றவர்கள் எடுத்துக்கூற அனுமதிப்பது நல்லது. இப்படியே போய்க்கொண்டிருந்தால் கவர்னரை மறந்துவிடுவோம். (சிரிப்பு).

*திரு. அ. லெ. சுப்பிரமணியன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே. வணக்கம். 1967 ஆம் ஆண்டு நான் சட்டப் படிப்பை முடித்துவிட்டு வந்த நேரத்தில் என்னை அரசியலில்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கி வைக்கப்பெற்றது.

1989 பிப்ரவரி 14] [திரு. அ. லெ. சுப்பிரமணியன்]

அறிமுகப்படுத்தி, திருநெல்வேலி தொகுதியில் என்னை சட்டமன்ற உறுப்பினராக ஆக்கிய பேரறிஞர் அண்ணா அவர்களை நான் நினைத்துப் பார்க்கிறேன். மீண்டும் அந்த தொகுதியில் நான் வெற்றி பெறுவதற்குக் காரணமாக இருந்து, அதற்கு வழிவகை செய்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மாத்திரமல்ல என்னைத் தேர்ந்தெடுத்தமைக்கு நெல்லை வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து நான் என்னுடைய உரையைத் துவங்குகின்றேன்.

13 ஆண்டுகளுக்குப் பிறகு நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள். வரலாற்றில் மொகலாய பேரரசன் பாபர் முதலில் ஆட்சியில் இருந்தான். அரசியல் சூழ்நிலை காரணமாக அவனுடைய ஆட்சி கவிழ்க்கப்பட்டது. இதேபோல 13 ஆண்டுக் காலம் அவனும் ஆட்சியை இழந்துவிட்டு பின்பு பெரு முயற்சியின் காரணமாக, உள்ள உறுதியுடன் போராடியதன் காரணமாக மீண்டும் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றினான். கைப்பற்றியதற்குப் பிறகு இன்னும் நிலையான, உறுதியான ஒரு விரிவான ஆட்சியை பாபர் நடத்திக் காட்டினான் என்று வரலாற்றிலே படித்திருக்கின்றோம். வரலாறு திரும்புகிறது. History repeats itself. என்று சொல்வார்கள்; அந்த வரலாறு இன்றைக்குக் கலைஞர் உருவில் தமிழ்நாட்டில் திரும்பியிருக்கிறது என்பதை நான் மிக மகிழ்ச்சியோடு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இங்கே எத்தனையோ இன்னல்களுக்குப் பிறகு, இன்றைக்குக் கலைஞர் அவர்கள்—ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நான் கடந்த காலத்தை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருவதைக் கடமையாகக் கருதுகின்றேன்.

ஜனவரி மாதம், 1976 ஆம் ஆண்டு, எமர்ஜென்சியை எதிர்த்த காரணத்திற்காக மட்டுமே, நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய ஆட்சி கலைக்கப்பட்டது. கலைத்த கையோடு, ஒரு கமிஷனை—சர்க்காரியா கமிஷனைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலை. குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு மறுப்பு தருவதற்கு வாய்ப்புகூடத் தராமல், அந்தக் கமிஷன் தந்த அறிக்கை. அந்த

அறிக்கையின் மீது அப்பொழுதிருந்த அரசு, கலைஞர் மீது தொடர்ந்த ஏராளமான கிரிமினல் வழக்குகளைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலை, இத்தனையும் சந்தித்திருக்கின்றார்கள்.

அதுமட்டுமல்ல, தமிழகத்தினுடைய ஆட்சியும். அன்றைக்கிருந்த ஆட்சி, தன்னுடைய பங்கிற்காக எத்தனையோ வழக்குகளை மாண்புமிகு கலைஞர் மீது சுமத்தியது. இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இங்கே மதுரைக்கு வந்த நேரத்தில் கறுப்புக் கொடியைக் காட்டியதற்காக, சென்னையிலேயிருந்த அவர்கள் மீது 307-கொலை முயற்சி வழக்கு; அதிலே வேடிக்கை என்னவென்றால், இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் அரசியல் விரோதத்தினாலே படுகொலை செய்யப்பட்டதற்குப் பிறகும் இரண்டாண்டுக்காலம் அந்த வழக்கு நடந்து அதிலிருந்து, நீதிமன்றத்தினாலே விடுவிக்கப்பட்ட நிலை.

அதுமட்டுமல்ல, திருச்செந்தூரில் நகை சரிபார்ப்பு அதிகாரி சுப்பிரமணிய பிள்ளை படுகொலை செய்யப்பட்டதை, அதை விசாரிப்பதற்காக பால் கமிஷன் போடப்பட்ட நேரத்தில், அந்த அறிக்கை யாரைத் திருடர்கள் என்று சுட்டிக்காட்டியதோ, அவர்கள்மீது அன்றைக்கிருந்த அரசு நடவடிக்கையெடுக்காமல், அந்தக் கமிஷன் அறிக்கையை வெளியிட்டார் என்ற ஒரே காரணத்திற்காக, மாண்புமிகு கலைஞர் மீது 379—திருட்டு வழக்கு போடப்பட்டது. அதையும் சந்தித்துவிட்ட பிறகு, எத்தனையோ இழிமொழிகள், எத்தனையோ துன்பங்கள், இவைகளையெல்லாம் சந்தித்து விட்டுத்தான், ஏசுநாதர் சிலுவையைச் சுமந்ததைப் போல, துன்பங்களையெல்லாம் தாங்கிக்கொண்டு இன்றைக்கு மீண்டும் முதல்வராகக் கலைஞர் வந்திருக்கிறார்கள் என்றால் நான் தமிழக மக்கள் சார்பாக அவரை இந்த நேரத்தில் வாழ்த்தி வரவேற்கிறேன்.

அதுமட்டுமல்ல, அவருடைய வெற்றியின் இரகசியம் என்ன என்று பார்க்கின்றபொழுது, அவருடைய உள்ள உறுதியும், ஓயாத உழைப்பும், அவர் தலைமை தாங்குகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொண்டர்களுடைய கட்டுப்பாடான உழைப்பும் தான் இந்த மாபெரும் வெற்றியைத் தந்திருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்கின்றேன்.

1989 பிப்ரவரி 14] [திரு. அ. லெ. சுப்பிரமணியன்]

அதுமட்டுமல்ல, நம்முடைய கலைஞர் அவர்கள் மாண்புமிகு முதல்வராக அவர்கள் உள்ள நேரத்தில் ஆட்சியிலே இருந்தார்கள். அவர் ஆட்சிக் காலத்திலே போடப்பட்ட திட்டங்களைக்கூட அதற்குப்பின்னாலே வந்த—அது கவர்னர் ஆட்சியாக இருந்தாலும் அல்லது எம்.ஜி.ஆர். ஆட்சியாக இருந்தாலும் அந்தத் திட்டங்களெல்லாம் கைவிடப்பட்டிருக்கின்றன.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், 1976 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் தேதி, நெல்லை மாவட்டத்தில் களக்காடு பகுதியில் பச்சையாறு அணைக்கட்டு திட்டத்திற்கு அன்றைக்கு முதல்வராக இருந்த மாண்புமிகு கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். ஜனவரியில்—2 மாதங்கள் கழித்து ஆட்சி கலைக்கப்பட்டது. ஆனால், அதற்குப்பின் வந்த ஆளுநர் ஆட்சியானாலும், எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சியானாலும், இன்னும் அந்தத் திட்டத்தை நிறைவேற்றாமல் போட்டிருக்கிறார்கள்.

அன்றைக்கு இந்த ஆட்சியை வாழ்த்துகின்ற மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 1967 இல் அண்ணா அவர்களாலே ஆரம்பிக்கப்பட்டு, 76 வரை கலைஞர் ஆட்சி ஏற்பட்டு, அந்த ஆட்சி மீண்டும் தொடர்கிறது என்றார்கள். நான் மாண்புமிகு முதலமைச்சரவர்களை சபாநாயகர் அவர்களின் மூலமாகக் கேட்டுக்கொள்வதெல்லாம், நீங்கள் 76-லே பச்சையாற்றுக்குக் கல் போட்டு, அதோடு நிறுத்தியிருக்கிறீர்கள், ஆகவே, விட்ட இடத்தில் மீண்டும் அந்தத் திட்டத்தைத் தொடங்கித் தர வேண்டுமென்று நான் நெல்லை மாவட்ட மக்களின் சார்பாக இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு கருத்தை இங்கே சொன்னார்கள். மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களுடைய படத்தை இங்கே திறக்க வேண்டுமென்றார்கள். ஆனால் நான் அவர்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, அவருடைய ஆட்சிக் காலம் இருந்த நேரத்தில் கலைஞருடைய ஆட்சியிலே ஏற்படுத்திய கட்டிடங்கள் அவருடைய பெயராலே இருந்த நிறுவனங்களுக்கெல்லாம் அவருடைய பெயரை எடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டார்கள்.

[திரு. அ. லெ. சுப்பிரமணியன்] [1989 பிப்ரவரி 14

(முற்பகல் 11-50)

நெல்லை தொகுதியில் இராணி அண்ணா அவர்கள் பெயரால் ஒரு மகளிர் கல்லூரி நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்த போது உருவாக்கப்பட்டது. ஆனால் எம்.ஜி.ஆர்., ஆட்சி காலத்தில் அந்தப் பெயரை எடுத்திருக்கிறார்கள். தாங்கள் முதலமைச்சராக இருந்தபோது எந்த இடத்தில் விட்டீர்களோ அதைத் தொடருகின்ற வகையில் மீண்டும் அந்த கல்லூரிக்கு இராணி அண்ணா அவர்களுடைய பெயரை நீங்களே சூட்ட வேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இங்கே 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்று பேரறிஞர் அண்ணா சொன்ன அறிவுரையைக் கோடிட்டு காட்டியிருக்கிறார்கள். அதைப்போன்றே பேரறிஞர் அண்ணா அவர்கள் "சட்டம் ஒரு இருட்டறை; அதிலே வக்கீல் வாதம் ஒரு ஒளி விளக்கு அதை ஏழைகளால் பெற முடியவில்லை" என்று கூறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு ஏழை எளிய மக்கள் கிரிமினல் வழக்குகளிலும், உரிமையியல வழக்குகளிலும் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். நீதி பெறுவதிலே பல கஷ்டங்கள் இருக்கின்றன. இப்போது உயர் நீதிமன்றம் சென்னையில்தான் இருக்கிறது. ஒரு காலத்தில் சென்னை மாநிலமாக இருந்தபோது, ஆந்திரப் பகுதியும் இணைந்திருந்தபோது சென்னை மையப்பகுதியாக இருந்திருக்கலாம். ஆந்திரா பிரிந்த பின்னால், சென்னை ஒரு கோடியில் இருக்கிறது. கன்னியாகுமரியில் இருப்பவர்கள் கூட உயர்நீதிமன்றத்தில் வழக்கு நடத்த சென்னைக்கு வரவேண்டிய நிலைமை இருக்கிறது. இந்த கஷ்டத்தைப் போக்க, மதுரையிலே சென்னை உயர்நீதிமன்றத்தின் கிளை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்பது நீண்டநாள் கோரிக்கை. அந்தக் கோரிக்கையை ஏற்று, மத்திய அரசு ஆய்வு செய்வதற்காக ஓய்வுபெற்ற நீதிபதி ஜெஸ்வந்த்சிங் அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி போட்டார்கள். நான் கூட அந்தக் கமிட்டியிலே வாக்குமூலம் தந்திருக்கிறேன். அந்தக் கமிட்டி மதுரையிலே உயர்நீதி மன்றத்தின் கிளை ஒன்றை நிறுவ வேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறது. ஆகவே பூம்புகார் கண்ட கலைஞர் அவர்கள் கண்ணகி நீதியை நிலைநிறுத்திய மதுரையில் உயர்நீதிமன்றத்தின் கிளை ஒன்றை உருவாக்குவதற்கு முயற்சி செய்யவேண்டுமென்று தென் மாவட்ட மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

1989 பிப்ரவரி 14] [திரு. அ. லெ. சுப்பிரமணியன்]

அதைப்போல 'Palayamkottai is the Oxford of South India' என்று சொல்வார்கள். முதிர்ந்த கல்லூரிகள் உள்ள இடம் அது. அங்கே ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவ வேண்டு மென்பது நீண்ட நாள் கோரிக்கை. அதற்கு நிலங்கள் எல்லாம் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன. கல்விக் கண் திறந்த கலைஞர் அவர்கள், எஸ்.எஸ்.எல்.சி., வரை இலவசப் படிப்பு தந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், திருநெல்வேலியிலே ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று, இங்கே இந்த அறிக்கையிலே கூறும்போது சத்துணவு மையத்தில் வேலை செய்கின்றவர்களை பகுதிநேர நிரந்தரப் பணியாளர்களாக ஆக்குவோம் என்று குறிப்பிட்டிருக் கிறார்கள். இன்றைக்கு கோயில்களில் இருக்கின்ற அர்ச்சகர் களும் எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோயில்களில் இருக் கின்ற அர்ச்சகர்கள், ஊழியர்கள் எல்லோரையும் நிரந்தர பகுதி நேர ஊழியர்களாக ஆக்க உத்தரவிட வேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல் அறிக்கையில் டாக்டர் கலைஞர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால் தமிழ்நாட்டிலே தூய்மை யான நிர்வாகத்தைத் தருவோம் என்று குறிப்பிட்டிருக் கிறார்கள். இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். Public Servants (Prevention of Corruption) Act என்று ஒன்று இருக்கிறது. 5 ரூபாய் லஞ்சம் வாங்கினால் கூட அரசு ஊழியருக்கு ஓராண்டு காலம் தண்டனை என்று இருக் கிறது. அப்படி இருக்கும்போது தற்போது அரசியல்வாதிகள், அமைச்சர்கள் என்றால் அவர்கள் தவறு செய்பவர்கள் என்றும், ஊழல் பேர்வழிகள் என்றும் மக்கள் மத்தியிலே ஒரு எண்ணம் இருக்கிறது. முன்பு இருந்தவர்கள் யாராவது தவறு செய்த தாகத் தெரிந்தால், யார் யார் ஊழல் பேர்வழிகள் என்பதை அறிந்து, மக்கள் மத்தியிலே இருக்கிற எண்ணத்தைப் போக்க அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசு இப்போது பினாமி சொத்துக்களை கையகப் படுத்துவதற்காக ஒரு சட்டத்தை இயற்றியிருக்கிறது. தன்னுடைய வருவாய்க்கு மீறி எந்த அமைச்சராவது அல்லது அரசியல்வாதியாவது சொத்துக்கள் வைத்திருந்தால் அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி அச்சொத்துக்களை பறிமுதல் செய்து அவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்கும் இந்த அரசு வழி வகை காண வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, இந்த அவைக்கு ஒரு நல்ல ஆட்சியைத் தந்த, உறுதியான நிலையான ஆட்சியைத் தந்த தமிழ்நாட்டு மக்களுக்கு குறிப்பாக வாக்காளர் பெருமக்களுக்கு என் நன்றியைத் தெரிவித்து, இந்த ஆட்சி சிறக்கட்டும் என்ற வாழ்த்துதலைத் தெரிவித்து, முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. குமரி அனந்தன் : * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்தபடியாக மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்களைப் பேச அழைக்கிறேன். (குறுக்கீடுகள்) இதுகுறித்து முதல்வர் அவர்கள் விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். அப்பகுதிகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

*திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் தொகுதியிலே மூன்றாவது முறையாக என்னை வெற்றிபெறச் செய்து, இந்த மாமன்றத்திற்கு மீண்டும் என்னை அனுப்பி வைத்த அந்த பவானிசாகர் தொகுதி வாக்காளப் பெருங்குடி மக்களுக்கும், எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் மாண்புமிகு புரட்சித் தலைவி செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இங்கே பேசிய நண்பர்கள், குறிப்பாக அருமை நண்பர் திரு. மோகன் அவர்கள் இந்த ஆட்சி எப்படி ஏற்பட்டது என்பதையும், மரியாதைக்குரிய கலைஞர் எப்படி முதல்மைச்சராக வந்தார்கள்

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க நிறுத்தி வைக்கப்பெற்றது.

1989 பிப்ரவரி 14] [திரு. வி. கே. சின்னசாமி]

என்பதையும் இங்கே அடுக்கடுக்காகச் சொன்னார்கள். இந்த மாபெரும் வெற்றி எப்படி ஏற்பட்டது என்பதையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அதற்கு தேர்தல் அறிக்கைகளை யெல்லாம் புத்தகங்களாகப் போட்டு, மக்களிடத்திலே பதிய வைத்து இங்கே வெற்றி பெற்றிருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால், அருமை நண்பர் மோகன் அவர்களுக்கும், மற்ற நண்பர் களுக்கும் நான் தெரிவித்துக்கொள்வது, இங்கே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டது என்பது, எங்களுடைய தலைவர் தமிழகத்தின் காவல் தெய்வமாக இருந்த எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மறை வினால்தான் ஏற்பட்டதே தவிர வேறு அல்ல என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(நண்பகல் 12·00)

பத்தாண்டுக்காலம், 11 ஆண்டுக்காலம் வரையில் இந்த நாட்டி னுடைய முதலமைச்சராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட் டார்கள். அன்றைக்கு 1977-லேயும் நீங்கள் தேர்தல் அறிக்கை தந்தீர்கள். 1980-லேயும் தந்தீர்கள், 1984-லேயும் தேர்தல் அறிக்கை தந்தீர்கள். தொடர்ந்து தந்துகொண்டுதான் இருந் தீர்கள், தராமல் அல்ல. ஆனால் எங்கள் இதய தெய்வம் மறைந்த காரணத்தினால், எங்களுக்குள்ளே ஏற்பட்ட தற்காலிக பிளவின் காரணமாகத்தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந் துள்ளது என்பதை நான் சொல்லவில்லை. பொதுமக்கள் இன் றைக்கு தமிழகம் எங்கும் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை ஆணித்தரமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் . . .

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: தலைவர் அவர்களே, பிளவினாலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்தது என்று சொல்ல முடியாது. அதற்கு முன்னாலேயே உள்ளாட்சி தேர்த லிலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்திருக்கிறது என்ப தைச் சுட்டிக் காட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. வி. கே. சின்னசாமி: உள்ளாட்சி தேர்தலில் திராவிட முன் னேற்றக் கழகம் வந்தது என்பதை அருமை உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் இன்றையதினம் தெரிவித்துக்கொள்வது, இப்போதுகூட 3 ஆண்டுக் காலத்தில் உள் ளாட்சி தலைவர்களின் பதவிக்காலம் நிறைய இருக்கிறது.

[திரு. வி. கே. சின்னசாமி] [1989 பிப்ரவரி 14

அதோடு நிறுத்தி அதை மேலும் 5 ஆண்டுக்காலம் என்று நீட்டாமல், தேர்தலை நீங்கள் நடத்தினால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளாட்சி மன்றங்களைக் கைப்பற்றும் என்று நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக தயவுசெய்து மரியாதைக்குரிய முதல்வர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். உள்ளாட்சிமன்ற தேர்தல்களில் மக்கள் 3 ஆண்டுகள்தான் என்ற நிலையில் வாக்களித்திருக்கிறார்கள். ஆகவே, இதை மூன்றாண்டுகளோடு நிறுத்தி, அதோடு 18 வயது உள்ளவர்களுக்கும், வாக்காளர் பட்டியலிலே இடம் தந்து, அவர்களுக்கும் ஓட்டுரிமை கொடுக்கிற வகையிலே ஏற்பாடு செய்து, 5 ஆண்டுகள் என்று இல்லாமல் 3 ஆண்டுகளோடு அந்தத் தேர்தல்களை நடத்தினீர்களேயானால், அதை ஒரு சவாலாகக் கூட நாங்கள் ஏற்றுக்கொள்வோம் (குறுக்கீடு).

மூன்றாண்டுகளோடு அவர்களுடைய காலத்தை நிறுத்தி தேர்தலுக்கு தயாராக வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இலங்கைப் பிரச்சினை. இலங்கைப் பிரச்சினை பற்றி இங்கே தெளிவாகச் சொன்னார்கள். நான் பணிவோடு தெரிவித்துக் கொள்வது. மாண்புமிகு தமிழக முதல்வராக இருந்த டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதல்வராக இருந்த நேரத்தில்தான், இலங்கைப் பிரச்சினையில் சுமுகமான முடிவு ஏற்பட வேண்டுமென்றும், தமிழனுக்கு அங்கே உரிமைகள் கொடுக்கப்பட வேண்டும் என்று தான் ஒரு முதலமைச்சர் 100 நாட்கள் கருப்புச் சட்டை போட்டு, அவரோடு மட்டுமல்ல, அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அந்த இயக்கத்தைச் சார்ந்த அத்தனை பேர்களும் கருப்புச் சட்டை அணிந்து, மத்திய அரசுக்கு தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தார்கள் என்றும், நியாயத்தை சொன்னார்கள் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு மட்டுமல்ல, அமெரிக்காவிற்கு சென்று தப்பிப் பிழைத்து வந்தார்கள். உயிரே இல்லை ஐஸ் பெட்டியில் வைத்திருக்கிறார்கள் என்று கூட நீங்கள் அன்றைக்கு பிரச்சாரம் செய்தீர்கள். அந்த அளவுக்கு தப்பித்து வந்த முதல்வர் அவர்கள் உடல் நலக் குறைவு இருந்தபோதும், டாக்டர்கள் எல்லாம் நீங்கள் உண்ணாவிரதம் இருக்கக் கூடாது என்று சொன்னபோதும், மாண்புமிகு மரியாதைக்குரிய பாரதப்

1989 பிப்ரவரி 14] *[திரு பி. கே. சின்னசாமி:*

பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள்கூட, இலங்கைப் பிரச்னைக்காக நீங்கள் உண்ணாவிரதம் இருக்க வேண்டாம் என்று சொல்லியும், அதையெல்லாம் பொருட்படுத்தாமல், தன் உயிரைப்பற்றிக் கவலைப்படாமல் இலங்கையிலே இருக்கிற தமிழ் பெருமக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும், தமிழன் அங்கே முதல்வராக வர வேண்டும் என்ற அடிப்படையிலே கடற்கரையிலே தன்னுடைய இயக்கத்தோடு அவரும் உண்ணாவிரதம் இருந்து, அந்த உரிமைக்காகப் போராடியவர்கள் என்பதையும், அதைப் பெற்றுத் தந்தவர் என்ற பெருமை எம்.ஜி.ஆர். அவர்களுக்கே உண்டு என்பதையும் நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மரியாதைக்குரிய மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களே தமிழகம் வந்து, சென்னை வந்து பேசும்போது, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இந்த நாட்டினுடைய முதலமைச்சருடைய பெருந்தன்மையின் காரணமாகத்தான், அவருடைய ஒத்துழைப்பின் காரணமாகத்தான் அன்று இலங்கையிலே ஒப்பந்தம் உருவானது என்பதை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அது பத்திரிகையிலேயும் வந்திருக்கிறது, வானொலியிலும் ஒலிபரப்பாகியிருக்கிறது. அதை எல்லோரும் கேட்டிருக்கிறோம். ஆக இலங்கையிலே ஒப்பந்தம் ஏற்படவும், அங்கே தமிழன் முதலமைச்சராக வருவதற்கும் வழி வகை செய்தவர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். என்பதை நான் இங்கே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். சத்துணவு மையங்களைப்பற்றி இந்த அறிக்கையில் சொல்லியிருக்கிறீர்கள். சத்துணவுத் திட்டத்தை சத்துள்ள திட்டமாக மாற்றுவோம் என்று சொல்லியிருக்கிறீர்கள் இங்கே இருக்கிற மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். சத்துணவுத் திட்டத்தை அன்றைய முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் அறிமுகப்படுத்திய நேரத்தில் * * இருந்தாலும் இன்றைக்கு இந்தத் திட்டம் மக்களுக்கு ஏற்ற திட்டம். ஏழை எளிய குழந்தைகளுக்கு ஏற்ற திட்டம் . . .

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, தயவுசெய்து உறுப்பினர் அவர்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சொல்லாத ஒன்றை இங்கே அவைக் குறிப்பில் ஏற்றுவது முறை யல்ல. என்றைக்கும் எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல தெரி வித்தது இல்லை.

திரு. வி. கே. சின்னசாமி: தலைவர் அவர்களே, * * .. திட்டத்தை எதிர்த்தார்கள் என்று நான் தெரிவித்துக்கொள் கிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மறுக்க மறுக்க வேறு மாறிப் பேசுவது முறையல்ல. அது மரபும் ஆகாது. இதே அவையில் முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் அந்தத் திட்டத்தை அறிவித்தபோது அதை நான் வர வேற்றுப் பேசியிருக்கிறேன். அதிலே ஊழல் நடந்துவிடாமல் இருக்க இன்னின்ன பாதுகாப்பு முறைகள் கையாளப்படலாம் என் றெல்லாம் நான் யோசனை கூறியிருக்கிறேன். இதே அவையில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து அதை நான் வரவேற்றுப் பேசி யிருக்கிறேன். அதிலே சில திருத்தங்களைச் சொல்லியிருக்கிறேனே யல்லாமல், அது சரியாக நடைபெறுவதற்கு வழிமுறைகளைச் சொல்லியிருக்கிறேனேயல்லாமல் திட்டம் தவறு என்று நான் சொன்னது கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் அவர்களுடைய அந்த ஒரு வரி மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

* திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆதரித்ததாகச் சொல்கிறார்கள். அதை நாங்கள் பாராட்டுகிறோம். ஆனால் மாண்புமிகு முதலமைச்சரிலிருந்து அந்தக் கட்சியில் இருக்கிற முன்னணித் தலைவர்கள் அத்தனைபேரும் மேடைகளில் பேசிய நேரங்களில் தமிழகத்தில் இருக்கிற குழந்தைகளையெல்லாம் கையில் தட்டேந்த வைத்து விட்டார்கள் என்று சொல்லி கேவல மாகப் பேசியதை நான் இந்த நேரத்தில் நினைவூட்டுகிறேன்.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1989 பிப்ரவரி 14]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, வெளியே யாராவது மேடையில் பேசியதையெல்லாம் இந்த அவையில் விவாதிப்பதற்கு இடமிருக்குமானால் நிறைய விவாதிக்கலாம். அதற்கு இந்த அவையும், அவைத் தலைவரும் இடம் தருகிறார்களா என்பது எனக்குத் தெரியாது.

..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெளியில் பேசப்படுகிற என்னற்ற பேச்சுக்கள் எல்லாம் இந்தப் பேரவைக்கு வருமானால் அது பேரவைக்குப் பெருமையுடையதும் ஆகாது, பொருத்தமுடையதும் ஆகாது. எனவே, வெளியே பேசப்படுகிற பேச்சுக்கள் இந்த அவையில் எடுத்துக்காட்டுகளாக ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

திரு. வி. கே. சின்னசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆதரிந்ததாகச் சொன்னதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தில் முழுநேர ஊழியர்களாக இல்லாமல் பகுதி நேர ஊழியர்களாக இருப்பவர்களை நிரந்தர ஊழியர்களாக ஆக்குவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களை முழுநேர ஊழியர்களாகவும் ஆக்க வேண்டுமென்பதை இங்கே பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து நான் ஒன்றைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கையை நாம் அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளோம். நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் நான் வெற்றி பெற்றிருக்கிறேன். நான் வெற்றி பெற்ற பிறகு புஞ்சைப் புளியம்பட்டியில் இருக்கிற பேரறிஞர் அண்ணாவின் சிலைக்கு நாங்கள் மாலை அணிவிக்கச் சென்றோம். மாலை அணிவிப்பது என்பது ஒவ்வொரு தேர்தலின் போதும் தொடர்ந்து நடைபெறுகிற முறையாகும். வேட்பாளர் நாமினேஷன் செய்வதற்குச் செல்கிற நேரத்தில் ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்தவர்களும் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்த பின்புதான் நாமினேஷன் கொடுக்கிறோம். அது முறையாக இருந்து வந்தது. வெற்றி பெற்று வந்த நான் 23-ம் தேதி காலை

11-00 மணிக்கு அங்கு சென்றபோது * *
ரோட்டிலே ஆட்களை வைத்துக்கொண்டு, புஞ்சை புளியம்பட்டி சந்தையில் கடைகள் கட்டுவதற்காகப் போட்டு வைக்கப்பட்டிருந்த தடிகளையெல்லாம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையில் இல்லாத ஒருவரைப்பற்றி ஆதாரமின்றி அவையில் பேசக்கூடாது என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இது நடந்த உண்மை. எனக்கு ஏற்பட்ட நிகழ்ச்சி. இதை நான் சொல்ல வேண்டும். வேண்டுமென்றால் பெயரைக் குறிப்பிடாமல் பேசத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கருத்தை மறுப்பதற்கு ஒருவருக்கு வாய்ப்பு இல்லாதபோது அவர் மீது தாக்குதலைத் தொடுக்கக் கூடாது என்பதை நினைவுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி: தலைவர் அவர்களே, அண்ணா சிலைக்கு மாலை அணிவிக்க விடாமல் என்னைத் தடுத்தார்கள். அந்தச் சந்தையில் கடை கட்டுவதற்கு வைத்திருந்த தடிகளை எடுத்துக்கொண்டு வந்து அண்ணா சிலைக்குப் பக்கத்தில் வைத்துககொண்டு தடுத்தார்கள். காவல் துறை அதிகாரிகள் தேர்தல் வேலைக்காக சென்றிருந்த காரணத்தால் அவர்கள் குறைவாக இருந்தார்கள். அவர்களும் போய் அவர்களிடத்தில் சொன்னார்கள்.

[பிற்பகல் 12-10]

என்னிடத்திலேயும் வந்து சொன்னார்கள். என்னை, வெற்றி பெற்றவன் என்ற முறையிலே மாலை அணிவித்தே தீரவேண்டும் என்று என்னுடைய கட்சித் தோழர்கள் வற்புறுத்தினார்கள். இருந்தாலும் காவல்துறை அதிகாரிகள் என்னிடத்திலே சொன்னார்கள். நாங்கள் குறைவான எண்ணிக்கையில் இருக்கிறோம், ஏதாவது தகராறு ஏற்பட்டால் நாங்கள் பாதுகாப்பு தரமுடியாது

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1989 பிப்ரவரி 14] [திரு. வி. கே. சின்னசாமி]

என்று சொன்னார்கள். அங்கேயிருந்த கடைகள் எல்லாம் அடைக்கப்பட்டுவிட்டன. புஞ்சைப்புளியம்பட்டியிலேயிருந்து உள்ளேயும், வெளியேயும் பஸ் போக்குவரத்து நடைபெறவில்லை. வெளியே இருப்பவர்கள் உள்ளே வந்து சேரமுடியாத நிலைமையை ஏற்படுத்தினார்கள். அதற்குப் பின்பு வெற்றி பெற்ற நாங்கள், அந்த நேரத்திலே அமைதி ஏற்படவேண்டும், குறிப்பாக அந்தப் பகுதி மக்களுக்கு அமைதியான சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்ற காரணத்தினால், நாங்கள் திரும்பி வந்தோம். தகராறு நேர்ந்தால், அடிபடுவது, சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற நானாக இருக்காது. அல்லது வேறு ஒருவராக இருக்காது, அடிபடுகிறவர்கள், இரண்டு அணிகளைச் சேர்ந்த தொண்டர்கள் என்று சொல்லி, அண்ணா சிலைக்கு மாலை அணிவிக்காமலேயே திரும்பி வந்துவிட்டோம். திரும்பிச் சென்ற 4, 5 நாட்களுக்குப் பின்புதான், மீண்டும் சென்று அண்ணா சிலைக்கு மாலை அணிவிக்கின்ற நிலைமையை உருவாக்கித் தந்தார்கள் என்பதை நான் பணிவன்போடு தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். இதிலே உண்மையைக் கண்டறியவேண்டும் என்று சொன்னால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் நினைத்தால், ஒரு மணி நேரத்தில், அல்லது 10 நிமிடங்களில் அந்த உண்மை யைச் சேகரிக்க முடியும், என்பது எனக்குத் தெரியும்.

அதுமட்டுமல்ல, அவரே இறங்கிச் சென்று, எங்களுடைய தேர்தல் அலுவலகத்திற்குச் சென்று அங்கேயிருந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., அவர்களுடைய கட் அவுட்டையும், மாண்புமிகு புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்களுடைய கட் அவுட்டையும் * * எல்லாம் அங்கேயே இருக்கிறது. இவ்வளவு நிகழ்ந்தும், அதற்குப் பின்பு அங்கேயிருந்த ஒரு அரிசனத் தோழர். . .

திரு. பெ. சு. திருவேங்கடம்: அவர்கள் சொல்வது போல் நடந்ததா என்று தெரியவில்லை. பழைய முதல்வர் அவர்கள் கட் அவுட்டை ஏதேதோ பண்ணினார்கள் என்று சொல் கிறார்கள். இங்கே ரெக்கார்டாகிக் கொண்டிருக்கிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நாளைக்கு பத்திரிகையிலே வரும். இது நடந்ததா ? என்பதற்கு என்ன ஆதாரம். எனவே அதை சபைக் குறிப்பிலேயிருந்து நீக்கவேண்டும், என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசுகிற மாண்புமிகு உறுப்பினர் ஒரு பொறுப்பு வாய்ந்த சட்டமன்ற உறுப்பினர். தன் தொகுதியில் தன் முன்னாலே நடைபெற்ற சம்பவத்தை அவர் விளக்கிச் சொல்கிறார். அந்தப் பெயர் இருக்கக்கூடாது, அல்லது இருக்க வேண்டும் என்று கேட்பதிலே நியாயம் உண்டு. பெயர் வேண்டிய தில்லை. மற்ற சம்பவங்களைக் கூட அவர்கள் விவரமாக சொல்லக்கூடாது என்று சொல்வது நியாயம் அல்ல. அவற்றை நீக்குவதும் நியாயமல்ல. பெயரை வேண்டுமானால் நீக்கி விடுங்கள், மற்ற சம்பவங்கள் சபைக்குறிப்பில் இருக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சம்பவங்களை நீக்க வேண்டும் என்று இல்லை. அந்தச் சம்பவத்திலே ** என்ற தொடர் மட்டும் நீக்கப்படுகிறது, அது பாராளுமன்ற முறைக்கு புறம்பானது என்ற காரணத்தால் (குறுக்கீடு). ஏற்கெனவே ஒரு உறுப்பினருடைய பெயர் என்ற முறையில் அதுவும் நீக்கப் படுகிறது என்பதை முன்கூட்டியே நான் தெரிவித்து இருக் கிறேன். ஏன் என்று கேட்டால், பொதுவான பேச்சுக்களைப் பேசுவதற்கு இந்த அவை முழுமையான அனுமதியை அளிக் கிறது. ஒருவருடைய பெயரைச் சுட்டியோ, அல்லது பாராளு மன்ற முறைக்குப் புறம்பான சொற்களைக் கையாண்டோ பேச வேண்டாம் என்று மட்டும் உறுப்பினர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நடந்த உண்மை. என்னுடைய இயக்கத்தை விட்டுவிடுங்கள். உங்களுடைய இயக்கத்தைச் சேர்ந்த, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இயக்கத்தைச் சேர்ந்த வர்கள் இளைஞர் அணி என்று வைத்திருந்தார்கள். உங்களுடைய படம் எல்லாம் வரையப்பட்டு, கட்சி அலுவலகம் செயல்பட்டது. நான் இதைச் சொல்வதற்கு, தயவுசெய்து உங்களைப் பற்றிச்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1989 பிப்ரவரி 14] [திரு வி. கே சின்னசாமி:

சொல்வதற்கு காரணம் இருக்கிறது. நான் இவைகளைச் சொல்லக்கூடாது என்று இருந்தாலும், சொல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டதற்காகச் சொல்கிறேன். ஒரு வாரத்திற்கு முன்பு ஊழியர்கள் கூட்டம் நடைபெற்றது. திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி நண்பர்கள் வைத்திருந்த, உங்களுடைய கட்சி அலுவலகம் செயல்பட்ட போர்டையே, அவருடைய ஆட்கள்—இன்னொரு ஒன்றியச் செயலாளர் இருக்கிறார், அவருடைய பெயரைச் சொல்லக்கூடாது, அவரும் சேர்ந்து, அவருடைய ஆட்களை வைத்து தி.மு.க., நிலையத்திலே வைத்திருந்த உங்களுடைய போர்டையே பிய்த்து எடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கு அவையிலே வந்து பதில் சொல்வதற்கான வாய்ப்பு கிடையாது. அவருக்கு ஏதாவது அப்படிப்பட்ட குறைபாடுகள் இருந்தால், சம்பந்தப்பட்டவர்கள் நேரிடையாக வந்து முறையிடலாமே தவிர, அவையிலே வந்து பதில் சொல்வதற்கு வாய்ப்பு இல்லாத ஒரு உறுப்பினரைப் பற்றி இங்கே குறை சொல்வது சரிதானா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உங்களுடைய, உங்களுடைய என்று குறிப்பிடுகிறார். சபாநாயகர் அவர்கள் கட்சி சார்பற்றவர்கள் என்று தாங்கள் குறிப்பிட்டு இருக்கிறீர்கள். ஆகவே திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கனவே உள்ள அவைக் குறிப்புகளில், உங்களுடைய என்றோ, நீங்கள் என்றோ சொல்லக் கூடாது என்று முந்தைய பேரவைத் தலைவரவர்கள் தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். எனவே ஆளும் கட்சி என்றோ, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்றோதான் குறிப்பிட வேண்டும் என்று 1967 ஆம் ஆண்டு தீர்ப்பை நான் மேற்கோள் காட்டுகிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி நண்பர்கள் வைத்திருந்த, கட்சி அலுவலகத்திலேயிருந்த போர்டை திராவிட

முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நண்பர்களே அகற்றி. தகராறு செய்து எடுத்துச் சென்று இருக்கிறார்கள். தயவு செய்து நான் சொல்வது உண்மை. மாண்புமிகு முதல்வர் அவர்களே, நீங்களே இதைப்பற்றி விசாரியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அருள்கூர்ந்து இதை முறைப்படி காவல்துறைக்குச் சொல்லி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அப்போது தான் இந்த அவைக்கும் அது பொருத்தமாக இருக்கும். அதற்குப் பிறகு என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது என்று ஆளும் கட்சியினர் எடுத்துச் சொல்வார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பவானிசாகர் தொகுதி உறுப்பினர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குள்ளே இருக்க வேண்டிய கட்டுப்பாட்டை வலியுறுத்துகிறார்கள். அவருடைய அக்கறைக்காக நான் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். (சிரிப்பு)

திரு. பெ. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் மறைந்த அன்று சோகமான சூழ்நிலையில் ரொம்ப வெறியோடு வேகமாக வண்டு ரோடில் எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய சிலையை உடைத்த அந்தச் சமயத்தை கொஞ்சம் உள்ளத்தின் ஓரத்திலே நிறுத்தி வைத்து இந்த சம்பவத்தை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் இப்போது உங்களை ஆட்சியில் அமர்த்தியிருக் கிறார்கள். * * என்பதை நான் இங்கே பணிவன்போடு தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

*மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிலை வைப்பது என்பது அல்ல. எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஈரோட்டிலிருந்து

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

VAIMAYE VELLUM — TRUTH ALONE TRIUMPHS

1989 பிப்ரவரி 14] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

வந்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் மறைந்து விட்டார் என்ற செய்தியை பிளாட் பார்மில் எடுத்துச் சொல்கிறார்கள். வேதனையோடு நேராக வீட்டுக்குக் கூட போகாமல் தந்தை பெரியார் அவர்களுடைய நினைவு நாள் என்பதால் மலர் மாலையைச் செலுத்துவிட்டு, மறைந்து விட்ட எம்.ஜி.ஆருடைய இல்லத்திற்குச் சென்று முதல் மரியாதையைச் செலுத்தி விட்டு திரும்புகிறார்கள். 10 மணிக் கெல்லாம், திட்டமிட்டு, நேரத்தை எதிர்பார்த்து எங்களுடைய தலைவர் கலைஞருடைய சிலையை எப்படியெல்லாம் உடைத் தார்கள் என்பதை எண்ணிப் பார்க்கின்றவர்களாக இருந்தாலும் அப்படிப்பட்ட சம்பவத்தை நிச்சயமாக சகித்துக்கொள்ள மாட்டார்கள். அப்படிப்பட்ட கொடுமைகள், அப்படிப்பட்ட சம்பவங்கள்தான் எங்களுடைய தலைவர் கலைஞரை மீண்டும் ஆட்சியில் உட்கார வைத்திருக்கிறது என்பதையும் இந்த நேரத் திலே நினைவுப்படுத்த விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அருள்கூர்ந்து முன் வரிசை யில் இருப்பவர்கள் பேசுவதற்கு தான் இதிலே அதிக வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை ஏற்கனவே இந்த அவை ஒப்புக்கொண் டிருக்கிறது. எனவே இந்தப் பிரச்சினையை இதோடு நிறுத்தி வைத்து திரு. சின்னசாமி அவர்கள் தொடர்ந்து உரையாற்றும் படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சராக இருந்த மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இறந்த நேரம். அப்போது தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனை மக்களும் வந்து கொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு கலைஞர் அவர்களே அவருடைய மறைவுச் செய்தியை கேட்டு அனுதாபத்தோடு வந்தார்கள் என்று இங்கே சொல்லி யிருக்கிறார்கள். அப்போது தமிழகத்தில் உள்ள எந்தக் கட்சி யைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அத்தனைக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் சென்னையை நோக்கி வந்து இருக்கிறார்கள். அப்போது இந்தச் சிலையை யார் உடைத்தார்கள் என்பது நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஒரு. . .

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதில் தலையிட வேண்டாம் என்று எண்ணினேன். ஆனால் உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து

அதையே பேசிக்கொண்டிருக்கிற காரணத்தால் தலையிட வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. சிலை உடைக்கப்பட்ட போது அது குறித்து நான் அப்போதே பத்திரிக்கையில் ஒரு அறிக்கையை விடுத்தேன். அதுவெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும். அதைப்பற்றி கவலைப்பட வில்லை. ஒன்றை இப்போது ஞாபகப்படுத்த விரும்புகிறேன். சில பேரை போலீசார் பிடித்தார்கள். கைது செய்தார்கள். பிறகு அவர்கள் ஜாமீனில் விடப்பட வேண்டுமென்று அவர்களுக்காக வாதாடிய வக்கீல்கள் நீதிமன்றத்தில் சொன்னபோது அப்போதிருந்த ஒரு 28 நாள் 30 நாள் ஆட்சியாளர்கள் சார்பில் வாதாடிய வழக்கறிஞர்கள் இவர்களை ஜாமீனில் விடுவதில் அரசுக்கு ஆட்சேபனை இல்லை என்று நீதிமன்றத்திலே தெரிவித்ததாக எனக்கு தகவல் வந்தது. சிலை உடைத்ததை விட எனக்கு அது தான் வேதனையாக இருந்தது.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 22 நாள் ஆட்சியில் எங்களுடைய நிலை என்ன வென்பது உங்களுக்குத் தெரியும். (மணியடிக்கப்பெற்றது) நான் இதை இதோடு விட்டுவிடுகிறேன். அக முதலமைச்சராக வந்திருக்கின்ற நீங்கள், இந்த நாட்டு மக்களுடைய ஆதரவைப் பெற்று வந்திருக்கிற நீங்கள் * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த வரியை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும் படி உத்தரவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அருள்கூர்ந்து ஆழமான செய்திகளுக்குப் போகவேண்டும் என்று நான் எடுத்த எடுப்பிலேயே சொல்லியிருக்கிறேன். திரும்பத் திரும்ப அதையே சொல்லுவது என்பது அவையைக் கொச்சைப்படுத்துவது போல் ஆகிவிடும் என்று நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலவையை மீண்டும் கொண்டு வரவேண்டும் என்று இங்கே நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் இங்கே இருக்கின்ற குறிப்பிலே கஜானா காலியாகி விட்டது. ஒரு பைசா

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1989 பிப்ரவரி 14] [திரு. வி. கே. சின்னசாமி]

கூட வீணாக செலவு செய்யக்கூடாது என்று சொல்லியிருக்கின்ற நீங்கள் மீண்டும் இந்த மேலவையைக் கொண்டு வருவதாலே எவ்வளவு செலவு ஏற்படும் என்பதை எண்ணிப் பார்த்து அதை வராமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று நான் இங்கே பணிவன்போடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு பெண்களுக்கு 30 விழுக்காடு வேலை அரசு நிறுவனங்களிலே தரப்படும் என்று சொல்லி ஆரம்பப் பள்ளிகளிலே 2 வகுப்புகளிலே அவர்களை நியமிக்கவேண்டும் என்ற கருத்தை இங்கே நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு முன் உதாரணத்தைச் செய்தவர் முன்னாள் முதலமைச்சர் டாக்டர்

(பிற்பகல் 12.20)

எம்.ஜி.ஆர். அவர்கள் என்பதை நான் தெரிவிக்கக்கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், தமிழகத்திலே உயர் நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்கி, அங்கே ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைக் கொண்டு வந்து, அந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலே பெண்களுக்குத்தான் இடம் என்று உத்தரவைப் போட்டு, அன்றைக்கு தமிழகத்திலே ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான பெண்கள் ஆசிரியர் பயிற்சி பெறுகின்ற வழியைச் செய்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் என்பதை நான் இங்கே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

6. அறிவிப்பு.

பேரவை அலுவல் நேரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. உறுப்பினர்கள் பலரின் வேண்டுகோளுக்கிணங்க எதிர்க்கட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசித்து பின், பேரவை நிகழ்ச்சிகள் இன்றிலிருந்து காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அருள்கூர்ந்து உட்கார வேண்டுகிறேன்.

3. ஆளுநர் பேருரைக்கு நன்றிகூறும் தீர்மானத்தின் மீது விவாதம் —தொடர்ச்சி

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி பற்றி கொஞ்சம் பேசவேண்டும். நான்

[திரு. வி. கே. சின்னசாமி] [1989 பிப்ரவரி 14

பணிவோடு தெரிவித்துக் கொள்வது கீழ்பவானி ஆயக்கட்டைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 20,000 ஏக்கருக்கு மேல் சேர்க்கப்படவேண்டுமென்று ஒரு கோரிக்கை முன்னாலே இருந்திருக்கிறது. 2,20,000 ஏக்கரிலே இப்போது 20,000 ஏக்கர் ஆயக்கட்டிலே விடுபட்டுப் போய் இருக்கின்ற காரணத்தாலே அது சேர்க்கப்பட வேண்டுமென்று எண்ணி, அன்றைய பொதுப் பணித்துறை அமைச்சரவர்கள் கோப்புகள் தயார் செய்திருக்கிறார்கள். அதில் என்னுடைய தொகுதியைச் சார்ந்த களத்தூர், காளப்பாடி போன்றவைகள் சேர்க்கப்பட்டு, உத்தரவு கூட போடப்பட்டு, என்.ஓ.சி. கலெக்டருக்குக் கூட அனுப்பியிருக்கிறார்கள். அரசு போன காரணத்தினால் நிறுத்தப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்காக கவனம் செலுத்துகிற முதல்வர் அவர்கள் . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்வது, இந்த ஆயக்கட்டுகளை காலா காலத்தில் திறந்திருந்தால், தண்ணீர் முன்கூட்டியே வந்திருக்கும்.

* **திரு. டி. கே. பழனிச்சாமி:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கவர்னர் உரையின் மீது ஆதரித்துப் பேசுவதற்கு முன்பு, சாமான்யமான என்னை சென்னை நகரத்தை ஒட்டியுள்ள திருவொற்றியூர் நகராட்சி மன்றத்திற்குத் தலைவராக, இன்று சட்டமன்ற உறுப்பினராக ஆக்கிய எனது ஒப்பற்ற தலைவர், தானைத் தலைவர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய வெற்றி வணக்கத்தைச் சொல்லி திருவொற்றியூர் மக்களுக்கும் என் நன்றியைச் சொல்லி, நான் என்னுடைய சிறிய உரையை துவக்க இருக்கிறேன். அதே போன்று திருவொற்றியூர் வாக்காளர்களுக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை இந்தச் சபையின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

11 ஆண்டுக் காலமாக இருண்ட ஆட்சியில் இருந்த தமிழகம் இன்றைக்கு ஒரு புதிய ஆட்சியை, ஒளிமிக்க ஆட்சியைத் துவக்கி, கவர்னர் அவர்கள் நல்ல திட்டங்களை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக நகராட்சி மன்றத்தினுடைய ஆயுளை அதிகமாக்கி, நகராட்சி மன்றத்தின் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், உறுப்பினர்கள், நகரத்திலே

1989 பிப்ரவரி 14] [திரு. டி. கே. பழனிச்சாமி]

வாழ்கின்ற மக்களுக்கு பொதுச் சுகாதாரம், சாலை வசதிகள், குடிதண்ணீர் திட்டங்கள் ஆகியவற்றை உருவாக்குவதற்கு மிகப் பெரிய அளவிலே சிறப்பாக இரண்டு ஆண்டுக் காலம் நீடித்திருக்கிறது. ஐந்தாண்டுகள் என்று நகராட்சி இருந்த காலத்தை ஏற்கனவே ஆண்ட அரசு கொடுத்த அதிகாரத்தைப் பறித்துக் கொண்டது எதற்காக என்று சொன்னால், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நாட்டு மக்களிடத்திலே புகழ் வந்து விடும் என்ற காரணத்தினால் அதிகாரத்தை பறித்துக் மக்களுக்கு நல்ல காரியங்கள் செய்வதிலே இந்த அரசு உறுதியாக இருக்கிறது. அதுமட்டுமல்ல, இன்றைக்கு எனக்கு முன் பேசிய உறுப்பினர்கள் எல்லாம் நகராட்சித் தேர்தலிலே நீங்கள் வெற்றி பெற்றுவிட்டீர்கள் என்றும் சொன்னார்கள். அதே நேரத்திலே 18 வயதாக்கி மாநகராட்சித் தேர்தலை நடத்தலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். நான் அவர்களை உங்கள் மூலமாக கேட்க விரும்புவது, நகராட்சி மன்றத் தேர்தலே 18 வயது வாக்காளர்களை வைத்து நடத்தப்பட்ட தேர்தல் என்பதை அவர்கள் மறந்து விட்டார்கள். ஆகையினால் தேர்தலைக் கண்டு பயப்படக்கூடியவர்கள் அண்ணா தி.மு.க. வைச் சேர்ந்தவர்களே தவிர தி.மு.க. இல்லை என்பதை இந்தச் சபையிலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தைரியம் இருந்திருந்தால், இந்த கோவை, மதுரை, சென்னை நகரங்களுக்கு தேர்தலை நடத்துங்கள் என்ற சவாலை ஏற்றுக்கொண்டு நீங்கள் அதை ஆதரித்து இருக்க வேண்டும் இந்தச் சபையிலே, அதை விட்டு விட்டு உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெற்ற எங்களின் அதிகாரத்தைப் பிடுங்கிக்கொண்டு பொம்மைகளாக வைத்திருந்தீர்கள் ஆனால் நாங்கள் புத்துயிர் பெற்றிருக்கிறோம். . . .(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசுகின்றவர் புதிய உறுப்பினர். எனவே அவருடைய கன்னிப் பேச்சில் குறுக்கிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. டி. கே. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, ஆகையினால் நான் கேட்டுக்கொள்வதெல்லாம் உடனடியாக சென்னை, மதுரை, கோவை மாநகராட்சிகளுடைய தேர்தலை நடத்தி அந்தச் சவாலை ஏற்றுக்கொள்வதற்கு நாங்கள் தயார் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, மேலவைத் தேர்தலிலே அவர்களுக்குள்ளே இரண்டு கருத்துக்கள்

[திரு. டி. கே. பழனிச்சாமி] [1989 பிப்ரவரி 14

இருக்கின்றன. ஒருவர் மேலவை வேண்டும் என்று பேசினார். இன்னொருவர் மேலவை வேண்டாம் என்று பேசினார். அவர்களுக்குள்ளே எந்தக் காலத்திலுமே ஒற்றுமையில்லை என்பது நாட்டு மக்களுக்கே நன்றாகத் தெரியும். அவர்கள் பேசுகின்ற போது தெளிவாக ஒரு முடிவு எடுத்து சொல்ல வேண்டும். அதை விட்டுவிட்டு வேண்டுமென்று ஒருவர், வேண்டாமென்று சொல்பவர் இன்னொருவர். ஆகவே, கொள்கை ரீதியாக எங்கள் தலைவர் அறிவாளிகளுக்கு இடம் கொடுக்கவிருக்கிறார்கள். **

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே அந்தப் பெயர்கள் குறிப்பிடப்பட்டு அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படவேண்டும் என்று கேட்கப்பட்டு தலைவர் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மீண்டும் அந்தப் பெயர்களைச் சொல்லாமல், சொன்ன பெயர்களை சபைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த மன்றத்திலே பதிலளிக்க வாய்ப்பு இல்லாதவர்களைப் பற்றியெல்லாம் பேசாமல் பிரச்சினையைப் பற்றி பேசி முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: **

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கருத்தைச் சொல்வதற்காக சொற்களைச் சொல்கின்றபோது வேறுவிதமான பொருள் ஏற்பட இடம் இருக்கின்ற காரணத்தால், அந்தப் பெயர்களை நீக்கிவிட வேண்டும். அது சம்பந்தமான கருத்துக்களை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தொடர்பான கருத்துக்கள் யாவும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அடுத்து பேசுகின்ற எந்த உறுப்பினரும், அருள்கூர்ந்து பெயர்களைச் சுட்டிப் பேசக் கூடாது. அப்படிப் பேசினால், அந்தக் குறிப்புகள் அனைத்துமே அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1989 பிப்ரவரி 14]

திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்னது போல, வெளியே இருப்பவர்களுடைய பெயர் மட்டும் அல்ல, இந்த மன்றத்தில் இருந்தாலும் கூட—மன்றத்தில் இருப்பவர்களைச் சுட்டிக் காட்டி சொல்லப்பட்ட அனைத்து வாசகங்களையும் சபைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மன்றத்தில் இருக்கின்ற உறுப்பினர்களை நேரடியாகக் குற்றம் சாட்டினால், அது நீக்கப் படும் என்பது ஏற்கனவே உள்ள நடைமுறைதான். அதில் ஒன்றும் கருத்து வேறுபாடு இல்லை. கண்டிப்பாக மன்றத்தில் இருக்கின்ற உறுப்பினர்கள் பெயரை நேரடியாகச் சுட்டிச் சொல்லுகின்ற செய்திகளும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப் படும்.

திரு. டி. கே. பழனிச்சாமி: தலைவர் அவர்களே, இந்த மாநகராட்சித் தேர்தலை நடத்துவதன் மூலம் குறைகள் களையப்படும். திருவொற்றியூர் தொகுதியில் ஒன்றாவது டிவிஷன் அடங்கியிருக்கிறது. நிறைய குறைகள் உள்ளன. பிரதி நிதிகள் இல்லாத காரணத்தாலே மாநகராட்சிப் பணிகளிலே அதிகாரிகளை வைத்து பல வேலைகளைச் செய்ய முடியவில்லை. ஆகவே, மாநகராட்சித் தேர்தலை நடத்த முன் வந்த இந்த அரசை இதயப் பூர்வமாக பாராட்ட நான் கடமைப்பட்டிருக் கிறேன்.

அடுத்து வன்முறைச் சம்பவங்கள் தேர்தலுக்குப் பிறகு நடந்ததாக இங்கே குறிப்பிட்டார்கள். திருவொற்றியூர் தொகுதி யிலே தேர்தல் முடிந்த இரண்டு நாட்கள் கழித்து மிகப் பெரிய அளவிலே சாத்துமாநகர் என்ற பகுதியில் அண்ணா தி.மு.க.-வைச் சேர்ந்தவர்கள், தி.மு.க. இளைஞர் அணியைச் சேர்ந்தவர் களைக் கத்தியால் குத்தி மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். வன்முறைச் சம்பவம் யார் செய்தாலும் அது குற்றம் தான் என்றாலும் கூட, ஒரு சாராரைச் சொல்லிக் கொண்டிருப்பது சரியில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. டி. கே. பழனிச்சாமி] [1989 பிப்ரவரி 14
(பிற்பகல் 12-30)

திருவொற்றியூர் தொகுதியைப் பொறுத்தவரையில், மிகப் பெரிய பால் பண்ணை இருக்கிறது. அந்தப் பால் பண்ணையில் 1,500 தொழிலாளர்கள் கடந்த கால ஆட்சியினரால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கின்ற திட்டத்தை நமது அமைச்சரவை கொண்டுவரவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, திருவொற்றியூர் நகரத்திலே மத்திய அரசுக்குச் சொந்தமான எம்.எஸ்.எல். நிறுவனத்தின் 1,300 தொழிலாளர்கள் வேலையிழந்து தவிக்கிறார்கள். அவர்களையும் உடனடியாக வேலைக்கு எடுத்துக்கொள்வதற்கான ஒரு திட்டத்தையும் நமது அரசு வெற்றிகரமாக செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருவொற்றியூரைப் பொறுத்தவரையில், மிகப் பெரிய அனல் மின் நிலையம் அங்கே இருக்கிறது. அந்த மின் நிலையத்தில் உள்ள அதிகாரிகளின் கூட்டு சதியால் சில இடங்களிலே தீ விபத்து ஏற்பட்டு, அந்த இடங்களை நமது மாண்புமிகு அமைச்சர் நேரு அவர்களும் பார்வையிட்டார்கள். இதுகுறித்து உடனடியாக விசாரித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்பாகப் பேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள், அருப்புக்கோட்டையிலுள்ள சொசைட்டிகளைப் பற்றி விரிவாகச் சொல்லி, அவைகளில் மிகப் பெரிய ஊழல் நடந்திருக்கிறது என்பதைப் பற்றியும் சொல்லி, அதற்கு விசாரணை தேவை என்றும் சொன்னார்கள். நான் என்னைப் பொறுத்த வரையில் சொல்வேன், அருப்புக்கோட்டையிலுள்ள சொசைட்டிகளிலே நடைபெற்ற அந்த ஊழல்களெல்லாம், விருதுநகரிலே சொத்துக்களாக மாறி இருக்கின்றன என்பதை நான் கண்கூடாகப் பார்த்து இருக்கிறேன். அதற்கும் ஒரு விசாரணைக் கமிஷன் உடனடியாக வைத்து நீதி வழங்கவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படியே வாதங்கள் தொடர்ந்து கொண்டே போனால், அது நீங்கள் எதிர்பார்ப்பதைப்போல அவை சுமூக

மாக நடைபெற உதவாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விசாரணை கேட்டிருக்கிறார். அத்தோடு விடாமல், விருது நகரிலே சொத்தாக மாறியிருக்கிறது என்று சொல்கிறார். அவர் என்ன சொல்கிறார் என்பதைத் தெளிவாகச் சொல்லட்டும். இல்லையென்றால் அது வேறு பொருளிலே வருகிற விதத்திலே இருக்கிறதென்ற காரணத்தினாலே அதை சபைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதேபோன்று நம்முடைய உறுப்பினர்கள் எல்லாத் தரப்பிலிருந்தும் நிகழ்ச்சிகளைச் சொல்லியிருக்கிறார்கள். அவர் ஒன்றும் பெயரைச் சுட்டிச் சொல்லவில்லை என்பதனால் இது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படாது. ஆனாலும் நம்முடைய உறுப்பினர்கள் இனிமேல் பேசுகிறபோது தக்க ஆதாரங்களோடு மட்டும் பேசுவது மிகச் சிறப்பாக இருக்கும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் சட்டமன்றத்தில் சில நாட்களில் சபைக் குறிப்பில் இடம் பெற்றதைவிட நீக்கியது அதிகம். தயவுசெய்து அந்த மரபு இங்கே அடிக்கடி வராமல், கூடியவரை சபைக் குறிப்பிலிருந்து நீக்குவதைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவருக்கு அவைக் குறிப்பிலிருந்து அடிக்கடி நீக்க வேண்டுமென்ற ஆசை ஒன்றும் இல்லை. அப்படி நீக்கப்படத் தேவையில்லாத அளவிற்கு உறுப்பினர்கள் ஆக்கப்பூர்வமான விவாதங்களை வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, திரு. டி. கே. பழனிச்சாமி அவர்களைப் பேசுமாறு அழைக்கிறேன்.

திரு. டி. கே. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, 2 இலட்சத்துக்கும் அதிகமான சத்துணவுத் திட்டப் பணியாளர்கள் இப்போது தற்காலிகப் பணியாளர்களாகவே இருக்கிறார்கள். அவர்கள் பகுதி நேரப் பணியாளர்களாக இருந்தாலும், அவர்கள் நிரந்தர உள்ளாட்சித் துறைப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டு, அவர்களின் பணி நிரந்தர

மாக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஒருவர் ஒரு கருத்தைச் சொன்னார். எப்படி உங்களால் அவர்களை நிரந்தரமாக்க முடியும் என்று கேட்டார்கள். அது முடியும், 60 ரூபாய் சம்பளத்திலே நாதியற்றவர்களாக இருக்கக்கூடிய 2 இலட்சம் பணியாளர்கள்—பெண்கள், ஆண்கள்—அனைவரையும் இந்த அரசு நிரந்தரமாக்கியது என்று சொன்னால், இந்தத் தொழிலாளர்களின் அரசை, தொழிலாளர் வர்க்கமே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. அந்த முறையிலே ஆளுநருடைய அறிக்கையை இதயப்பூர்வமாக பாராட்டி, விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. ஜி. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சார்பிலே என்னைத் தேர்ந்தெடுத்திருக்கிற திருத்துறைப்பூண்டித் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொண்டு, சில கருத்துக்களை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

ஊராட்சிமன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் நகராட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்படும் என்று ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இருந்த அரசு அவற்றின் அதிகாரங்களைப் பறித்து, மக்களுடைய சேவையில் கிராமப்புற நலன்களையெல்லாம் ஊராட்சி அமைப்புகள் முழுமையாக நிறைவேற்ற முடியாதபடி—அவற்றின் கைகளைக் கட்டிப் போட்டதைப்போல—செய்துவிட்டது. அந்த நிலையை மாற்றி இந்த அரசு அவற்றிற்கு அதிக ஆதரவு அளித்து முழு அதிகாரங்களை மீண்டும் வழங்குவோம் என்று கூறியிருப்பது வரவேற்கத் தக்கதாகும். இப்போதும் கூட இந்த அரசு அதிக அதிகாரங்களை மட்டும் வழங்கிவிட்டுவிடக் கூடாது. அதற்கான நிதியாதாரங்களை ஒதுக்கி, கிராமப்புற மக்களுடைய வாழ்க்கையைச் செம்மையாக்க உதவிட வேண்டும். அந்த வகையிலே ஊராட்சி மன்றங்களும், ஒன்றியங்களும், நகராட்சி மன்றங்களும் நல்ல முறையில் செயல்பட உதவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை, கோவை மற்றும் மதுரை மாநகராட்சிகளுக்கு விரைவில் தேர்தல்கள் நடத்தப்படும் என்றும அவைகளை எப்ரல் மாதத்தில் முதல் வாரத்திலேயே நடத்துவோம் என்றும் ஆளுநர்

உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலும் 21 வயது நிரம்பிய வாக்காளர் பட்டியலை வைத்துக் கொண்டே அந்தத் தேர்தல்களை நடத்துவோம் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை மே மாதம் நடத்தினாலும்கூட, 18 வயதான வாக்காளர்களைப் பட்டியலில் சேர்த்து அந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்கள் நீண்டகாலமாகவே நடத்தப்படாமல் இருந்தது. அவைகளுக்கான தேர்தல்களும் நடத்தப்படுமென்று இங்கே ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கவர்னர் ஆட்சிக் காலத்திலேயே கூட்டுறவுத் தேர்தல்கள் நடத்தப்படுமென்று அறிவிக்கப்பட்டு அது பலதடவை ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக அரசாங்கமும், பல்வேறு எதிர்க்கட்சிகளும் பல செலவுகளைச் செய்து, பின்னர் தேர்தல்களை நடத்த முடியாத ஒரு இக்கட்டான நிலைமை ஏற்பட்டது. அதிலேயும் முறைகேடு நடைபெற்றது. ஏற்கெனவே கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களாக இருப்பவர்கள் அந்தத் தேர்தலிலே போட்டியிட்டு உறுப்பினர்களுக்கு நன்மை விளைவிக்கக் கூடிய முறையில் இல்லாமல், தேர்தல் என்று அறிவித்த பிறகு ஒவ்வொரு அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களும் புதிய உறுப்பினர்களைச் சேர்த்து கட்சிக்கு ஆதரவு தேடுவது என்ற முறையில் செயல்பட்டார்கள் இப்போது, அப்படிப்பட்ட இடர்ப்பாடுகள் இல்லாமல் நியாயமான முறையில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சத்துணவுக் கூடங்களில் பணியாற்றும் சத்துணவு மையப் பணியாளர்கள் தற்போது பகுதிநேர ஊழியர்களாக இருப்பவர்களை இனி நிரந்தர ஊழியர்களாக ஆக்க இருப்பதாக ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் அவர்களுக்கு அரசினுடைய அனைத்துச் சலுகைகளும் வழங்கப்படும் என்ற உறுதி ஆளுநர் உரையில் இல்லை. எனவே அரசு அவர்களுக்கு அனைத்து அரசு சலுகைகளையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே, கிராமக் கூட்டுறவு சிறப்பு அங்காடிகளில் பணி புரியும் பல்லாயிரக்கணக்கான ஊழியர்களும் பகுதி நேர ஊழியர்களாகவே தற்போது பணியாற்றி வருகிறார்கள். அவர்களையும் சத்துணவுப் பணியாளர்களை நிரந்தரப் பணியாளர்களாக் ஆக்கியதைப்போலவே நிரந்

தரப் பணியாளர்களாக ஆக்கி, அவர்களுக்கும் அரசின் அனைத்து சலுகைகளும் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் தமிழகத்தில் தென்மேற்குப் பருவ மழை தவறிவிட்டதோடு, வடமேற்குப் பருவ மழையும் போதிய அளவுக்கு இல்லாமல் போய்விட்ட காரணத்தால் குறிப்பாக விவசாயப் பெரு மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதோடு உணவு உற்பத்தியும் பாதிக்கப்பட்டிருக்கிறது. நான் சார்ந்திருக்கிற தஞ்சை மாவட்டம் தொடர்ச்சியாக, காவிரி நீர்ப் பிரச்சினை கடந்த -14 ஆண்டுகளுக்கு மேலாகத் தீர்க்கப்படாததன் காரணமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் பலவிதமான அவதிக்கு உள்ளாகியிருக்கிறார்கள். மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்டத்தைச் சார்ந்தவர்கள். எனவே அங்கே இருக்கிற விவசாயிகளின் துன்ப துயரங்களைப் போக்கிட வழிவகை காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் சாகுபடி செய்வதற்காகத் தங்கள் சொத்து சுகங்களை அழித்து இன்றைக்கு ஓட்டாண்டிகளாக இருக்கிற நிலைமைதான் இருக்கிறது.

(முற்பகல் 12-40)

ஆளுநர் உரையில் காவிரிப் பிரச்சினை குறித்து திருப்திபடத்தக்க வகையில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. கடந்த காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போன்ற கட்சிகள் தொடர்ச்சியாகக் காவிரி நீர்ப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரமான தீர்வு காணப்பட வேண்டும் என்று ரயில் மறியல் போராட்டம், பஸ் மறியல் போராட்டம் போன்ற இயக்கங்களை நடத்தி வந்திருக்கிறோம். உடனடியாக அதற்குத் தீர்வு காணப்படவில்லை என்றால் அந்தப் பிரச்சினையை உடனடியாக ஒரு நடுவர் தீர்ப்புக்கு விட்டு அதன் முடிவை ஒரு குறிப்பிட்ட தேதிக்குள்ளாகப் பெற வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறோம். இன்றைய தினம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பேச்சுவார்த்தை மூலமாகவே இந்தப் பிரச்சினையைத் தீர்த்து விடுவார் என்று சொல்லத் தக்க வகையிலே பத்திரிகையில்

செய்திகள் வருகின்றன. அது எந்த வகையில் சாத்தியம் என்பதை தமிழக முதல்வர் அவர்கள் தெரிவிக்க வேண்டும். அதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண வேண்டும். கடந்த காலங்களில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்த காலத்தில் காவிரி நீர்ப் பிரச்சினை என்பது உருவெடுத்தது அன்றைக்கே அதைத் தீர்த்திருக்க முடியும். அதற்கான சந்தர்ப்பமும், வாய்ப்பும் கிடைத்த நேரத்தில் அது கை நழுவி விட்டது இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய விவசாயிகளின் வாழ்வுக்கு விடிவு காலமாக அமைவதற்கு இந்த அரசு உத்தரவாதம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், மாநிலத்தின் பொருளாதார முன்னேற்றம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லக் கூடிய வகையில் கவர்னர் உரையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசிடமிருந்து தமிழகத்திற்கு நிதி ஆதாரம் பெற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நாங்கள் உறுதுணையாக இருப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதில் நடப்பு ஆண்டுக்கு அறிவிக்கப்பட்டுள்ள 1,457 கோடி ரூபாய் திட்டத்தில் குறைக்கப்பட்டுள்ளதாக கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எந்தெந்தத் திட்டங்களில் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கொஞ்சம் தெளிவாக அமைச்சரவர்கள் சொன்னால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

அடுத்து நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய தொகுதி என்பது தமிழகத்திலே இருக்கக்கூடிய கடைமடைப் பகுதியாகும். அது ஒரு பின் தங்கிய தொகுதி. தமிழகத்தின் கடைக்கோடியில் இருக்கும் அந்தத் தொகுதியில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. இதற்கு முன்பாக இருந்த அரசு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக ராஜாமடத்திலிருந்து, முத்துப்பேட்டை, வேதாரண்யம் திருத்துறைப்பூண்டி பகுதி மக்களுக்கு தண்ணீர் வழங்குவதாக இருந்தது. அந்தத் திட்டம் செயல்படுகிறதா, செயல்படவில்லையா என்பது தெரியவில்லை நாங்கள் இருக்கக்கூடிய அனைத்துப் பகுதிகளிலும் நல்ல குடிநீர் கிடையாது. அனைத்து நீர் ஊற்றுகளும் உப்புத் தண்ணீராக இருப்பதால், அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் பல மைல்களுக்கு அப்பால் சென்று, குடிநீர் கொண்டு

வரக்கூடிய துர்பாக்கியமான நிலைமை இருக்கிறது. அந்தப் பகுதியில் இருக்கக் கூடிய வாக்காளர்களிடம் நாங்கள் சென்று வாக்குகளைக் கேட்கும் போது, அவர்கள் கோரிக்கையாக, குடிப்பதற்குத் தண்ணீர் கிடைக்குமா என்ற அவலக் குரல்தான் எங்கள் காதில் கேட்கிறது. வேறு சௌகரியங்களை அவர்கள் கேட்கவில்லை அரசு காலந்தாழ்த்தாமல் அவர்கள் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க ஆவன செய்ய வேண்டும்.

அடுத்து சாலை வசதிகளைப் பொறுத்தவரையில், அவை அடிக்கடி மழை வெள்ளத்தால் பாதிக்கப்படுவதாக இருக்கிறது. இயற்கையின் சீற்றத்தால் அடிக்கடி பாதிக்கப்படும் பகுதியாக அந்தப் பகுதி இருக்கிறது. காவிரித் தண்ணீர் வர வேண்டு மென்றால், அது காலத்தோடு வருவதில்லை. அதேபோன்று மழை வெள்ளம் என்றால் அது ஆரம்பத்தில் வந்துவிட்டு, பின்னால் அந்தப் பகுதி மக்களை அவல நிலைக்கு ஆளாக்கு கிறது. அந்தப் பகுதி மக்கள் என்றென்றும் நவம்பர் மாதத்தில் எப்படி வாழ்க்கை நடத்துவது என்ற துர்பாக்கியமான நிலையில் இருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்திலாவது அந்தக் கிராமச் சாலைகளை செப்பனிடுவதற்கு இந்த அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, மின்சார வசதியைப் பொறுத்தவரையில் அங்கே மின் கம்பங்கள் நடப்பட்டிருக்கின்றனவே தவிர, விளக்குகள் எரியவில்லை. ஊராட்சி மன்றத் தலைவர்கள் பலர் அது பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறார்கள். அடுத்து, மருத்துவ மனை வசதி போதியதாக இல்லை. திருத்துறைப்பூண்டியைப் பொறுத்தவரையில் நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள மருத்துவமனை இன்னும் விரிவுபடுத்தப் படாமல் உள்ளது. அங்கே சுகாதார வசதிகள் போதிய அளவுக்கு இல்லை. 96 ஊராட்சி மன்றங்கள் இருக்கக்கூடிய அந்தப் பகுதியில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அந்த மருத்துவ மனையில் வைத்தியம் பார்த்துக்கொள்ள வருகிறார்கள். அங்கே ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்கள் வரும்போது, அங்கே இருக்கக்கூடிய மருத்துவர்கள் அவர்களை தஞ்சைக்கும், நாகைக்கும் அனுப்ப வேண்டுமென்று சொல்லி, அவர்களை அவசரமாக அனுப்பிவிடுகிறார்கள். கையிலே காசு இல்லாத விவசாயிகள்,

நோயாளிகளைக் கொண்டு போக முடியாத நிலையில், உயிர்ச் சேதம் ஏற்படும் அபாயம் இருக்கிறது. எனவே வசதியான பொது இடத்திலே புதிய மருத்துவமனையைக் கட்டி, புதிய மருத்துவர்களைப் போட்டு, அனைத்து வசதிகளையும் செய்ய இந்த ஆட்சி ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பல்வேறு வழக்குகள் வாபஸ் பெறப்பட்டதாக நான் பத்திரிகையில் செய்தி பார்த்தேன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பெயரில் இருந்த வழக்குகள் வாபஸ் செய்யப்பட்டதாக பத்திரிகையில் செய்தி பார்த்தேன். தலைமைச் செயலக ஊழியர்கள் மீதிருந்த வழக்குகள் வாபஸ் பெறப்பட்டதாக பத்திரிகையில் பார்த்தேன். திராவிட முன்னேற்றக் கழகம், கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மறியல் நடத்திய காலங்களில் போடப்பட்டிருக்கின்ற வழக்குகள் இருக்கின்றன. அது தொடர்பாக பல்வேறு கட்சிகள் பங்கு கொண்டு இன்னும் கும்பகோணம், திருத்துறைப்பூண்டி பகுதிகளிலேயிருந்து அங்கே கோர்ட்டுக்குச் சென்றுகொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய கேஸ்களும், வாபஸ் பெறப்படுமா, இப்படிப்பட்ட வழக்குகளையும் வாபஸ் வாங்குவதற்கு இந்த அரசு தயாராக இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மீனவர் பிரச்சினை பற்றி சொல்கிறேன். எங்கள் தொகுதியிலே முத்துப்பேட்டை என்ற பகுதியில் உள்ள மீனவர்கள், உள்நாட்டு மீனவர்கள் வெகுதூரம் சென்று மீன் பிடிக்கக் கூடிய நிலையில் இருக்கிறார்கள். அதிலே தொலை தூரம் சென்று மீன் பிடிக்கக்கூடிய மீனவர்கள் 10 ஆயிரம் பேர்கள் இருக்கின்றார்கள். அந்தப் பகுதியிலே உள்ள மீனவர்கள் அனைவருமே மீன் பிடிக்கின்ற தொழிலில்தான் இருக்கின்றார்கள். வேறு எந்தத் தொழிலும் தெரியாதவர்கள். உள்நாட்டு மீனவர்கள் உள்ள அந்தப் பகுதியிலே செல்வாக்குப் படைத்தவர்கள். மீனவர்கள் கூட்டுறவுச் சங்கம் மூலமாக ஏலம் எடுத்துக்கொண்டு, சிறிய வலைகள் மூலமாகவும் படகுகள் மூலமாகவும் மீன் பிடிப்பவர்களைத் தடுப்பதும் துன்புறுத்துவதும் ஒரு அராஜகமாக நடந்து கொண்டிருக்கிறது. அந்தத் தொலை தூரம் போகக்கூடிய மீனவர்களுக்கு, இந்த உள்நாட்டு மீனவர்களுக்கு மட்டும் குத்தகை கொடுப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதுபோன்று குத்தகை விவசாயிகள். குத்தகை விவசாயிகளைப் பொறுத்த அளவில், பல்வேறு குத்தகை நிலங்களிலிருந்து பலர் பெருத்த அளவில் வெளியேற்றப்படுகின்றார்கள். அப்படிப் பட்ட அபாயகரமான நிலைமைகளில் இருக்கின்றார்கள். அங்கே இருக்கக்கூடிய குத்தகை அலுவலகத்தில் நாம் மனு போட்டோம் என்று சொன்னால் பதிவு செய்யப்படுவதில்லை. இதுபோன்று பல ஆண்டுக்காலமாக குத்தகை விவசாயிகள் பதிவு செய்யப்படாமல் இருக்கின்றார்கள். அதற்கு தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. எஸ். எஸ். ராமசுப்பு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் உரை மீதான விவாதத்தில் என்னுடைய காங்கிரஸ் கட்சியின் சார்பாக சில கருத்துக்களை எடுத்துக்கூறுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதலாவதாக ஆலங்குளம் தொகுதியிலிருந்து என்னை தேர்ந்தெடுத்து அனுப்பிய எனது வாக்காளப் பெருமக்களுக்கும், எனது தொகுதி மக்களுக்கும் நான் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு அந்த வாய்ப்பை அளித்த திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்கும், தலைவர் மூப்பனார் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய விவாதத்தை நான் துவங்குகிறேன்.

இந்த ஆளுநர் அவர்களுடைய உரையிலே வன்முறை இல்லாத ஒரு தேர்தல் நடந்தது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நான் செத்துப் பிழைத்தவன் என்றுதான் சொல்லவேண்டும். இந்தச் சபைக்கு நான் வந்திருக்கிறேன் என்றால் நான் எப்படி வந்தேன். இறுதியாக சொல்லப்பட்ட செய்தி என்னுடைய செய்தி என்று உங்களுக்கெல்லாம் தெரியும். அங்கே என்ன நடந்தது என்று உங்களுக்கெல்லாம் தெரியும். திராவிட முன்னேற்றக் கழக கட்சிக்காரர்கள் சிலர். சிலர் என்றுதான் சொல்ல வேண்டும். நான் எல்லோரையும் குறை சொல்ல விரும்பவில்லை. சிலர் அந்தக் கட்சிக்கு களங்கம் விளைவித்தார்கள் என்றுதான் நான் சொல்லவேண்டும். என்னுடைய தொகுதியிலே முடிவு அறிவிக்கும் முன்னாலே அங்கே ஒரு செய்தியை வெளியிட்டிருக்கின்றார்கள் திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள். நாங்கள்தான் ஜெயித்தவர்கள் என்று பத்திரிகையிலேகூட பிரகடனப்படுத்தி விட்டார்

கள். ஆனால் அது உண்மை நிலைமை அல்ல. ஆர். டி. ஓ. அவர்கள் declare பண்ணுவதற்கு முன்னாலே இப்படி ஒரு செய்தியை சொல்வதற்கு சிலர் அங்கே இருந்தார்கள். அதை நான் மதிப்பிற்குரிய முதல்வர் அவர்களுக்கு சொல்லவேண்டும். அவர்கள் தேர்தல் முடிவை களங்கப்படுத்திவிட்டார்கள் என்று சொல்லவேண்டும் (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: அவர் பேச்சு கன்னிப் பேச்சு. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதிப்பிற்குரிய உறுப்பினர் பெருமக்களுக்கு ஓர் அறிவிப்பு. கன்னிப் பேச்சில் மற்ற உறுப்பினர்கள் குறுக்கிடக்கூடாது என்பதுதான் அவை மரபே தவிர, முன்வரிசையில் இருப்பவர்கள் குறுக்கிடலாம் என்றுதான் எதிர்க் கட்சியினருக்கும் வாய்ப்பு அளித்திருக்கிறேன் என்பதைக் கூறி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது பதில் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் வாக்குகள் எண்ணுகின்ற நேரத்திலே ஒரு வேட்பாளர் வெற்றி பெறுகிற நேரத்திலே இன்னொருவர் வெற்றி பெற்றார் என்று பல தொகுதிகளிலே பல இடங்களிலே எண்ணுகின்ற நேரத்திலேயே அறிவிக்கப்பட்டது. அதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய குற்றச்சாட்டு என்றால் இப்படிப்பட்ட காரியங்கள் பல இடங்களிலே நடைபெற்றிருக் கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் என்பது மட்டுமல்ல. காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் கூட என்னுடைய தொகுதியைப் பொறுத்த அளவிலே அப்படிப்பட்ட செய்தியைப் பரப்பியிருக்கின்றார்கள் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் அவர்களைத் தொடர்ந்து பேச அழைக்கின்றேன்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன செய்தியை நான் கேட்டுக்கொள்கிறேன். ஆனால் அதே சமயத்தில் நான் கூடுதலாக வெளியிட வேண்டுமென்று தாங்கள் நினைத்தால் நான் வெளியிடவும் தயாராக இருக்கிறேன். இந்த

இடத்தில் வெளியிடுகிறேன். அங்கே என்ன நடந்தது என்றுகூட நான் விளக்கமாக சொல்லவேண்டுமென்று சொன்னால் நான் அதற்கு தயாராக இருக்கிறேன்.

(பிற்பகல் 12-50)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் கன்னி பேச்சு நிகழ்த்துகையில் ஆளுநர் உரையை நன்கு படித்துவிட்டுத் திறனாய்வு செய்து பேசினால், காலப்போக்கில் மிகச் சிறந்த நல்ல பேச்சாளராகவும், ஆற்றல் பெற்றவராகவும் மதிக்கப்படுவார்கள். அருள்கூர்ந்து ஆளுநர் உரை மீது மட்டும் பேசுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : அங்கே நடந்த சம்பவம் இனி எப்போதுமே தமிழகத்தில் ஒருபோதும் நடக்கக்கூடாது என்று நான் சொல்லிக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், நாங்கள் அன்று இருந்த நிலைமையைப் பார்க்கும்போது—அகிம்சை வழியில் வந்த காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள்—மிகவும் அடக்கமாகவும் ஒடுக்கமாகவும் சென்று விட்டோம். இல்லையென்று சொன்னால் அச்சம்பவம் ஒரு விதமாக நடந்திருக்கும். ஆகவே பேசாமல் சென்று விட்டோம். என்ன சம்பவம் என்று சொல்ல வேண்டுமென்று எல்லோரும் விரும்புகிறார்கள். அதை நான் கண்டிப்பாக சொல்ல வேண்டும்.

அன்று முதல் நாள் நடந்த சம்பவத்தைச் சொல்லுகிறேன். அன்று 146 இடங்களிலே திராவிட முன்னேற்றக் கழகம் முன்னணியில் இருக்கிறது என்று 11 மணியளவில் செய்திகள் வர ஆரம்பித்தன. செய்திகள் வர ஆரம்பித்தவுடனே உள்ளே பல ஆட்கள் வந்து ஒவ்வொரு டேபிளிலும் உள்ள உறுப்பினர்களிடையே குழப்பத்தை விளைவிக்க ஆரம்பித்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம், ஓட்டு எண்ணும்போது இனிமேல் ஜெயிக்கும் என்று அங்கே இருந்தவர்களிடையே குழப்பத்தை ஆரம்பித்து விட்டார்கள். இங்கே ஏதேதோ நடந்துவிட்டது என்று சொன்னார்கள். ஆனால் கடைசியாக 11 மணி, 12 மணியளவில் வாக்குகள் குறைந்தும், கூடியும் இருக்கும் நிலையில் எங்கள் கட்சி ஜெயித்து விட்டது என்று சொல்லி வெளியேறி விட்டார்கள். கடைசியாக, 482 ஓட்டு வித்தியாசத்தில் நாங்கள் ஜெயித்திருக்கிறோம். டேபிளேஷன் ஒர்க் முடிவதற்குள்ளாகவே மாலை

போட்டு, அந்த தி.மு.க. வேட்பாளரை உள்ளே அழைத்து வந்து விட்டார்கள். அது எல்லாம் தவறு என்று நான் சொல்லிக்கொள்கிறேன். இனிமேல் அப்படிப்பட்ட நிகழ்ச்சி நடக்கக் கூடாது. மேலும் வன்முறையும் அந்தச் சமயத்தில் நடந்திருக்கிறது. அங்குள்ள அதிகாரிகள் தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்றுகூட நான் கேள்விப்பட்டேன். மறுநாள் மீண்டும் அந்த அதிகாரிகளை மறு எண்ணிக்கை என்று சொல்லி, என்னை அழைத்தார்கள். வெரிபிகேஷன் என்று சொல்லி வாக்குகளை மறுபடியும் எண்ணினார்கள். ஆனால் வேறு ஒன்றும் நடக்கவில்லை. இறைவன் அருளால் நான் வெற்றி பெற்றேன். எவ்வளவோ வன்முறைகளுக்கிடையே நான் இங்கே வந்திருக்கிறேன். இறைவன் இல்லையென்றால் ஒன்றும் நடக்காது.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய பேச்சு கன்னிப் பேச்சு என்கிற காரணத்தால் நான் குறுக்கிடாமல் இருந்தேன். ஒவ்வொரு தொகுதியிலும் வாக்குகள் எப்படி எண்ணப்படுகின்றன என்பதையெல்லாம் பேசிக் கொண்டிருந்தால் அவையின் நேரம் வீணாகிறது. ஆனால் அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல ரீ கவுண்டிங் என்பது, ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம் பல இடங்களில் வெற்றி பெற்றுவிட்ட காரணத்தால் கொடுக்கப்படுவது அல்ல. முன்பு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பல இடங்களில் வெற்றி பெற்ற நேரத்திலே கூட அதிகாரிகள் ரீ கவுண்ட் கொடுப்பதற்கான ஆதாரங்கள் இருக்குமானால், கொடுப்பது வழக்கம். அதையே ஒரு பெரிய குறையாகச் சொல்லி, அவையின் நேரத்தை வீணாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : தலைவர் அவர்களே,

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு"

என்பது வள்ளுவர் வாக்கு. நம்முடைய தமிழகத்திலே மட்டுமல்லாமல், ஒட்டு மொத்தத்தில் பார்க்கும்போது பசி தாண்டவமாடுகிறது; வறுமை தாண்டவமாடுகிறது: மழையின்மை இருக்கிறது. இன்னும் இதுபோல் எத்தனையோ குறைபாடுகள் இருக்கின்றன.

ஆலங்குளம் தொகுதியைப் பொறுத்தவரையில் நான் சிறுவனாக இருக்கும்போதிருந்தே பார்த்துக் கொண்டிருக்கிறேன். அங்கே ஒரு தொழிற்சாலை கிடையாது ; முன்னேற்றப் பாதைக்கு வழி வகுத்துக் கொடுக்கப்படவில்லை, சரியான, சுகாதாரமான ஆஸ்பத்திரிகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை, ரோடுகள் எல்லாம் அங்கே பராமரிக்கப்படவில்லை. இதையெல்லாம் எடுத்துச் சொன்னால்கூட அங்கே ஃபன்ட்ஸ் இல்லையென்று சொல்வார்கள். ஃபன்ட்ஸ்க்கு வழிவகை செய்து, ஆலங்குளம் தொகுதி மக்கள் சுபிட்சம் அடைய வழிவகை செய்ய வேண்டும். தண்ணீர் பிரச்னை பெரும் பிரச்னையாக இருக்கிறது. நான் சென்று பார்க்கும் போது, பெண்கள் கண்ணீர் வடிக்கும் நிலைதான் உருவாகி இருக்கிறது. தாம்பிரபரணி ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் திட்டத்தை நிறைவேற்றி, அங்குள்ள எல்லா கிராம மக்களும் பயன்படுமாறு வழிவகை செய்து கொடுக்க வேண்டுமென்று உரிய அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். வீராணத்திற்கு உயர் நிலைப்பள்ளியும், கீழப்பாவூருக்கு தண்ணீர் வசதியும், மானூருக்கு குளம் வெட்டியும் கொடுக்க கேட்டுக்கொள்கிறேன். உணவைப் பொறுத்தவரையில் மத்திய சர்க்கார் 80,000 டன் கொடுக்கிறார்கள் என்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தமிழகம், Central Pool -க்கு எந்தவிதமான அரிசியும் கொடுக்காமல் இருந்தபொழுது, 80,000 டன் கொடுக்கிறார்கள் என்பது மத்திய அரசின் கண்ணியமான போக்கு அதை வரவேற்கிறோம். அந்த 80,000 டன் அரிசியை, நன்றாக, ஒழுங்காக, விநியோகிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொருளாதார முன்னேற்றத்திற்குத் தொழில் வளம் முக்கியம் என்று சொல்லியிருக்கிறார்கள். உண்மைதான். பொருளாதார முன்னேற்றம் ஏற்பட, விவசாயமும் தொழிற்சாலைகளும் முன்னேற வேண்டும். அதற்கென பற்பல திட்டங்கள் வகுத்து, தொழிற்சாலைகள் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆலங்குளம் போன்ற பல்வேறு பகுதிகள் தொழிற்சாலைகள் இல்லாமல் இருக்கின்றன. அவ்வாறு தொழிற்சாலைகள் இல்லாத பகுதிகளில், தொழிற்சாலை அமைத்துக் கொடுத்து, வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து, மக்களுக்கு நன்மை செய்து கொடுக்க வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கல்வியைப் பற்றி இந்த உரையிலே எதுவுமே சொல்லப் படவில்லை. கல்வியின் முன்னேற்றத்திற்காகவும், தமிழ் வளர்ச் சிக்காகவும், தமிழ் வளர்ச்சி பற்றி பேசும் அரசு, ஆளுநர் உரையில் எதுவும் சொல்லவில்லை. தமிழ் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு பற்றி எதுவும் சொல்லப்படவில்லை. கல்வியைப் பற்றி நான் சொல்லும்போது, கல்வியிலே சில குறைபாடுகள் நமது தமிழகத்திலே இருந்து கொண்டிருக்கின்றன. அதுபற்றி, மேதகு ஆளுநர் அவர்கள் திருச்சியிலே பேசும்பொழுது, சொல்லியிருக் கின்றார்கள். நமது தமிழகத்திலே கல்வியினுடைய தேர்வு சத வீதம் குறைந்து விட்டது, என்று. உண்மைதான். ஐ.ஏ.எஸ். தேர்விலே தமிழகம்தான் முதலாவதாக இருந்தது ஒரு காலத்தில். இப்பொழுது, ஐ.ஏ.எஸ். தேர்விலே மிகத் தாழ்ந்த நிலையிலே இருக்கிறார்கள். ஐ.ஏ.எஸ். தேர்வில் வடநாட்டுக்காரர்கள் முன்னணியில் இருக்கிறார்கள். இதற்கெல்லாம், காரணம், நமது கல்விமுறைதான் என்று சொல்வேன். ஏனென்றால், நமது தலைமைச் செயலாளர் அவர்கள் தமிழ் தெரிந்தவராக இருந்தால் தான் இங்கே பேரவைத் தலைவர் கூட மொழி பெயர்த்துக் கொடுக்க வசதியாக இருக்கும். நமது செயலாளராகக் கூட, இன்னும் சிறிது காலம் கழித்தால் தமிழ் தெரியாதவர் வந்து விடு வாரோ, அவருக்கும் மொழி பெயர்த்துக் கொடுக்க வேண்டுமோ என்ற நிலையில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தமிழகத்தில் குறைந்து கொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் நமது கல்வியிலுள்ள குறைபாடுகள், கல்வித் திட்டத்திலே உள்ள சில குறைபாடுகள்.

இன்று சென்னைப் பல்கலைக் கழகத்திலே சில குறைபாடுகள் இருந்து கொண்டிருக்கின்றன. சிண்டிகேட் என்ற ஒன்று இருக் கிறது. அரசாங்கத்தின் பிரதிநிதிகள் அதிலே இருக்கிறார்கள். பல்கலைக் கழகத்திலே தகுதி வாய்ந்தவர்களுக்கு இடம் அளிக்கா மல் சில நேரங்களில் சில ஊழல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஒரு டிபார்ட்மெண்டுக்குப் பொருத்தமில்லாதவரை அங்கே நிய மித்திருக்கிறார்கள். அதற்கு உதாரணமாக அங்கே Department of Legal Studies அந்த Department of Legal Studies 'Industrial Law and Constitutional Law' படித்தவரை நியமிப்பதற்குப் பதிலாக, 'Contracts Law' படித்தவரை அங்கே நியமனம் செய்திருக்கிறார்கள். அவ்வாறு Contract Law படித்தவரை நியமனம் செய்தால், அந்த

Industrial Law and Constitutional Law பொருத்தமாக இருக்குமா என்பதைக் கவனித்து, தேவையான சீர்திருத்தத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் ரிட்டையர் ஆக்கப் படாமல், அவர்கள் மறுபடியும் Reappointment செய்யப்படு கிறார்கள். அவ்வாறு Reappointment செய்யப்பட்டால், பின் வருபவர்களுக்கு வாய்ப்பில்லாமல் போகும். அந்த மாதிரி ஊழல் கள் நடந்து கொண்டிருக்கின்றன.

மேலும் நமது மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்காக நாம் பல்வேறு சலுகைகளை வழங்கிக் கொண்டிருக்கிறோம். HCuse Surgeon ஆக இருக்கும்போது stipend கொடுக்கிறோம் ஆனால் வெளிநாடு சென்று படித்து விட்டு இங்கு House Surgeon ஆக இருப்பவர்களுக்கு Stipend கொடுப்பதில்லை. அதைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (15—2—1989) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-00 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்—எதுவுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள். ..

1. 1989 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11 ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் ஆற்றிய உரை, (தமிழ், ஆங்கிலம்).

2. தமிழ்நாடு ஒழுக்கக் கண்காணிப்பு ஆணைக் குழுவின் 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் 1986 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி முடியவுள்ள கால அளவிற்கான இருபதாவது ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

அந்தப் பகுதியிலே நல்லபல தொழில் வளங்களை ஏற்படுத்த புதிய திட்டங்களை அரசு உருவாக்க ஆணை பிறப்பிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் சாலைகள் எல்லாம் மேடு பள்ள மாகக் காட்சியளிக்கின்றன. நீண்டகாலமாக அந்தச் சாலைகள் செப்பனிடப்படவில்லை. தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக அங்கே சாலைகள் சில போடப்பட்டன. ஆனால் அந்தத் திட்டம் அங்கே சரியாக நடக்கவில்லை. அங்கே இருக்கிற தலைவர்கள் தங்களைத் தன்னிறைவு செய்து கொண்டார்களே தவிர மற்ற திட்டங்கள் சரியாக நடைபெறவில்லை. ஆகவே, அந்தச் சாலை களைச் சீரமைத்து, நல்ல சாலைகளாக அமைத்து, புதிய பேருந்து வழித் தடங்களை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

சாராயக் கடைகளைத் திறப்பதில்லை என்று இந்த அரசு முடிவு செய்திருப்பதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினா அருள்கூர்ந்து, தன்னிப் பேச்சில் குறுக்கிட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

4. ஒழுங்குப் பிரச்சினை

பேரவை மாடத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அமர்ந்திருப்பது குறித்து.

*திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறுக்கிட விரும்பவில்லை. ஒரு ஒழுங்குப் பிரச்சினையை மட்டும் எழுப்ப விரும்புகிறேன். இந்த மாமன்றத்திலே நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் வந்து அமர்ந் திருக்கிறார். சட்டமன்ற உறுப்பினர்கள் அமரக்கூடிய அந்த இடத்தில் வந்து மற்றவர் அமருவது கிடையாது. தற்போது அமர்ந்திருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர் எந்த விதிமுறையின் கீழ் இங்கே அமர்ந்திருக்கிறார் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் ஒரு இதழின் பிரதி நிதியாக வந்து அமர்ந்திருக்கிறாரே தவிர இந்தச் சட்டமன்ற நடவடிக்கைகளில் பங்கு கொள்வதற்காக வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.